
# வழிபாட்டு மலர்




கருணை காட்டுக்கந்த முருகா வழியெங்கும் துணை நீயே



# வழிபாட்டு மலர்



# இறை வணக்கம்



"மௌனம் மௌனமாகி
மௌனத்தையே வெளிப்படுத்தும்"

# முன்னுரை

தெய்வீகம் முழுமையாக அனைத்தையும் மலர்விக்கின்றது. கனிய வைக்கின்றது. இதனை நாம் உணர்ந்து, தெளிந்து, அறிந்து கொள்வோம்.

எல்லா ஜீவராசிகளும் மலர்களையும், தேனையும், கனிகளையும் பெற்று ஆனந்தம் அடைகின்றது.

இதனை நித்திய வஸ்துவான ஆத்மா கண்டு கொள்ளும்.

அருளாளர்கள் அருளிய தெய்வீகப் பாசுரங்கள் தெய்வீகத்தை வெளிப்படுத்துகின்றது.

அருட்பாக்களை வழிபாட்டின் போது பாடி, தெய்வகடாட்சம் பெற்று எமது வாழ்க்கையை நாம் வளப்படுத்துவோம். மானிடத்தை முழுமையாக மலர்விப்போம்.

இயற்கையும், பிரபஞ்சமும் எமது "யாத்திரைக்கு" உறுதுணையாகட்டும்.

'மானிடம் இயற்கையின், பிரபஞ்சத்தின் அதி உன்னத, ஆனந்தமான வெளிப்பாடாகும்.'

-மௌனாசிரம்-

# பொருளடக்கம்


விநாயகர் துதி

விநாயகர் அகவல்........................................................ 1-3
விநாயகர் நாமாவளி................................................... 4-5
பிள்ளையார் கதை ..................................................... 6-28

முருகன் துதி

கந்த சஷ்டி கவசங்கள்
முதலாவது கவசம் - திருப்பரங்குன்றம் ............. 29-31
இரண்டாவது கவசம்- திருச்செந்தூர்.................... 32-38
மூன்றாவது கவசம் - பழனிமலை.........................39-43
நான்காவது கவசம் - சுவாமி மலை..................... 44-46
ஐந்தாவது கவசம் - திருத்தணிகை .................... 47-51
ஆறாவது கவசம் - பழமுதிர்ச்சோலை............... 52-54

முருக நாமாவளி.................................................. 55-57
திருப்புகழ்............................................................. 58-63

விஷ்ணு துதி.....................................................................64-65

சக்தி துதி

அபிராமி அந்தாதி................................................... 66-91
கௌரி காப்பு.......................................................... 92-94
சக்தி கவசம்........................................................... 95-96

சிவ துதி

முதலாம் திருமுறை............................................. 97-100
இரண்டாம் திருமுறை.......................................... 101-104
மூன்றாம் திருமுறை............................................105-108

நான்காம் திருமுறை........................................ 109-112
ஐந்தாம் திருமுறை........................................113-115
ஆறாம் திருமுறை........................................116-120
ஏழாம் திருமுறை........................................121-123

எட்டாம் திருமுறை
சிவபுராணம்........................................124-127
திருவெம்பாவை........................................128-133
திருப்பள்ளியெழுச்சி........................................134-136
திருப்பொற்சுண்ணம்........................................137-142
ஏனைய பாடல்கள்........................................143-146

ஒன்பதாம் திருமுறை........................................147-151
பத்தாம் திருமுறை- திருமந்திரம் ........................................152-154
பதினோராம் திருமுறை........................................155-158
பன்னிரண்டாம் திருமுறை........................................159-161

ஆஞ்சநேயர் துதி........................................162-165

மங்களம்........................................166

முன்பக்க
அட்டைப் படம் : கருணையில் மைந்தன் வெளிமுதல்
கயிலையில் தந்தையின் ஒளிவரை.

முன்பக்க அட்டையின்
உட்பக்கம் : திருக்கயிலாயக் காட்சி.

# திருமுறைகளும் அதன் பண்களும்

1ம் திருமுறையிலுள்ள
பண்கள்

– நட்டபாடை *(பலவிதமான சந்தங்களையும் நடைபேதங்களையும் உடையது.)*

– தக்கராகம் *(பலவிதமான சந்தங்களையும் நடைபேதங்களையும் உடையது.)*

– பழம்தக்கராகம்
*(பலவிதமான சந்தங்களையும் நடைபேதங்களையும் உடையது.)*

– தக்கேசி *(பலவிதமான சந்தங்களையும் நடைபேதங்களையும் உடையது.)*

– குறிஞ்சி *(பலவிதமான சந்தங்களையும் நடைபேதங்களையும் உடையது.)*

– வியாழக்குறிஞ்சி
*(பலவிதமான சந்தங்களையும் நடைபேதங்களையும் உடையது.)*

– மேகராகக் குறிஞ்சி
*(பலவிதமான சந்தங்களையும் நடைபேதங்களையும் உடையது.)*

– யாழ்முரி

2ம் திருமுறையிலுள்ள
பண்கள்

– இந்தளம் *(பலவிதமான சந்தங்களையும் நடைபேதங்களையும் உடையது.)*

– சீகாமரம் *(பலவிதமான சந்தங்களையும் நடைபேதங்களையும் உடையது.)*

– காந்தாரம் *(பலவிதமான சந்தங்களையும் நடைபேதங்களையும் உடையது.)*

– பியந்தைக் காந்தாரம்
*(பலவிதமான சந்தங்களையும் நடைபேதங்களையும் உடையது.)*

– நட்டராகம் *(பலவிதமான சந்தங்களையும் நடைபேதங்களையும் உடையது.)*

– செவ்வழி *(பலவிதமான சந்தங்களையும் நடைபேதங்களையும் உடையது.)*

3ம் திருமுறையிலுள்ள
பண்கள் – காந்தரபஞ்சமம்
(பலவிதமான சந்தங்களையும் நடைபேதங்களையும் உடையது.)
– கொல்லி
பலவிதமான சந்தங்களையும் நடைபேதங்களையும் உடையது.)
– கொல்லிக்கௌவாணம்
பலவிதமான சந்தங்களையும் நடைபேதங்களையும் உடையது.)
– கௌசிகம் (பலவிதமான சந்தங்களையும் நடைபேதங்களையும் உடையது.)
– பஞ்சமம் (பலவிதமான சந்தங்களையும் நடைபேதங்களையும் உடையது.)
– சாதாரி (பலவிதமான சந்தங்களையும் நடைபேதங்களையும் உடையது.)
– பழம்பஞ்சுரம்
(பலவிதமான சந்தங்களையும் நடைபேதங்களையும் உடையது.)
– புறநீர்மை (பலவிதமான சந்தங்களையும் நடைபேதங்களையும் உடையது.)
– அந்தாலிக்குறிஞ்சி
(பலவிதமான சந்தங்களையும் நடைபேதங்களையும் உடையது.)

4ம் திருமுறையிலுள்ள
பண்கள் – கொல்லி (பலவிதமான சந்தங்களையும் நடைபேதங்களையும் உடையது.)
– காந்தாரம்(பலவிதமான சந்தங்களையும் நடைபேதங்களையும் உடையது.)
– பியந்தைக்காந்தாரம் (பலவிதமான சந்தங்களையும்
நடைபேதங்களையும் உடையது.)
– காந்தார பஞ்சமம்
(பலவிதமான சந்தங்களையும் நடைபேதங்களையும் உடையது.)
– பழம்தக்கராகம்
(பலவிதமான சந்தங்களையும் நடைபேதங்களையும் உடையது.)
– பழம் பஞ்சுரம்
(பலவிதமான சந்தங்களையும் நடைபேதங்களையும் உடையது.)
– இந்தளம் (பலவிதமான சந்தங்களையும் நடைபேதங்களையும் உடையது.)
– சீகாமரம் (பலவிதமான சந்தங்களையும் நடைபேதங்களையும் உடையது.)
– குறிஞ்சி (பலவிதமான சந்தங்களையும் நடைபேதங்களையும் உடையது.)
– திருநீரிசை (பலவிதமான சந்தங்களையும் நடைபேதங்களையும் உடையது.)
– திருவிருத்தம்
(பலவிதமான சந்தங்களையும் நடைபேதங்களையும் உடையது.)

5ம் திருமுறையிலுள்ள பண்கள்
குறுந்தொகை – திருக்குறுந்தொகை
– தனித்திருக்குறுந்தொகை

| | |
|---|---|
| 6ம் திருமுறையிலுள்ள பண்கள் | – திருத்தாண்டகம் |
| 7ம் திருமுறையிலுள்ள பண்கள் | – இந்தளம் |
| | – தக்கராகம் |
| | – நட்டராகம் |
| | – கொல்லி |
| | – கொல்லிக்கௌவானம் |
| | – பழம்பஞ்சுரம் |
| | – தக்கேசி |
| | – காந்தாரம் |
| | – காந்தாரபஞ்சமம் |
| | – நட்டபாடை |
| | – புறநீர்மை |
| | – சீகாமரம் |
| | – குறிஞ்சி |
| | – கௌசிகம் |
| | – செந்துருத்தி |
| | – பஞ்சமம் |
| 8ம் திருமுறையிலுள்ள பண்கள் | |
| திருவாசகப் பண் | – மோகனம் |
| திருக்கோவைப் பண் | – சங்கராபரணம் |
| 9ம் திருமுறையிலுள்ள பண்கள் | |
| திருவிசைப்பாப் பண் | – நட்டராகம் |
| | – சாதாரி |
| | – வியாழக்குறிஞ்சி |
| | – சக்கரவாகம் |
| திருப்பல்லாண்டுப் பண் | – ஆனந்தபைரவி |
| 10ம் திருமுறையிலுள்ள பண்கள் | |
| திருமந்திரப்பண் | – சாமவேதப்பண் |
| 11ம் திருமுறையிலுள்ள பண்கள் | – நட்டபாடை *(சில)* |
| | – இந்தளம் *(சில)* |
| | – பழம்பஞ்சுரம் *(சில)* |
| | – எந்தராகத்திலும் பாடலாம் *(மிகுதி)* |
| 12ம் திருமுறையிலுள்ள பண்கள் | |
| புராணப் பண் | – மத்தியமாவதி |

# சிறப்பு குறிப்பு

பன்னிரு திருமுறைகள் இறைவணக்கத்திற்காக ஒழுங்குபடுத்தப்பட்ட இசைப்பாசுரங்கள் ஆவனவாம். இவ்வாறு ஒழுங்குபடுத்தப்பட்ட பண்களில் பாடி இறைவனை வழிபடுவதால் நம் முன்னோரின் வாழ்த்துக்களையும், ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொள்வோம்.

ஆனால் தற்காலத்தில் இவற்றைக் குறுக்கி பஞ்சபுராணம் பாடுதல் எனும் வழக்கம் எம் உள்ளே புகுத்தப்பட்டுள்ளது. அவையாவன, தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா திருப்பல்லாண்டு, திருப்புராணம் என்பனவாம். இங்கு, தேவாரம் சம்பந்தர் அருளிய 1ம் 3ம் திருமுறைகளும், அப்பர் அருளிய 4ம் 6ம் திருமுறைகளும், சுந்தரர்அருளிய 7ம் திருமுறையும் எனக்கொள்ளப்படும், திருவாசகம் 8ம் திருமுறையும், திருவிசைப்பா திருப்பல்லாண்டு 9ம் திருமுறையும், திருப்புராணம் 12ம் திருமுறையும் ஆகும்.

பன்னிரு திருமுறைகளும் வரலாற்றின் அடிப்படையிலும், மொழியியல் அடிப்படையிலும், பண்களின் அடிப்படையிலும் மிகவும் துல்லியமாக தொகுக்கப்பட்டுள்ளன. நாம் முன்வைத்திருப்பது பண்களின் அடிப்படையே.

| | பண்கள் | | இராகம் |
|---|---|---|---|
| 1.) | நட்டபாடை | – | கம்பீர நாட்டை |
| 2) | தக்க ராகம் | – | காம்போதி |
| 3) | பழந்தக்கராகம் | – | சுத்தசாவேரி / ஆரபி |
| 4) | தக்கேசி | – | காம்போதி |
| 5) | குறிஞ்சி | – | அரிகாம்போதி |
| 6) | வியாழக் குறிஞ்சி | – | சௌராட்டிரம் |
| 7) | மேகராகக் குறிஞ்சி | – | நீலாம்பரி |

| | | | |
|---|---|---|---|
| 8) | அந்தாளிக் குறிஞ்சி | – | சாமா |
| 9) | இந்தளம் | – | மாயாமாளவகௌள / நாதநாமக்கிரியை |
| 10) | சீகாமரம் | – | நாதநாமக்கிரியை |
| 11) | காந்தாரம் | – | நவரரோஸ் |
| 12) | பியந்தைக் காந்தாரம் | – | நவரரோஸ் |
| 13) | கொல்லி | – | நவரரோஸ் |
| 14) | கொல்லிக் கௌவாணம் | – | நவரரோஸ் |
| 15) | நட்டராகம் | – | பந்துவராளி |
| 16) | சாதாரி | – | பந்துவராளி |
| 17) | செவ்வழி | – | எதுகுலகாம்போது |
| 18) | கௌசிகம் | – | பைரவி |
| 19) | காந்தார பஞ்சமம் | – | கேதார கௌள |
| 20) | பஞ்சமம் | – | ஆகிரி |
| 21) | பழம் பஞ்சுரம் | – | சங்கராபரணம் |
| 22) | யாழ் முரி | – | அடாண |
| 23) | புற நீர்மை | – | பூபாளம். |
| 24) | செந்துருத்தி | – | மத்தியமாவதி |
| 25) | திருநேரிசை | – | நவரோஸ் |
| 26) | திருவிருத்தம் | – | எந்தராகத்திலும் பாடலாம் |
| 27) | திருக்குறுந்தொகை | – | நாதநாமக்கிரியை |
| 28) | திருவிசை | – | பந்துவராளி / சௌராட்ரம் / சக்கரவாகம் |
| 29) | திருப்பல்லாண்டு | – | ஆனந்த பைரவி |
| 30) | திருமந்திரம் | – | "சாமவேதப்பண்" |
| 31) | திருப்புராணம் | – | மத்தியமாவதி |
| 32) | திருத்தாண்டகம் | – | அரிகாம்போதி |
| 33) | திருவாசகம் | – | மோகனம் |
| 34) | திருக்கோவை | – | சங்கராபரணம் |

உ

சிவமயம்



# விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

*ஔவைப் பிராட்டியார் அருளிய*

# விநாயகர் அகவல்

*ஆசிரியப்பா*

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன் அரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும் பாரக் கோடும்

வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்டநீல மேனியும்
நான்ற வாயு நாலிரு புயமும்
மூன்று கண்ணு மும்மதச் சுவடும்

இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழ நுகரும் மூக்ஷிக வாகன !

இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்

திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாப்
பொருந்தவே வந்தென் உளத்தினிற் புகுந்து
குருவடிவாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந் தெனக் கருளிக்
கோடாயுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்

தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து

தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்கிசை நிலையும்

பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறிவித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்

குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்

குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முகமாக இனிதெனக் கருளி

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து

முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக் கொன்றிடமென்ன
அருள் தரும் ஆனந்தத் தழுத்திஎன் செவியில்

எல்லையில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவுக் கணுவாய் அப்பாலுக் கப்பா லாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி

வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும் பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக ! விநாயக ! விரைகழல் சரணே !

திருச்சிற்றம்பலம்

# விநாயகர் நாமாவளி

சிவ சிவ கஜமுக கணநாதா
சிவ கண வந்தித குணநீதா
கெங்காதர கஜமுக வர்த்தன
மகா கணபதே பாலயமாம்
ஆனந்த ஐங்கர வந்திடுவாய்
அந்தகன் வாராமற் காத்தருள்வாய்
வா வா வா வா நற்பரனே
வந்து நிதம் அருள் தந்திடுவாய்
ஏழைக்கென்றும் அருள் புரிவாய்
ஈஸ்வரி பாலா ஏரம்பா
உமைதரு பாலா குருமணியே
உந்தன் னடைக்கலம் அடியேனே
சத்த சமுத்திர மொத்திடு மும்மத
தந்தித் தொந்தி வயிற்றோனே
ஆகுவாகன அம்பிகை வர்த்தன
மகா கணபதே பாலயமாம்
ஒரு கொம் பிரு செவி மும்மதமோ
டோரொரு நால்வாய் ஐங்கரனே
அனுதின மும்மருள் ஐங்கரனே
ஆதி யனாதியோ ரட்சரமே
பார்பதி பாலா வா வா வா
பரபத மெமக்கே தா தா தா
மங்கள மருளுக ஐங்கர முதல்வா
அரிதிரு மருகா குருபர நமநம
மகாகணபதே குரு சரணம்
மனம் மகிழ்ந்துவந் தருள் சரணம்
கூ கூ கணபதி கூ கூ என்னக்
கூ கூ என்ற குன்றே போற்றி
சரணம் சரணம் தந்தி முகா
சரவண பவனுக் குயர்துணைவா

பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
ஆற்றங்கரை மீதிலே அரசமரத்து நிழலிலே
வீற்றிருக்கும் பிள்ளையார் வினைகள் தீர்க்கும் பிள்ளையார்
(பிள்)

யானைமுகம் கொண்டவர் ஐந்து கரங்கள் உடையவர்
பானை வயிறு படைத்தவர் பக்தர் குறை தீர்ப்பவர்
(பிள்)

அவல்கடலை சுண்டலும் அரிசிக் கொழுக்கட்டையும்
கவலையின்றி தின்னுவார் கண்ணைமூடித் தூங்குவார்
(பிள்)

கல்லினாலே செய்யினும் மண்ணினாலே செய்யினும்
ஐந்தெழுத்து மந்திரத்தை நெஞ்சில் நாட்டும் பிள்ளையார்
(பிள்)

ஓம் நமசிவாய என்ற ஐந்தெழுத்து மந்திரத்தை
நெஞ்சில் நாட்டும் பிள்ளையார்
ஓம் நமசிவாய சிவாய நம ஓம்
சிவாயநம ஓம் ஓம் நமசிவாய
ஓம் நமசிவாய சிவாயநம ஓம்
சிவ சிவ சிவ சிவசிவாய நமஓம்
ஹர, ஹர, ஹர, ஹராய நமஓம்
சிவாய நம ஓம் ஓம் நமசிவாய
ஓம் நமசிவாய என்ற ஐந்தெழுத்து மந்திரத்தை
நெஞ்சில் நாட்டும் பிள்ளையார்
ஆறு முக வேலனுக்கு அண்ணனான பிள்ளையார்
நேரும் துன்பம் யாவையும் நீக்கிவைக்கும் பிள்ளையார்
கலியுகத்தில் எம்மையும் காக்க வேண்டி வரினும்
எலியின் மீது ஏறியே இஷ்டம்போல சுற்றுவார்.
(பிள்)

# பிள்ளையார் கதை

## காப்பு

கரும்பும் இளநீரும் காரெள்ளுந் தேனும்
விரும்பும் அவல்பலமும் மேன்மேல் – அருந்திக்
குணமுடைய னாய்வந்து குற்றங்கள் தீர்க்குங்
கணபதியே இக்கதைக்குக் காப்பு.

திருவிளக்கு மான்மருகா சேவதனில் ஏறி
வரும்அரன்றாள் ஈன்றருளு மைந்தா – முருகனுக்கு
முன்பிறந்த யானை முகவா உனைத்தொழுவேன்
என்கதைக்கு நீயென்றுங் காப்பு.

## விநாயகர் துதி

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத் தானைக்
காதலாற் கூப்புவர்தம் கை.

ஒற்றை மருப்பும் ஒரிரண்டு கைத்தலமும்
வெற்றி புனைந்த விழிமூன்றும் – பெற்றதொரு
தண்டைக்கால் வாரணத்தைத் தன்மனதில் எப்பொழுதுங்
கொண்டைக்கால் வாராது கூற்று.
பாலுந் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன் – கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீஎனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா.

எள்ளுப் பொரிதேன் அவல்அப்பமிக்கும் பயறும் இளநீரும்
வள்ளிக் கிழங்கும் மாம்பழமும், வாழைப்பழமும் பலாப்பழமும்,
வெள்ளைப்பாலும், மோதகமும் விரும்பிப் படைத்தேன்
சந்நிதியில்
கொள்ளைக் கருணைக் கணபதியேகொட்டி அருள்க சப்பாணி,

சண்டப் பெருச்சாளி ஏறிச் சடைகொண்டு வையத் துலாவி,
அண்டத் தமரர் துதிக்க அடியார்க்கு அருளும் பிரானே,
எண்திக்கும் அன்பர்கள் பார்க்க இணையுற்ற பேரொளி வீசக்,
குண்டைக் கணபதி நம்பி கொடுங்கையாற் சப்பாணி கொட்டே.

சரஸ்வதி துதி

புத்தகத்து உள்ளுறை மாதே பூவில் அமர்ந்திடு வாழ்வே
வித்தகப் பெண்பிள்ளை நங்காய் வேதப் பொருளுக்கு இறைவீ
முத்தின் குடைஉடை யாளே மூவுல குந்தொழுது ஏத்துஞ்
செப்புக் கவித்த முலையாய் செவ்வரி ஓடிய கண்ணாய்
தக்கோலந் தின்னும் வாயாய் சரஸ்வதி என்னுந் திருவே
எக்காலமும் உன்னைத் தொழுவேன் இயல்இசை நாடகம் என்னும்
முத்தமிழ்க் கல்விகள் எல்லாம் முழுதும் எனக்கருள் செய்துஎன்
சித்தந் தனில்நீ இருந்து திருவருள் செய்திடு வாயே.

அதிகாரம்

பொன்னிறங் கடுக்கும் புனற்செறி குடுமித்
தென்மலை இருந்த சீர்சால் முனிவன்
கந்த மும்மதக் கரிமுகன் கதைதனைச்
செந்தமிழ் வகையாற் தெளிவுறச் செப்பினன்
அன்னதிற் பிறவில் அரிறபத் திரட்டிக்
தொன்னெறி விளங்கச் சொல்லுவன் கதையே.

கதை

மந்திர கிரியில் வடபால் ஆங்கோர்
இந்துதவழ் சோலை இராசமா நகரியில்
அந்தணன் ஒருவனும் அயிழை ஒருந்தியுஞ்
சுந்தரப் புதல்வரைப் பெறுதல் வேண்டிக்
கடவுள் ஆலயமும் கடிமலர்ப் பொய்கையும்
தடநிழற் பள்ளியுந் தாம்பல சமைத்துப்
புதல்வரைத் தருகெனப் பொருப்பரசு ஈன்ற
மதர்விழி பாகனை வழிபட்டு நாளின்
மற்றவர் புரியு மாதவங் கண்டு

சிற்றிடை உமையாள் சிவனடி வணங்கிப்
பரனே சிவனே பல்லுயிர்க்கு உயிரே
அரனே மறையவர்க்கு அருள்புரிந்து அருளென
அந்தஅந் தணனுக்கு இந்தநற் பிறப்பில்
மைந்தரில் லைஎன்று மறுத்துஅரன் உரைப்ப
எப்பரி சாயினும் எம்பொருட்டு ஒருசுதன்
தப்பிலா மறையோன் தனக்குஅருள் செய்கென
எமையா ளுடைய உமையாள் மொழிய
இமையா முக்கண் இறைவன் வெகுண்டு
பெண்சொற் கேட்டல் பேதமை என்று
பண்சொற் பயிலும் பாவையை நோக்கி
பேதாய் நீபோய்ப் பிறவென மொழிய
மாதுமை அவளும் மனந்தளர்வு உற்றுப்
பொன்றிடும் மானிடப் புன்பிறப்பு எய்துதல்
நன்றல என்றே நடுக்கமுற்று உரைப்பக்
கறைமிடற்று அண்ணல் கருணை கூர்ந்து
பிறைநுதல் அவட்குநீ பிள்ளையாகச்
சென்றவன் வளர்ந்து சிலபகல் கழித்தால்
மன்றல்செய்து அருள்வோம் வருந்தலை என்று
விடைகொடுத்து அருள விலங்கன்மா மகளும்
பெட்டைமயிற் சாயற் பெண்மக வாகித்
தார்மலி மார்பன் சதுர்மறை கிழவன்
சீர்மலி மனைவி திருவயிற்று உதித்துப்
பாவையுஞ் சிற்றிலும் பந்தொடு கழங்கும்
யாவையும் பயின்ற இயல்பினள் ஆகி
ஐயாண்டு அடைந்தபின் அன்னையும் அத்தனும்
மைபார் கருங்குழல் வாணுதல் தன்னை
மானுட மறையோர்க்கு வதுவை செய்திடக்
கானமர் குழலியைக் கருதிக் கேட்பப்
பிறப்புஇறப்பு இல்லாப் பெரியோற்கு அன்றி
அறத்தகு வதுவைக்கு அமையேன் யான்என
மற்றவன் தன்னைஉன் மணமக னாகப்
பெற்றிடல் அரிதெனப் பெயர்த்தவர் பேச
அருந்தவ முயற்சியால் அணுகுவேன் யான்எனக்
கருந்தட நெடுங்கண் கவுரியங்கு உரைப்ப

மருமலி கமல மலர்த்தடத்து அருகிற்
தருமலி நிழல்தவச் சாலையது அமைத்துப்
பணியணி பற்பல பாங்கியர் சூழ
அணிமலர்க் குழல்உமை அருந்தவம் புரிதலும்
அரிவை தன்அருந்தவம் அறிவோம் யாம்என
இருவரும் அறியா இமையவர் பெருமான்
மானிடம் ஏந்தும் வண்ணமது ஒழிந்து
மானிட யோக மறையவன்ஆகிக்
குடையொடு தண்டுநற் குண்டிகை கொண்டு
மடமயில் தவம்புரி வாவிக் கரையிற்
கண்ணுல் வந்து கருணை காட்டித்
தண்ணறுங் கூந்தல் தையலை நோக்கி
மின்பெறு நுண்ணிடை மெல்லிய லாய்நீ
என்பெறத் தவம்இங்கு இயற்றுவது என்றலுங்
கொன்றைவார் சடையனைக் கூடஎன்று உரைத்தலும்
நன்றுஎனச் சிரித்து நான்மறை யோனும்
மாட்டினில் ஏறி ஊன்மழுத் தரித்துக்
காட்டினிற் சுடலையிற் கணத்துடன் ஆடிப்
பாம்பும் எலும்பும் பஃறலை மாலையுஞ்
சாம்பரும் அணிந்து தலையோடு ஏந்திப்
பிச்சைகொண்டு உழலும் பித்தன் தன்னை
நச்சிநீர் செய்தவம் நகைதரு நுமக்கெனப்
பூங்கொடி அருந்தவம் பூசுரன் குலைத்தலும்
ஆங்கவள் நாணமுற்று அணிமனை புகுதச்
சேடியர் வந்து செழுமலர்க் குழலியை
வாடுதல் ஒழிகென மனமிகத் தேற்றிச்
சிந்துர வாணுதற் சேடியர் சிலர்போகத்
தந்தையாய் இருவர் தாளினை வணங்கி
வாவிக் கரையில் வந்தொரு மறையோன்
பாவைதன் செங்கையைப் பற்றினன் என்றலுந்
தோடலர் கமலத் தொடைமறை முனியை
ஆடக மாடத் தனிமனை கொணர்கென
மாடக யாழ்முரல் மங்கையர் ஓடி
நீடிய புகழாய் நீஎழுந்து அருள்என
மைமலர்க் குழலி வந்துஎனை அழைக்கில்

அம்மனைப் புகுவன்என்று அந்தணன் உரைத்தலும்
பொற்றொடி நீபோய்ப் பொய்கையில் நின்ற
நற்றவ முனியை நடாத்திக் கொணர்கென
சிவனை இகழந்த சிற்றறிவு உடையோன்
அவனையான் சென்றிங்கு அழைத்திடேன் என்று
சிற்றிடை மடந்தையுஞ் சீறின ளாகி
மற்றைய மாதர் மதிமுகம் நோக்கி
நெற்றியிற் கண்ணுடை நிமலனுக்கு அல்லவென்
பொற்பமர் கொங்கை பொருந்துதற்கு அரிதால்
மானிட வேட மறையவன் தனக்கு
யான்வெளிப் படுவ தில்லைஎன்று இசைப்ப
மனையிடை வந்த மாமுனி தன்னை
இணையடி தொழுதல் இளையோர்க்கு இயல்பெனத்
தந்தையுந் தாயுந் தகைபெற மொழியச்
சிந்தை குளிர்ந்து சீறுதல் ஒழிந்து
தாய்சொல் மறுத்தல் பாவம்என்று அஞ்சி
ஆயிழை தானும் அவன் எதிர் சென்று
சுற்றிவந்து அவனடி சுந்தரி வணங்கி
மற்றவன் தன்னை மனையிற் கொணர்ந்து
ஆதியம் பகவற்கு அன்பன் ஆகும்
வேதியன் பழைய விருத்தன்என்று எண்ணி
ஆசனம் நல்கி அருக்கிய முதலாப்
பாதபூ சனைகள் பண்ணிய பின்னர்ப்
போனகம் படைத்துப் பொரிக்கறி பருப்புநெய்
ஆன்பால் மாங்கனி அழகிய பலாச்சுளை
தேன்கத லிப்பழஞ் சீர்பெறப் படைத்து
அந்தணன் தன்னை அமுது செய்வித்துச்
சந்தனங் குங்குமஞ் சாந்திவை கொடுத்துத்
தக்கோ லத்தொடு சாதிக் காயும்
கற்பூரத் தொடு கவின பெறக் கொண்டு
வெள்ளிலை அடைக்காய் விளங்கிய பொன்னின்
ஒள்ளிய தட்டில் உவந்துமுன் வைத்துச்
சிவன் எனப் பாவனை செய்து நினைந்து
தவமுறை முனிவனைத் தாளினை வணங்கத்
தேனமர் குழலி திருமுகம் நோக்கி
மோனமா முனிபுன் முறுவல் காட்டிக்

கற்றைச் சடையுங் கரமொரு நான்கும்
நெற்றில் நயனமும் நீல கண்டமும்
மானும் மழுவும் மலர்க்கரத்து இலங்கக்
கூன்மதி நிலவுங் கொழித்திட முடிமேல்
வரந்தரு முதல்வன் மடமயில் காணக்
கரந்ததன் உருவங் காட்டிமுன் நிற்ப
மரகத மேனி மலைமகள் தானும்
விரைவொடுஅங் கவன்அடி வீழ்ந்துஇறைஞ் சினளே
அரிஅயன் இந்திரன் அமரர் விஞ்சையர்
கருடர் கின்னரர் காய வாசியர்
ஏதமில் முனிவர் அவுணர் இராக்கதர்
பூதர் இயக்கர்கிம் புருடர் அலகை
சித்தர் தாரகைக்கந் தருவர்கள் முதலாய்க்
கணிக்கரும் பதினென் கணத்தில்உள் ளவரும்
மணிக்கருங் களத்தானை வந்தடைந்து அதன்பின்
மன்றலங் குழலிக்கு வதுவைநாள் குறித்துத்
தென்றல்வந்து இலங்கு முன்றில் அகத்துப்
பொன்திகழ் பவளப் பொற்கால் நாட்டி
மாணிக் கத்தால் வளைபல பரப்பி
ஆணிப்பொற் தகட்டால் அழகுற வேய்ந்து
நித்தில மாலை நிரைநிரை தூக்கிப்
பக்திகள் தோறும் பலமணி பதித்துத்
தோரணம் நாட்டித் துகில்விதா னித்துப்
பூரணப் பொற்குடம் பொலிவுற வைத்துத்
திக்குத் தோறும் திருவிளக்கு ஏற்றிப்
பக்திப் படர்முளைப் பாலிகை பரப்பிக்
கன்லுங் கமுகுங் கதலியும் நாட்டிப்
பன்மலர் நாற்றிப் பந்தர்சோ டித்து
நலமிகு கைவலோர் நஞ்சுஅணி மிடற்றனைக்
குலவிய திருமணக் கோலஞ் செய்தனர் ஆங்கே
எம்பிரா னையும் இளங்கொடி தன்னையும்
உம்பர் எல்லாம் ஒழுங்குடன் கூடிக்
கடல் என விளங்குங் காவணந் தன்னிற்
சுடர்விடு பவளச் சுந்தரப் பலகையின்
மறைபுகழ்ந்து ஏத்த மகிழ்ந்து உட னிருந்திப்
பறைஒலி யோடு பனிவளை ஆர்ப்ப

வதுவைக்கு ஏற்ற மறைவிதி நெறியே
சதுர்முகன் ஓமச் சடங்குகள் இயற்றத்
தறுகலன் ஒளிபொற் தாலி பூட்டிச்
சிறுமதி நுதலியைச் சிவன்கைப் பிடித்தபின்
அரிவலஞ் சூழ எரிவலம் வந்து
பரிவுடன் பரிமளப் பாயலில் வைகிப்
போதணி கருங்குழற் பூவைதன் னுடனே
ஓதநீர் வேலைசூழ் உஞ்சைஅம் பதிபுக
எரார் வழியின் எண்திசை தன்னைப்
பாரா தேவா பனிமொழி நீ என
வரும்கருங் குழலாண் மற்றும்உண் டோஎனத்
திருந்திழை மடந்தை திரும்பினள் பார்க்கக்
களிறும் பிடியும் கலந்துவிளை யாடல்கண்டு
ஒளிர்மணி பூணாள் உரவோன் உடனே
இவ்வகை யாய்விளை யாடுவோம் ஈங்கென
அவ்வகை அரனும் அதற்குஉடன் பட்டு
மதகரி உரித்தோன் மதகரி யாக
மதர்விழி உமைபிடி வடிவம் தாகிக்
கூடிய கலவியிற் குவலயம் விளங்க
நீடிய வானோர் நெறியுடன் வாழ
அந்தணர் சிறக்க வானினம் பெருகச்
செந்தழல் வேள்விவேத ஆகமஞ் சிறக்க
அறம்பல பெருக மறம்பல சுருங்கத்
திறம்பல அரசர் செகதலம் விளங்க
வெங்கரி முகமும் வியன்புழைக் கையோடு
ஐங்கர தலமும் மலர்ப்பதம் இரண்டும்
பவளத்து ஒளிசேர் பைந்துவர் வாயுந்
தவளக் கிம்புரித் தடமருப்பு இரண்டுங்
கோடிசூ ரியர்போற் குலவிடு மேனியும்
பேழைபோல் அகன்ற பெருங்குட வயிறும்
நெற்றியில் நயனமும் முப்புரி நூலுங்
கற்றைச் சடையுங் கனகநீண் முடியுந்
தங்கிய முறம்போல் தழைமடிச் செவியுமாய்
ஐங்கரத்து அண்ணல் வந்துஅவ தரித்தலும்
பொங்கர அணிந்த புண்ணிய மூர்த்தியும்

மங்கை மனமிக மகிழ்ந்துடன் நோக்கி
விண்ணு ளோர்களும் விரிந்தநான் முகனும்
மண்ணு ளோர்களும் வந்துனை வணங்க
ஆங்கவர் தங்கட்கு அருள்சுரந்து அருளித்
தீங்கது தீர்த்துச் செந்நெறி அளித்துப்
பாரண மாகப் பலகனி யருந்தி
ஏரணி ஆலின்கீழ் இனிதிரு என்று
பூதலந் தன்னிற் புதல்வனை இருத்திக்
காதல்கூர் மடநடைக் கன்னியுந் தானும்
மைவளர் சோலை மாநகர் புகுந்து
தெய்வ நாயகன் சிறந்தினிது இருந்தபின்
வானவ ராலும் மானுட ராலுங்
கானமர் கொடிய கடுவிலங் காலுங்
கருவிக ளாலுங் கால னாலும்
ஒருவகை யாலும் உயிர் அழி யாமல்
திரம்பெற மாதவஞ் செய்துமுன் னாளில்
வரம்பெறு கின்ற வலிமையி னாலே
ஐமுகச் சீயமொத் தடற்படை சூழக்
கைமுகம் படைத்த கயமுகத்து அவுணன்
பொன்னுலகு அழித்துப் புலவரை வருத்தி
இந்நிலத் தவரை இடுக்கண் படுத்திக்
கொடுந்தொழில் புரியுங் கொடுமைகண்டு ஏங்கி
அடுந்தொழிற் குலிசத்து அண்ணலும் அமரருங்
கறைபடு கண்டக்கடவுளைப் போற்றி
முறையிடக் கேட்டு முப்புரம் எரித்தோன்
அஞ்சலீர் என்று அவர்க்கு அபயங் கொடுத்தே
அஞ்சுகை கரிமுகத்து அண்ணலை நோக்கி
ஆனை மாமுகத்து அவுணனொடு அவன்தன்
சேனைகள் முழுவதுஞ் சிந்திடப் பொருது
குன்றுபோல் வளர்ந்த குறட்படை கூட்டி
வென்றுவா என்று விடைகொடுத்து அருள
ஆங்கவன் தன்னோடு அமர்பல உடற்றிப்
பாங்குறும் அவன்படை பற்றறக் கொன்றபின்
தேர்மிசை ஏறிச் சினங்கொடு செருவிற்
கார்முகம் வளைத்த கயமுகா சுரன்மேல்

ஒற்றை வெண் மருப்பை ஒடித்தவன் உரத்திற்
குற்றிட எறிந்தான் குருதிசோர்ந் திடவே
சோர்ந்தவன் வீழ்ந்து துண்ணென எழுந்து
வாய்ந்தமூ டிகமாய் வந்துஅவன் பொரவே
வந்த மூடிகத்தை வாகனம் ஆக்கி
எந்தை விநாயன் ஏறினன் இப்பால்
எறிந்தவெண் மருப்புஅங்கு இமைநொடி அளவிற்
செறிந்தது மற்றவன் திருக்கரத்தினிலே குருதி சோர்ந்திடவே
வெல்லவைக் கதிர்வேல் விழிப்படைத்து அருளும்
வல்லவை தனைத்தன் மனைஎன மணந்தே
ஒகையோடு எழுந்தாங்கு உயர்படை சூழ
வாகையும் புனைந்தவரும்வழி தன்னிற்
கருச்சங் கோட்டிற் கயல்கமுகு ஏறுந்
திருச்செங் காட்டிற் சிவனை அர்ச்சித்துக்
கணபதீச் சரம் எனுங் காரண நாமம்
பணபதி புகழ்தரு பதிக்குஉண் டாக்கிச்
சங்கரன் பார்ப்பதி தனிமனமகிழ
இங்குவந்து அன்புடன் எய்திய பின்னர்க்
கணங்களுக்கு அரசாய்க் கதிர்முடி சூட்டி
இணங்கிய பெருமைபெற்று இருந்திட ஆங்கே
தேவர்கள் முனிவர் சித்தர்கந் தருவர்
யாவரும் வந்திவன் ஏவல்செய் திடுநாள்
அதிகமாய் உரைக்கும் ஆவணித் திங்களின்
மதிவளர் பக்கம் வந்திடு சதுர்த்தியில்
விநாயகர்க்கு உரிய விரதம் என்றுஎண்ணி
மனாதிகள் கழித்து மரபொடு நோற்றார்
இப்படி நோற்றிட்டு எண்ணிபெருநாள்
ஒப்பரும் விரதத்து உறுமொரு சதுர்த்தியில்
நோற்றுநற் பூசை நுடங்காது ஆற்றிப்
போற்றிசெய் திட்டார் புலவர் ஐங்கரனை
மருமலர் தூவும் வானவர் முன்னே
நிருமலன் குமரன் நிருத்தம் புரிந்தான்
அனைவரும் கைதொழுது அடிஇணை போற்ற
வனைகழற் சந்திரன் மனச்செருக்கு அதனால்
பேழைபோல் வயிறும் பெருத்தகாத் திரமும்

தாழ்துளைக் காயுந் தழைமுறைச் செவியுங்
கண்டனன் நகைத்தான் கரிமுகக் கடவுளுங்
கொண்டனன் சீற்றங் குபேரனை நோக்கி
என்னைக் கண்டிங்கு இகழ்ந்தானை சிரித்தாய்
உன்னைக் கண்டவர் உரைக்கும் இத் தினத்திற்
பழியொடு பாவமும் பலபல விதனமும்
அழிவும் எய்துவரென்று அசனிபோற் சபித்தான்
விண்ணவர் எல்லாம் மிகமனம் வெருவிக்
கண்ணருள் கூறுங் கடவுள்இத் தினத்திற்
கோரவெஞ் சினமிக்க கொண்டனன் அந்நாள்
மார்கழித் திங்கள் மதிவளர் பக்கஞ்
சதயந் தொட்ட சட்டிநல் விரதமென்று
இதயத்து எண்ணி யாவரும் நோற்றார்
இப்புவி மாந்தர் இயம்பிய விரதம்
வைப்புடன் நோற்ற வகைஇனிச் சொல்வாம்
குருமணி முடிபுனை குருகுலத் துதித்த
தருமனும் இளைய தம்பியர் நால்வரும்
தேவகி மைந்தன் திருமுகம் நோக்கி
எண்ணிவிரதம் இடையூறு இன்றிப்
பண்ணிய பொழுதே பலிப்பு உண்டாகவுஞ்
செருவினில் எதிர்த்த செறுநரை வென்று
மருமலர்ப் புயத்தில் வாகை சூடவும்
எந்தத் தெய்வத் எவ்விர தத்தை
வந்தனை செய்யில் வருநமக்கு உரையெனப்
பாட்டளி துதையும் பசுந்துழாய் மார்பனுங்
கேட்டருள் வீரனக் கிளர்த்துதல் உற்றான்
அக்குநீ றணியும் அரன்முதல் அளித்தோன்
விக்கினந் தீர்க்கும் விநாயக மூர்த்தி
ஓடவைத்திடும் பொன் ஒத்தஒளி விளங்குங்
கோடி சூரியர்போற் குலவிய மேனியன்
கடகரி முகத்தோன் காத்திரம் பொருத்தோன்
தடவரை போலுஞ் சதுர்ப்புயம் உடையோன்
சர்வ ஆபரணமுந் தரிக்கப் பட்டவன்
உறுமதிக் குழவிபோல் ஒருமருப் புடையோன்
ஒருகையிற் தந்தமும் ஒருகையிற் பாசமும்

ஒருகையில் மோதகம் ஒருகையிற் செபம்செய்
உத்தம மாலையோன் உறுநினை வின்படி
சித்திசெய் வதனாற் சித்திவி நாயகன்
என்றுஇமை யவரும் யாவருந் துதிப்ப
நன்றி தரந்திரு நாமம் படைத்தோன்
புரவலர் காணப் புறப்படும் போதுஞ்
செருவினில் யுத்தஞ் செய்திடும் போதும்
வித்தியா ரம்பம் விரும்பிடும் போதும்
உத்தியோ கங்கள் உஞற்றிடும் போதும்
ஆங்கவன் தன்னை அருச்சனை புரிந்தால்
தீங்குறாது எல்லாஞ் செயம்உண் டாகும்
கரதலம் ஐந்துடைக் கணபதிக்கு உரிய
விரதம்ஒன் றுளதுஅதை விரும்பிநோற் றவர்க்குச்
சந்ததி தழைத்திடுஞ் சம்பத்து உண்டாம்
புந்தியில் நினைந்த பொருள் கைகூடும்
மேலவர் தம்மையும் வென்றிட லாம்எனத்
தேவகி மைந்தன் செப்பிடக் கேட்டு
நுவலரும் விரதம் நோற்றிடும் இயல்பும்
புகர்முகக் கடவுளைப் பூசைசெய் விதமும்
விரித்தெமக்கு உரைத்திட வேண்டுமென்று இரப்ப
வரைக்குடை கவித்தோன் வகுத்துரை செய்வான்
தேருநீர் ஆவணித் திங்களின் மதிவளர்
பூர்வ பக்கம் புணர்ந்திடு சதுர்த்தியின்
முந்தும் புலரியின் முறைநீர் படிந்து
சந்தி வந்தனந் தவறாது இயற்றி
அத்தினம் அதனில் ஐங்கரக் கடவுளைப்
பக்தியோடு அர்ச்சனை பண்ணுதல் வேண்டும்
வெள்ளியாற் பொன்னால் விளங்கும் அவன்றன்
ஒள்ளிய அருள்திரு உருஉண் டாக்கிப்
பூசனை புரியப் புக்ன்றனர் பெரியோர்
ஆசிலா மண்ணால் அமைத்தலும் தகுமால்
பூசைசெய் திடும்இடம் புனிதமது ஆக்கி
வாசமென் மலரின் மஞ்சரி தூக்கிக்
கோடிகங் கோசிகங் கொடிவிதா னித்து
நீடிய நூல்வளை நிறைகுடத்து இருத்தி

விந்தைசேர் சித்தி விநாயகன் உருவைச்
சிந்தையின் நினைந்து தியானம் பண்ணி
ஆவா கனமுதல் அர்க்கிய பாத்தியம்
வாகா ராச மனம்வரை கொடுத்து
ஐந்துஅமிர் தத்தால் அபிடேக கித்துக்
கந்தஞ் சாத்திக் கணேசமந் திரத்தால்
ஈசுர புத்திரன் என்னுமந் திரத்தால்
மாசகல் இரண்டு வத்திரஞ் சாத்திப்
பொருந்துஉமை சுதனாப் புகலுமந் திரத்தாற்
திருந்தும் பளித்த தீபங் கொடுத்துப்
பச்சறுகு உடன்இரு பத்தொரு விதமாப்
பத்திர புட்பம் பலபல கொணர்ந்தே
உமாசுதன் கணாதிபன் உயர்கரி முகத்தோன்
குமார குரவன் பாசாங் குசகரன்
ஏக தந்தன் ஈசுரன் புத்திரன்
ஆகு வாகனன் அருள்தரு விநாயகன்
சர்வகா ரியமுங் தந்தருள் புரிவோன்
ஏரம்ப மூர்த்தி என்னுநா மங்களால்
ஆரம் பத்துடன் அர்ச்சனை பண்ணி
மோதகம் அப்பம் முதற்பணி காரந்
தீதகன் மாங்கனி தீங்கத் லிப்பழம்
வருக்கை கபித்த மாதுளங் கனியொடு
தரித்திடு நெட்டிலைத் தாழைமுப் புடைக்காய்
பருப்புநெய் பொரிக்கறி பால் தயிர் மோதகம்
விரும்புள சுவைப்பொருள் மிகவும்முன் வைத்து
உருத்திரப் பிரியஎன்று உரைக்குமந் திரத்தால்
நிருத்தன் மகற்கு நிவேதனங் கொடுத்து
நற்றவர் புகன்றநா னான்குஉ சாரமும்
மற்றவன் திருவுள மகிழ்ந்திடச் செய்து
எண்ணுந் தகுதி இருபிறப் பாளார்க்கு
உண்ணுறு சுவைசே ரோதன நல்கிச்
சந்தன முத்துத் தானந் தக்கிணை
அந்தணர்க்கு ஈந்திட்டு அருச்சகன் தனக்குத்
திருத்தகு விநாயகத் திருஉரு வத்தைத்
தரித்தவத் திரத்துடன் தானமாக கொடுத்து

நைமித் திகம்என நவில்தர மரபால்
இம்முறை பூசனை யாவர்செய் தாலும்
எண்ணிய கருமம் யாவையு முடிப்பர்
திண்ணிய செருவிற் செயமிகப் பெறுவர்
அரன் இவன் தன்னைமுன் அர்ச்சனை பண்ணிப்
புரமொரு மூன்றும் பொடிபட எரித்தான்
உருத்திரன் இவனை உபாசனை பண்ணி
விருத்திரா சுரனை வென்றுகொன் றிட்டான்
அகலிகை இவன் தாள் அர்ச்சனை பண்ணிப்
பகர்தருங் கணவனைப் பரிவுடன் அடைந்தாள்
தண்ணார் மதிமுகந் தாள்தம யந்தி
அன்னாள் இவனை அர்ச்சனை பண்ணி
நண்ணார் இரவு நளனை அடைந்தாள்
ஐங்கரக் கடவுளை அர்ச்சனை பண்ணி
வெங்கத நிருதரை வேர்அறக் களைந்து
தசரதன் மைந்தன் சீதையை அடைந்தான்
பகிரதன் என்னும் பார்த்திவன் இவனை
மகிதலந் தன்னின் மலர்க்கொடுஅர்ச் சித்து
வரநதி தன்னை வையகத்துஅழைத்தான்
அட்டதே வதைகளும் அர்ச்சித்து இவனை
அட்ட போகத்துடன் அமிர்தமும் பெற்றார்
உருக்மணி என்னும் ஒண்டொடி தன்னைச்
செருக்கொடு வவ்விச் சிசுபா லன்றான்
கொண்டுபோம் அளவிற் குஞ்சர முகவனை
வண்டுபாண் மிழற்றா மலர்க்கொடுஅர்ச் சித்துத்
தாரியின் மறித்தவன் தன்னைப் புறங்கண்டு
யாமும்அங் கவளை இன்புறப் பெற்றோம்
புகர்முகக் கடவுளைப் பூசனை புரிந்து
மிகமிக மனத்தில் விழைந்தன பெற்றார்
இப்புவி தன்னில் எண்ணுதற் கரிதால்
அப்படி நீவிரும் அவனைஅர்ச் சித்தால்
எப்பொருள் விரும்பினீர் அப்பொருள் பெறுவீர்
என்றுகற்று அறிந்தோன் எடுத்திவை உரைப்ப
அன்றுமுதற் தருமனும் அனுசரும் இவனைப்
பூசனை புரிந்து கட் புலன்இலான் மைந்தரை

நாசனம் பண்ணி நராதிப ராகிச்
சிந்தையில் நினைந்தவை செகத்தினிற் செயங்கொண்டு
அந்தமில் செல்வத்து அரசியல் பெற்றார்
ஈங்கிது நிற்க இவவிர தத்தியல்
ஓங்கிய காதைமற்று ஒன்றுஉரை செய்வாம்
கஞ்சநான் முகன்தருங் காசிபன் புணர்ந்த
வஞ்சக மனத்தால் மாயைதன் வயிற்றிற்
சூரன் என்று ஒருவனுந் துணைவருந் தோன்றி
ஆர்கலி சூழ்புவி அனைத்தையும் அளித்தே
சீருடைச் சுவர்க்கத் திருவளங் கெடுத்தும்
புரந்தரன் முதலிய புலவரை வருத்தியும்
நிரந்தரந் தீய நெறிநடத் துதலால்
ஆயிரங் கண்ணனும் அமரரும் முனிவரும்
நீஇரங்கு எமக்கென நெடுங்கரம் கூப்பி
இரசத கிரிஉறை இறைவனை வணங்கி
வரமிகுஞ் சூரன் வலிமைகள் உரைக்கச்
சுடர்விடு மணிமுடிச் சூரனை வெல்லக்
கதிர்விடு வடிவேல் கரதலத்து ஏந்தும்
புதல்வனைத் தருவோம் போமின் நீரென
அமரர் கோனுக்கு அரன்விடை கொடுத்துச்
சமர வேல்விழித் தையலுந் தானுங்
கூடிய கலவியிற் கூடாது ஊடலும்
ஓடிய வானோர் ஒருங்குடன் கூடிப்
பாவகன் தன்னைப் பரிவுடன் அழைத்துச்
சூரன் செய்யுந் துயரம் எல்லாம்
ஊரரவு அணிந்தோற்கு உரையென உரைப்பக்
காமனை எதிர்த்த கடவுள் என்று அஞ்சிப்
பாவகன் பயமுறப் பயமுனக்கு ஏதென
உற்றிடுங் கரதலத்து உன்னையே தரித்தான்
நெற்றியின் நயனமும் நீயே ஆதலிற்
குற்ற மடாது கூறுநீ சென்றென
வானவர் மொழிய மற்றவன் தானுந்
தானுமச் சபையிற் தரியா தேகி
எமையா ளுடைய உமையா ளுடனே
அமையா இன்பத்து அமர்ந்துஇனி திருந்த

பள்ளி மண்டபம் பாவகன் குறுகலும்
ஒள்ளிய மடந்தை ஒதுங்கிநா ணுதலுந்
தெள்ளிதிற் பரமனுந் தேயுவைக் கண்டே
ஆறுமுகப் பிள்ளையை அவன்கையில் ஈதலும்
வறியவன் பெற்ற வான்பொருள் போல
சோதி நீண்முடிச் சுடரோன் கொணர்ந்து
வாத ராசன் மலர்க்கையிற் கொடுப்ப
நீதியோடு நின்றுகை யேந்திப்
போதநீள் வாயுவும் பொறுக்கஒண் ணாமற்
தரும்புனற் கங்கை தன்கையிற் கொடுப்பத்
தரும்புனற் கங்கையும் தாங்கஒண் ணாமற்
பொருந்திரைச் சரவணப் பொய்கையில் வைப்பத்
தண்ணார் வதனத் தாமரை ஆறுங்
கண் ஆ றிரண்டுங் கரம்ஈ ராறும்
தூண் எனத்திரண்ட தோள் ஈராறும்
மாணயிலாதி வான்படை யுங்கொண்டு
ஆறுமுகக் கடவுள் அங்கு அவதரித்திடலும்
மறுகிய உம்பர் மகிழ்வுடன் கூடி
அறுமீன் களைப்பால் அளித்திர்என்று அனுப்ப
ஆங்கவர் முலையுண்டு அறுமுகன் தானும்
ஓங்கிய வளர்ச்சி உற்றிடு நாளில்
விமலனும் உமையும் விடையுகத் தாறு
தலைமகன் இருந்த சரவணத் தடைந்து
முரகலர் சூழலுமை முலைப்பால் ஊட்ட
இருவரும் இன்பால் எடுத்தெடுத்து அணைத்துத்
தேவர் தம்படைக்குச் சேனா பதியெனக்
காவல் கொண்டு அளிக்கக் கதிர்முடி சூட்டி
அயில்வேல் முதற்பல ஆயுதங் கொடுத்துத்
திசைஎலாஞ் செல்லுந் தேரும் ஒன்றுஉதவிப்
பூதப்படைகள் பிடைவரப் போய்நீ
ஓதுறும் அவுணரை ஒறுத்திடுஎன்று அனுப்ப
இருளைப் பருகும் இரவியைப் போலத்
தகுவரென்று அவரைச் சமரிடை முருக்கிக்
குருகுப் பேர்பெறுங் குன்றமுஞ் சூரன்
மருமமுந் துளைபட வடிவேல் விடுத்தே

யாவரும் வியப்புற இந்திரன் மகளாந்
தேவகுஞ் சரியைத் திருமணம் புணர்த்திட்டு
அமரர் கோனுக்கு அமருலகு அளித்துக்
குமர வேளுங் குவலயம் விளங்க
அமரா வதியில் அமர்ந்தினிது இருந்தான்
சமர வேலுடைச் சண்முகன் வடிவுகண்டு
அமரர் மாதர் அனைவரும் மயங்கி
எண்டருங் கற்பினை இழந்தது கண்டே
அண்டர் எல்லாம் அடைவுடன் கூடி
மாதொரு பாகனை வந்தடி வணங்கி
மருமலர்க் கடம்பன்எம் மாநகர் புகாமல்
அருள்செய்ய வேண்டுநீ அம்பிகா பதியென
இமையவர் உரைப்ப இறையவன் தானுங்
குமரனைக் கோபங் கொண்டுமுன் முனியக்
காவல்கொண்டு எம்வினை கட்டறுத்து அருளுஞ்
சேவலங் கொடியோன் தேசம் போகத்
திருந்திழை உமையாள் அருந்துயர் எய்தி
வருந்திமுன் நிற்க மங்கையைப் பார்த்து
மங்கை நீதான் வருந்துதல் ஒழிகுதி
அங்கையாற் சூதெறிந்து ஆடுவோம் வாவென
வென்றதுந் தோற்றதுந் விளம்புவார் யாரெனக்
குன்றமென் முலையாள் கூறிய சமயம்
புற்றரவு அனிந்த புனிதனைக் காண அங்கு
உற்றனன் திருமால் ஊழ்வினை வலியாற்
சக்கிரபாணியைச் சான்றெனக் குறித்து
மிக்கதோர் சூது விருப்புடன் ஆடச்
சாயக நேருந் தடநெடுங் கருங்கண்
நாயகி வெல்ல நாயகன் தோற்ப
இன்பவாய் இகழ்உமை யான்வென் றேனென
எம்பெரு மானும் யான்வென் றேனென
ஒருவர்க் கொருவர் உத்தரம் பேசி
இருவரும் சாட்சி இவனைக் கேட்ப
மாமனை வதைத்த மான்முக நோக்கிக்
காமனை எத்தோன் கண்கடை காட்ட
வென்ற நாயகி தோற்றாள் என்றுந்

தோற்ற நாயகன் *வென்றான் என்றும்*
ஒன்றிய பொய்க்கரி உடன் அங்கு உரைப்பக்
கன்றிய மனத்தொடு கவுரியங்கு உருத்து
நோக்கிநீ இருந்தும் நுவன்றிலை உண்மை
வாக்கினில் ஒன்றாய் மனத்தினில் ஒன்றாய்
மைக்கரி உரித்தோன் வதன நோக்கிப்
பொய்க்கரி உரைத்த புன்மையி னாலே
கனல்என் வயிற்றிற் கடும்பசி கனற்ற
நிலமிசை குருட்டு நெட்டுடற் பாம்பாய்க்
கடகரி முகத்துக் கடவுள்வீற்று இருக்கும்
வடதரு நீழலிற் கிடவெனச் சபித்தாள்
முளரிகள் பூத்த முகில்நிறத்து உருப்போய்த்
துளவணி மருமனுந் துணைவிழி இழந்தே
ஆண்டரைக் கனத்தில் ஆயிரம் யோசனை
நீண்டபைப் பாந்த நெட்டுடல் எடுத்து
வளர்மருப்பு ஒன்றுடை வள்ளல்வீற்று. இருக்குங்
கிளர்ச்சினை ஆலின் கீழ்க்கிடந் தனனால்
திரிகடக் கரியின் திருமுகக் கடவுளும்
வழிபடும் அடியார் வல்வினை தீர்த்தே
எழில்பெறு வடமரத் தின்கீழ் இருந்தான்
கம்பமா முகத்துக் கடவுள்தன் பெருமையை
அம்புவி யோருக்கு அறிவிப் போம்என
உம்பர் உலகத்து ஒரெழு கன்னியர்
தம்பநூல் ஏணியிற் தாரணி வந்து
கரிமுகக் கடவுளைக் கைதொழுது ஏத்திக்
கார்த்திகைக் கார்த்திகை கழிந்தபின் நாளில்
ஆர்த்த கலிங்கத்து அணியிழை வாங்கி
இருபத் தோர்இழை இன்புறக் கட்டி
ஒருபோது உண்டி உண்டுஒரு மனமாய்
வேதத் தாதியும் பூமியில் எழுத்தும்
ஆதிவி நாயகற்கு ஆன எழுத்தும்
மூன்றுஎழுத் ததனான் மொழிந்தமந் திரமும்
தேன்தருங் குழலியர் சிந்தையுட் செபித்தே
உரைதரு பதினாறு உபசா ரத்தால்
வரைமகன் மதலையை வழிபாடு ஆற்றி

இருபது நாளும் இப்படி நோற்று
மற்றநாள் ஐங்கர மாமுகனட பிறந்த
தற்றைநாட் சதயமும் ஆறாம் பக்கமுஞ்
சேரும் அத்தினத்திற் தெளிபுனல் ஆடி
வாரண முகத்தோன் வருபெருங்கோயில்
சீர்பெற மெழுகித் திருவிளக்கு ஏற்றிக்
குலவுபொற் கலைகள் கொடுவி தானித்து
மலர்பல தொடுத்திடு மாலைகள் ஆற்றிக்
கொலைபுரி வடிவேற் குகற்குமுன் வருகை
மலைமுகக் கடவுளை மஞ்சனம் ஆட்டிப்
பொற்கலை நன்னூற் பூந்துகில் சாத்திச்
சொற்பெறு சந்தனச் சுகந்தம் பூசிச்
செருந்தி சண்பகஞ் செங்கழு நீரொடு
குருந்து மல்லிகை கோங்கொடு பிச்சி
கருமுகை புன்னை கடிகமழ் பாதிரி
மருவிரி ஞாழன் மகிழ்இரு வாட்சி
தாமரை முல்லை தளையவிழ் கொன்றை
பூமலர் நொச்சி பூத்தமைக் குவளை
காந்தள் ஆத்தி கடம்புசெவ் வந்தி
வாய்ந்த நல் எருக்கு மலர்க்கர வீரம்
பச்சிலை நொச்சி படர்கொடி அறுகு
முத்தளக் கூவிள முதலிய சாத்தித்
தூபதீ பங்கள் சுகம்பெறக் கொடுத்தே
அப்பம் மோதகம் அவல்எள் ளுருண்டை
முப்பழந் தேங்காய் முதிர்மொளிக் கரும்பு
சீனிதேன் சர்க்கரை செவ்விள நீருடன்
பால்நறு நெய்தயிர் பருப்புடன் போனகங்
கற்பகக் கடவுள் களித்திடத் திருமுன்
பொற்புறப் படைத்துப் பூசனை பண்ணி
நோற்பது கண்டு நோலா திருந்த
பாப்புரு வாகிய பஞ்சா யுதனும்
யாப்புரு கொங்கையீர் யானுநோற் பேனென
ஆங்கவன் தனக்கும் வேண்டுவது அளித்துப்
பாங்கொடுஇவ் விரதம் பரிந்துநோற் பித்தார்
அண்டர்நா யகனாம் ஐங்கர னருளால்

விண்டுவும் பண்டுள வேடம் பெற்றே
உஞ்ஞைமா நகர்புகுந்து உமையொடு விமலன்
கஞ்சநாண் மலர்ப்பதங் கைதொழு திடலும்
பஞ்சிமென் சீறடிப் பார்ப்பதி நெஞ்சின்
வெஞ்சின மிகுந்து விமலனை நோக்கி
யான் இடுஞ்சாப நீங்கியது ஏனென
மாநெடுங் கண்ணி மணிக்கதவு அடைப்ப
இறையவன் இதற்குக் காரணம் ஏதென
மறிகடற் துயிலும் மாயவன் உரைப்பான்
பிறைமருப்பு ஒன்றுடைய பிள்ளையன்று எனக்குத்
தந்தருள் புரிந்த தவப்பயன் ஈதெனச்
சிந்தை மகிழ்ந்து தேவர் தேவனும்
பூங்கொடி அடைத்த பொற்றாழ் நீங்கச்
சாங்குமுன் உரைத்த சக்கர பாணி
இக்கதை சொல்ல அக்கணி சடையனும்
மிக்க நல் விரதம் விருப்புட நோற்றபின்
மாதுமை அடைந்த வன்றாழ் நீக்கி
நாதனை நணுகிட நம்பனு நகைத்தான்
நானோ வந்து நகையா னதுவெனத்
தேனோர் மொழியால் தெலியக் கூறென
நன்மதி நுதலாய் நானிலந் தன்னில்
உன்மகன் நோன்பின் உறுதி அறிந்து
சிந்தை மகிழந்து சிரித்தேன் யானென
அந்தமில் அரனை ஆயிழை வணங்கிப்
பொருஞ்சூ ரறவேல் போக்கிய குமரன்
வரும்படி யானும் வருந்திநோற் பேனென
இறையவன் கதைசொல எந்திழை நோற்றபின்
குறமட மகளைக் குலமணம் புணர்ந்தோன்
சுடர்வடி வேலோன் தொல்வினை தீர்ந்து
தாதுமை வண்டுழந் தாமத் தானனை
மாதுமை யாளை வந்துகண் டனனே
கண்ணநீ கண்ணிலாக் கட்செவி யாதெனத்
தண்ணறுங் குழலுமை சாபம்இட் டதுவும்
அக்குநீ றணியும் அரன்முதல் அளித்த
விக்கின விநாயக விரதநோற்று அதன்பின்

சுடர்க்கதை ஏந்துந் துவள மாலையன்
விடர்ப்பணி உருவமட விட்டுநீங் கியதும்
பரிவுகொள் கூத்துடைப் பரமனு நோற்றுக்
கவுரி அன்று அடைந்த கபாடந் திறந்ததும்
வாசமென் குழலுடை மாதுமை நோற்பத்
தேசம் போகிய செவ்வேள் வந்ததும்
வானவர் நோற்று வரங்கள் பெற்றதும்
நாரத முனிவன் நவின்றிடக் கேட்டே
இந்நிலந் தன்னில் இவ்விர தத்ததை
மன்னவன் வச்சிர மாலிமுன் நோற்றுக்
காயத் தெழுந்த கடும்பிணி தீர்ந்து
மாயிரும் புவியின் மன்னனாய் வாழ்ந்து
தடமுலைத் திலோத்தமை தனைமணம் புணர்ந்து
மழவிடை போற்பல மைந்தரைப் பெற்றுக்
கடைமுறை வெள்ளியங் கயிலையில் உற்றான்
பரிவொடிவ் விரதம் பாரகந் தன்னில்
விரைகமழ் நறுந்தார் விக்கிரமா தித்தன்
மறிகடற் புவிபெற வருந்தி நோற்றிடுநாள்
மற்றவன் காதன் மடவரல் ஒருத்தி
இற்றிடும் இடையாள் இலக்கண சுந்தரி
மெத்தஅன் புடன்இவ் விரதநோற் பேனென
அத்தந் தன்னில் அணியிழை செறித்துச்
சித்த மகிழ்ந்து சிலநாள் நோற்றபின்
உற்ற நோன்பின் உறுதி மறந்து
கட்டிய விழையைக் காரிகை அவிழ்த்து
வற்றிய கொவ்வையின் மாடே போட
ஆங்கது தழைத்தே அலருந் தளிருமாய்ப்
பாங்குற ஓங்கிப் படர்வது கண்டு
வேப்பஞ் சேரியிற் போய்ச்சிறை இருந்த
பூப்பையில் குழல்சேர் பொற்றொடி ஒருத்தி
அவ்வியம் இல்லாள் அவ்விடந் தன்னிற்
கொவ்வை அடகு கொய்வாள் குறுகி
இழையது கிடப்பக் கண்டவள் எடுத்துக்
குழைதவிழ் வரிவழிக் கோதைகைக் கட்டி
அப்பமோடு அடைக்காய் அவைபல வைத்துச்

செப்பமுடனே திருந்திழை நோற்றிடக்
கரிமுகந் தண்ணல் கருணை கூர்ந்து
பண்டையில் இரட்டி பதம் அவளுக்கு அருளக்
கொண்டுபோய் அரசனுங் கோயிலுள் வைத்தான்
விக்கிரமா தித்தன் விழிதுயில் கொள்ள
உக்கிர மானஉடை மணி கட்டித்
தண்டையுஞ் சிலம்புந் தாளினின்று ஒலிப்பக்
கொண்டல் போல்வருங் குஞ்சர முகத்தோன்
மனமிகக் கலங்கு மன்னவன் தன்னிடங்
கனவினில் வந்து காரண மாக
இலக்கண சுந்தரி இம்மனை இருக்கிற்
கலக்கம் வந்திடுங் கழித்திடு புறத்தெனத்
துண்ணென எழுந்து துணைவியை நோக்கிக்
கண்ணுறக் கண்ட கனவின் காரணம்
அண்ணல் உரைத்திடும் அவ்வழி தன்னில்
ஆனை குதிரை அவைபல மடிவுற
மாநகர் கேடுறும் வகையது கண்டு
இமைப்பொழுது இவளிங்கு இருக்கலா காதுஎன
அயற்கடை யவனும் அகற்றிய பின்னர்
வணிகன் தனது மனைபுகுந்து இருப்ப
மணியும் முத்தும் வலியகல் லாய்விட
அணியிழை தன்னை அவனும் அகற்ற
உழவர்தம் மனையில் உற்றவள் இருப்ப
வளர்பயிர் அழித்து வளம்பல குன்ற
அயன்மனை அவரும் அகற்றிய பின்னர்க்
குயவன் மனையிற் கோற்றொடி செல்லக்
குயக்கலம் உடைந்து கொள்ளை போக
அயற்கடை அவனும் அகற்றிய பின்னர்த்
தூசுதூய தாக்குந் தொழிலோர் மனைபுகத்
தூசுகள் எல்லாந் துணிந்துவே றாகத்
தூசரு அவளைத் தூரஞ் செய்ய
மாலைக் காரன் வளமனை புகலும்
மாலை பாம்பாம் வகையது கண்டு

ஞால மெல்லா நடுங்கவந்து உதித்தாய்
சாலவும் பாவிநீ தான்யார் என்ன
வெம்மன மிகவும் மேவி முனிவுறா
அம்மனை அவனும் அகற்றிய பின்னர்
அவ்வை தன்மனை அவள் புகுந்திருப்ப
அவ்வை செல்லும் அகங்கள் தோறும்
வைதனர் எறிந்தனர் மறியத் தள்ளினர்
கைகொடு குற்றினர் கண்டோர் பழித்தனர்
அவ்வை மீண்டுதன் அகமதிற் சென்று
இவ்வகைக் கன்னிநீ யாரென வினாவக்
காத்தாண்டு உலகு கருணையோடு ஆண்ட
மார்த்தாண்ட ராசன் மாமகள் ஒருத்தி
எல்லார்க்கு மூத்தாள் இலக்கண சுந்தரி
சொல்லுவிக் கிரம சூரியன் மனையெனச்
சீர்கெட இருந்த தெரிவையை நோக்கி
நீரது கொண்டு நிலமெழு கிடுகெனச்
சாணி எடுக்கத் தையலுஞ் சென்றாள்
சாணியு உழுத்துத் தண்ணீர் வற்றிப்
பேணிய புழுவாய்ப் பெரிது தோன்ற
மானேர் விழியாள் வருந்துதல் கண்டு
தானே சென்று சாணி எடுத்துத்
தண்ணீர் கொணர்ந்து தரை மெழுக் கிட்டு
மண்ணிய வீட்டின் மணிவிளக் கேற்றிப்
புத்தகம் எடுத்து வாவெனப் புகலப்
புத்தகம் பாம்பாய்ப் பொருந்திநின்று ஆட
மெத்தவுள் நடுங்கி வீழ்ந்தவள் கிடப்பக்
கொவ்வையங் கனிவாய்க் கோதையை விலக்கி
அவ்வை தானே அகமதிற் சென்று
புத்தம் எடுத்துப் பொருந்தப் பார்த்து
வித்தக நம்பி விநாயக மூர்த்தி
கற்பகப் பிள்ளைசெய் காரியம் இதுவென
உத்தமி அவ்வை உணர்ந்து முன் அறிந்து
தவநெறி பிழைத்த தையலை நோக்கி
நுவலரும் விநாய நோன்புநோற் றிடுகெனக்
கரத்து மூஏழுஇழைக் காப்புக் கட்டி

அப்பமும் அவலும் மாம்பல பண்டமுஞ்
செப்பம தாகத் திருமுன் வைத்தே
அவ்வை கதைசொல ஆயிழை கேட்டு
மத்தகக் களிற்றின் மீகாவிர தத்தை
வித்தக மாக விளங்கிழை நோற்றுக்
கற்பக நம்பி கருணைபெற்ற அதன் பின்
சக்கர வாள சைனியத் தோடு
விக்கிமா தித்தன் வேட்டையிற் சென்று
தானுஞ் சேனையுந் தண்ணீர் விரும்பி
எவ்வகை செய்வோம் எனஉளம் மெலிந்தே
அவ்வை தன்மனை அங்கவர் அணுக
எய்துந் தாகமும் இளைப்புங் கண்டு
செவ்வே அவற்றைத் தீர்க்க எண்ணி
இலக்கண சுந்தரி என்பவள் தன்னை
அப்பமும் நீரும் அரசற்கு அருளெனச்
செப்பிய அன்னை திருமொழிப் படியே
உண்ணீர்க் கரகமும் ஒருபணி காரமும்
பண்ணேர் மொழியார் பார்த்திபற்கு உதவ
ஒப்பறு படையும் உயர்படை வேந்தனும்
அப்பசி தீர அருந்திய பின்னர்
ஆனை குதிரை அவைகளும் உண்டுந்
தானது தொலையாத் தன்மையைக் கண்டே
இவ்வகை சமைத்தநீ யாரென வினவ
மவ்வலங் குழலாள் மௌனமாய் நிற்ப
அவ்வை தான் சென்று அரசர்க்கு உரைப்பாள்
கணபதி நோன்பின் காரணங் காணிது
குணமுடை இவளுன் குலமனை யாட்டி
இலக்கண சுந்தரி என்று அவ்வை கூற
மங்கையை நோக்கி மனமிக மகிழ்ந்து
திங்கணேர் வெள்ளிச் சிவிகையில் ஏற்றிக்
கொண்டூர் புகுந்தான் கொற்ற வேந்தனும்
ஒண்டொடி யாரில் உயர்பதம் உதவினன்
சிந்துர நுதலார் சென்றுஅடி பணியச்
சுந்தரி திருந்தாள் சுகத்துடன் மகிழ்ந்தே.



# முருகன் துதி

# கந்த சஷ்டி கவசங்கள்

## காப்பு

### நேரிசை வெண்பா

*துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சில்*
*பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் கதித்தோங்கும்*
*நிஷ்டையும் கைகூடும் நிமலரருள்*
*கந்தர் சஷ்டி கவசந் தனை.*

### குறள் வெண்பா

*அமரரிடர் தீர வமரம் புரிந்த*
*குமரனடி நெஞ்சே குறி.*

### நூல்

திருப்பரங் குன்றுறை தீரனே குகனே
மருப்பிலாப் பொருளே வள்ளி மனோகரா
குறுக்குத் துறையுறை குமரனே அரனே
இருக்கும் குருபரா ஏரகப் பொருளே
வையா புரியில் மகிழ்ந்துவாழ் பவனே
ஒய்யார மயில்மேல் உகந்தாய் நமோ நமோ
ஐயா குமரா அருளே நமோ நமோ
மெய்யாய் விளங்கும் வேலா நமோ நமோ
பழநியங் கிரிவாழ் பகவா நமோ நமோ
மழுவுடை முதல்வன் மதலாய் நமோ நமோ
விராலி மலையுறை விமலா நமோ நமோ
மராமரம் துளைத்தோன் மருகா நமோ நமோ
சூரசங் கார துரையே நமோ நமோ
வீரவே லேந்தும் வேளே நமோ நமோ
பன்னிரு கரமுடையப் பரமா நமோ நமோ

கண்களீ ராறுடைக் கந்தா நமோ நமோ
கோழிக்கொடியுடைக் கோவே நமோ நமோ
ஆழிசூழ் செந்தில் அமர்ந்தாய் நமோ நமோ
சசச சசச ஓம் ரீம்
ரரர ரரர ரீம் ரீம்
வவவ வவவ ஆம் ஹோம்
ணணண ணணண வாம் ஹோம்
பபப பபப சாம் சூம்
வவவ வவவ கௌம் ஓம்
லல லிலி லுலு நாட்டிய அட்சரம்
கக கக கக கந்தனே வருக
இக இக இக ஈசனே வருக
தக தக தக சற்குரு வருக
பக பக பக பரந்தாமா வருக
வருக வருகவென் வள்ளலே வருக
வருக வருகநிஷ் களங்கனே வருக
தாயென் நின்னிரு தாள் பணிந்தேன் எனைச்
சேயெனக் காத்தருள் திவ்யமா முகனே
அல்லும் பகலும் அனுதினம் என்னை
எல்லிலும் இருட்டிலும் எரிபகல் படுக்கை
வல்ல விடங்கள் வராமல் தடுத்து
நல்ல மனத்துடன் ஞான குருஉனை
வணங்கித் துதிக்க மகிழ்ந்துநீ வரங்கள்
இணங்கியே அருள்வாய் இறைவா எப்போதும்
கந்தா கடம்பா கார்த்திகேய
நந்தன் மருகா நாரணி சேயா
எண்ணிலாக் கிரியில் இருந்து வளர்ந்தனை
தண்ணளி அளிக்கும் சாமிநாதா
சிவகிரி கயிலை திருப்பதி வேளூர்
தவக்கதிர் காமம் சார்திரு வேரகம்
கண்ணுள் மணிபோல் கருதிடும் வயலூர்

விண்ணவர் ஏத்தும் விராலி மலைமுதல்
தன்னிக ரில்லாத் தலங்களைக் கொண்டு
சன்னதி யாய்வளர் சரவண பவனே
அகத்திய முனிவனுக் (கு) அன்புடன் தமிழைச்
செகத்தோர் அறியச் செப்பிய கோவே
சித்துகள் ஆடிச் சிதம்பர சக்கரம்
நர்த்தனம் புரியும் நாற்பத்தெண் கோணம்
வித்தாய் நின்ற மெய்ப் பொரு ளோனே
உத்தம குணத்தாய் உம்பர்கள் ஏறே
வெற்றிக் கொடியுடை வேளே போற்றி
பக்திசெய் தேவர் பயனே போற்றி
சித்தம் மகிழ்ந்திடச் செய்தவோ போற்றி
அத்தன் அரியயன் அம்பிகை லட்சுமி
வாணி யுடனே வரையுமாக் கலைகளும்
தானே நானென்று சண்முக மாகத்
தாரணி யுள்ளோர் சகலரும் போற்றப்
பூரண கிருபை புரிபவா போற்றி
பூதலத் துள்ள புண்ணியதீர்த் தங்கள்
ஓதமார் கடல்சூழ் ஒளிர்புவி கிரிகளில்
எண்ணிலாத் தலங்கள் இனிதெழுந் தருள்வாய்
பண்ணும் நிட்டைகள் பலபல வெல்லாம்
கள்ளம் அபசாரம் கர்த்தனே எல்லாம்
எள்ளினுள் எண்ணய்போல் எழிலுடை உன்னை
அல்லும் பகலும் ஆசாரத்துடன்
சல்லாப மாய்உனைத் தானுறச் செய்தால்
எல்லா வல்லமை இமைப்பினில் அருளி
பல்லா யிரநூல் பகர்ந்தருள் வாயே
செந்தில் நகர்உறை தெய்வானை வள்ளி
சந்ததம் மகிழும் தயாபர குகனே
சரணம் சரணம் சரவண பவஓம்
அரன் மகிழ் புதல்வா ஆறுமுகா சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

## இரண்டாவது கவசம் - திருச்செந்தூர்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடனஞ் செய்யும் மயில்வா கனனார்
கையில் வேலால்எனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக.
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் றீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன் றினம் வருக

ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல் பூஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்
றுன்றிரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க

விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே யிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க.
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கை ளிரண்டும் கருணை வேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்மெனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பக றன்னில் வச்ரவேல் காக்க
அரையிரு டன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமத நீக்கிச் சதுர்வேல் காக்க

காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியி னோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைக டின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம ராக்ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லினு மிருட்டிலும் எதிர்படு மண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்தோடிட
ஆனை யடியினில் அரும்பாவைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமு மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைத்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோட
படியினின் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட

செக்கு செக்கு செதிற்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகல்வன் றணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதி னிலிறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்பும் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவருமெனக்கா
மண்ணாளரசரும் மகிழ்துற வாகவும்
உன்னைத் துகிக்க உன்றிரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்காமத்துறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமாரா

ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல் வராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமக ணன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினே னாடினேன் பரவச மாக
ஆடினே னாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியிலணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புட னிரக்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவ னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந்தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்த சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததை
காலையில் மாலையில் கருத்துடனாளும்
ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒரு நாள் முப்பத் தாறுருக் கொண்டு

ஒதியே செபித்து உகந்து நீறணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்
திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டா வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாற் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத் தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெற்றிப் புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில் நட மீடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணம் சரவண பவஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்.

## மூன்றாவது கவசம் - பழனிமலை

திருவா வினன்குடி சிறக்கும் முருகா
குருபரா குமரா குழந்தைவே லாயுதா
சரவணா சண்முகா சதாசிவன் பாலா
இரவலர் தயாபரா ஏழைபங் காளா
பரமேஸ் வரிக்குப் பாலா தயாபரா
வரமெனக்(கு) அருள்வாய் வாமனன் மருகா
இரண்டாயிரம் வெள்ளம் யோகம் படைத்தவா
திரண்டா ருகமனம் தீர்க்கம் படைத்தவா
இலட்சத் திருநான்கு நற்றம்பி மாருடன்
பட்சத்துடனே பராசக்தி வேலதாய்
வீர வாகு மிகுதள கர்த்தனாய்
சூரசம் காரா துஷ்டநிஷ் டூரா
கயிலாய மேவும் கனகசிம் மாசனா
மயிலேறும் சேவகா வள்ளி மனோகரா
அகத்திய மாமுனிக்(கு) அருந்தமிழ் உரைத்தவா
சுகத்திரு முருகாற் றுப்படை சொல்லிய
நக்கீரன் நற்றமிழ் நலமென வினவிக்
கைக்கீழ் வைக்கும் மனமிசைக் குதவா
திருவரு ணகிரி திருப்புகழ் பாட
இரும்புகழ் நாவில் எழுதிப் புகழ்ந்தவா
ஆயிரத் தெட்டாம் அருள்சிவ தலத்தில்
பாயிரம் தோத்திரம் பாடப் புகழ்ந்தவா
எண்ணா யிரம்சமண் எதிர்கழு வேற்றி
விண்ணோர் குமாரன் வியாதியைத் தீர்த்தவா
குருவாம் பிரமனைக் கொடுஞ்சிறை வைத்து
உருப்பொருள் வேதம் உரைத்தாய் சிவனுடன்
கருதிமெய் யோகம் சொல்லிய(து) ஒருமுகம்
அருள்பெரு மயில்மீ(து) அமர்ந்தது ஒருமுகம்
வள்ளிதெய் வானையை மருவிய(து) ஒருமுகம்

தெள்ளுநான் முகன்போல் சிருட்டிப்ப(து) ஒருமுகம்
சூரனை வேலால் துணித்த(து) ஒருமுகம்
ஆரணம் ஓதும் அறுமறை யடியார்
தானவர் வேண்டுவ தருவ(து) ஒருமுகம்
ஞான முதல்வர்க்கு நற்பிள்ளை பழநி
திருப்பரங் கிரிவாழ் தேவா நமோ நம
பொருட் செந்தில் அம்பதி புரப்பாய் நமோ நம
ஏரகம் தனில்வாழ் இறைவா நமோ நம
கூரகம் ஆவினன் குடியாய் நமோ நம
சர்வசங் கரிக்குத் தனயா நமோ நம
உறுசோலை மலைமேல் உகந்தாய் நமோ நம
எல்லா கிரிக்கும் இறைவா நமோ நம
சல்லாப மாக சண்முகத் துடனே
எல்லாத் தலமும் இனிதெழுந் தருளி
உல்லா சத்துறும் ஓங்கார வடிவே
மூல வட்டத்தில் முளைத்தெழும் ஜோதியை
சர்வ முக்கோணத் தந்தமுச் சத்தியை
வேலா யுதமுடன் விளங்கிடும் குகனைச்
சீலமார் வயலூர்ச் சேந்தனைத் தேவனை
கைலாச மேருவா காசத்தில் கண்டு
பைலாம் பூமியும் பங்கய பார்வதி
மேலும் பகலும் விண்ணுரு வேத்தி
நாற்கோ ணத்தில் நளினமாய் அர்ச்சனை
கங்கை யீசன் கருதிய நீர்புரை
செங்கண்மால் திருவும் சேர்ந்துசெய் அர்ச்சனை
அக்கினி நடுவே அமர்ந்த ருத்திரன்
முக்கோண வட்டம் முதல்வாயு ருத்திரி
வாய்அறு கோணம் மகேசுவரன் மகேசுவரி
ஐயும் கருநெல்லி வெண்சாரை தன்மேல்
ஆகாச வட்டத்(து) அமர்ந்த சதாசிவன்
பாகமாம் வெண்மைப் பராசக்தி கங்கை

தந்திர அர்ச்சனை தலைமேல் கொண்டு
மந்திர மூலத்தில் வாசியைக் காட்டி
அக்கினிக் குதிரை ஆகாசத் தேவி
மிக்கமாய் கருநெல்லி வெண்சாரை உண்பவர்
பாகமாய் ரதமும் பகல்வழி யாவர்
சாகா வகையும் தன்மை அறிந்து
ஐந்து ஜீவனுடன் ஐயஞ்சு கல்பமும்
விந்தை உமைசிவன் மேன்மையும் காட்டி
சந்திர சூரியன் தம்முடன் அக்கினி
அந்தி ரனைக்கண்(டு) அறிந்தே யிடமாய்ச்
சிந்தையுள் ஏற்றுச் சிவசம்பு தன்னை
மந்திர அர்ச்சனை வாசிவா என்று
தேறுமுகம் சென்னி சிவகிரி மீதில்
ஆறு முகமாய் அகத்துள்ளே நின்று
வாசல் ஒன்பதையும் வளமுடன் வைத்து
யோசனை ஐங்கரன் உடன் விளையாடி
மேலைக் கருநெல்லி வெண்சாரை உண்டு
வாலைக் குழந்தை வடிவையும் காட்டி
நரைதிரை மாற்றி நாலையும் காட்டி
உரைசிவ யோகம் உபதேசம் செப்பி
மனத்தில் பிரியா வங்கண மாக
நினைத்த படியென் நெஞ்சத் திருந்து
அதிசயம் என்றுன் அடியார்க்(கு) இரங்கி
மதியருள் வேலும் மயிலுடன் வந்து
நானே நியெனும் லட்சணத் துடனே
தேனே என்னுளம் சிவகிரி எனவே
ஆறா தாரத்(து) ஆறு முகமும்
மாறா திருக்கும் வடிவையும் காட்டிக்
கனவிலும் நனவிலும் கண்டுனைத் துதிக்க
தனதென வந்து தயவுடன் இரங்கிச்
சங்கொடு சக்கரம் சண்முக தெரிசனம்

எங்கு நினைத்தாலும் என்முன் னேவந்து
அஷ்டாவ தானம் அறிந்துடன் சொல்லத்
தட்டாத வாக்கும் சர்வா பரணமும்
இலக்கணம் இலக்கியம் இசையறிந் துரைக்கத்
துலக்கிய காவியம் சொற்பிர பந்தம்
எழுத்துச் சொற்பொருள் யாப்பல ங்காரம்
வழுத்தும் என் நாவில் வந்துனி திருந்தே
அமுத வாக்குடன் அடியார்க்கும் வாக்கும்
சமுசார சாரமும் தானே நிசமென
வச்சிரம் சரீரம் மந்திர வசீகரம்
அட்சரம் யாவும் அடியேனுக்கு உதவி
வல்லமை யோகம் வசீகர சக்தி
நல்லஉன் பாதமும் நாடிய பொருளும்
சகலகலை ஞானமும் தனக்கெனக் கருளி
செகதல வசீகரம் திருவருள் செய்து
வந்த கலிபிணி வல்வினை மாற்றி
இந்திரன் தோகை எழில்மயில் ஏறிக்
கிட்டவே வந்து கிருபை பாலிக்க
அட்டதுட் டமுடன் அநேக மூர்க்கமாய்
துட்டதே வதையும் துட்டப் பிசாசும்
வெட்டுண்ட பேயும் விரிசடைப் பூதமும்
வேதாளம் கூளி விடும்பில்லி வஞ்சனை
பேதாளம் துர்க்கை பிடாரி நடுநடுங்க
பதைபதைத் தஞ்சிடப் பாசத்தால் கட்டி
உதைத்து மிதித்தங்(கு) உருட்டி நொறுக்கிச்
சூலத்தாற் குத்தித் தூளுதூ ளுருவி
வேலா யுதத்தால் வீசிப்பருகி
மழுவிட் டேவி வடவாக் கினிபோல்
தழுவிஅக்ர கினியாய்த் தானே எரித்துச்
சிதம்பர சக்கரம் தேவி சக்கரம்
மதம்பெறும் காளி வல்ல சக்கரம்

மதியணி சம்பு சதாசிவ சக்கரம்
பதிகர்ம வீர பத்திரன் சக்கரம்
திருவை குண்டம் திருமால் சக்கரம்
அருள்பெருந் திகிரி அக்கினிச் சக்கரம்
சண்முக சக்கரம் தண்டாயுதத்தால்
விம்ம அடிக்கும் எல்லாச் சக்கரமும்
ஏகரூபமாய் என்முன்னே நின்று
வாகனத் துடன் என் மனத்துள் இருந்து
தம்பனம் மோகனம் தயவாம் வசீகரம்
இம்பமா கருடணம் மேவுமுச் சாடனம்
வம்பதாம் பேதனம் வலிதரும் ஆரணம்
உம்பர்கள் ஏத்தும் உயிர்வித் வேடணம்
தந்திர மந்திரம் தருபணி அட்சரம்
உந்தன் விபூதி உடனே சபித்து
கந்தனின் தோத்திரம் கவசமாய்க் காக்க
எந்தன் மனத்துள் ஏதுவேண்டியதும்
தந்துரட் சித்தருள் தயாபரா சரணம்
சந்தம் எனக்கருள் சண்முகா சரணம்
சரணம் சரணம் சட்கோண இறைவா
சரணம் சரணம் சத்துரு சம்காரா
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்!

## நான்காவது கவசம் - திருவேரகம்
## (சுவாமி மலை)

ஓமெனும் பிரணவம் உரைத்திடச் சிவனார்
காமுற உதித்த கனமறைப் பொருளே
ஓங்கார மாக உதயத் தெழுந்தே
ஆங்கார மான அரக்கர் குலத்தை
வேரறக் களைந்த வேலவா போற்றி
தேராச் சூரரைத் துண்ட துண்டங்களாய்
வேலா யுதத்தால் வீசி அறுத்த
பாலா போற்றி பழநியின் கோவே
நான்கு மறைகள் நாடியே தேடும்
மான்மரு கோனேவள்ளி மணாளனே
நானெனும் ஆண்மை நண்ணிடா(து) என்னைக்
காணநீ வந்து காப்பதுன் கடனே
காளிகூளி கங்காளி ஓங்காரி
சூலி கபாலி துர்க்கை யேமாளி
போற்றும் முதல்வா புனித குமாரா
சித்தர்கள் போற்றும் தேசிகா போற்றி
ஏகாட் சரமாய் எங்கும் தானாகி
வாகாய் நின்ற மறைமுதற் பொருளே
துதியட் சரத்தால் தொல்லுல(கு) எல்லாம்
அதிசய மாக அமைந்தவா போற்றி
திரியாட் சரத்தால் சிவன்அயன் மாலும்
விரிபா ருலகில் மேன்மை யுற்றவனே
சதுரட் சரத்தால் சாற்றுதல் யோகம்
மதுரமாய் அளிக்கும் மயில்வா கனனே
பஞ்சாட் சரத்தால் சாற்றுல் யோகம்
தஞ்சமென் றோரைத் தழைத்திடச் செய்தனே
நெஞ்சகத்(து) இருக்கும் நித்தனே சரணம்

அஞ்சலி செய்த அமரைக் காக்கும்
ஆறு கோணமாய் ஆறெழுத் தாகி
ஆறு சிரமும் அழகிய முகமும்
ஆறிரு செவியும் அமர்ந்த மார்பும்
ஆறிரு கண்ணும் அற்புத வடிவும்
சரவனனை வந்த சடாட்சரப் பொருளே
அரனயன் வாழ்த்தும் அப்பனே கந்தா
கரங்கள்பன் னிரய்டில் கதிரும்ஆ யுதத்தால்
தரங்குலைத்(து) ஓடத் தாராக சுரன்முதல்
வேரறச் சூர்க்குலம் முடித்து மகிழ்ந்தோய்
சீர்திருச் செந்தூர்த் தேவதேச னாதிப
அஸ்ட குலாசலம் யாவையும் ஆகி
இஸ்டசித் திகளருள் ஈசன் புதல்வா
துட்டசம் காரா சுப்பிர மண்யா
மட்டிலா வடிவே வையாபுரித் துரையே
எய்கோ ணத்துள் இயங்கிய நாரணன்
கண்கொளாக் காட்சி காட்டிய சடாட்சர
சைவம் வைணம் சமரச மாக
தைவமாய் விளக்கும் சரவண பவனே
சரியை கிரியை சார்ந்தநல் யோகம்
இரவலர்க்(கு) அருளும் ஈசா போற்றி
ஏதுசெய் திடினும் என்பால் இரங்கிக்
கோதுகள் இல்லாக் குணமெனக் கருளித்
தரிசனம் கண்ட சாதுவோ(டு) உடன்யான்
அருச்சனை செய்ய அனுக்கரம் அருள்வாய்
பில்லிவல் வினையும் பீனிச மேகம்
வல்ல பூதங்கள் மாயமாய்ப் பறக்க
அல்லலைப் போக்கிநின் அன்பரோ(டு) னென்னைச்
சல்லாப மாகச் சகலரும் போற்ற
கண்டு களிப்புறக் கருணை அருள்வாய்

அண்டர் நாயகனே அருமறைப் பொருளே
குட்டிச் சாத்தான் குணமிலா மாடன்
தட்டிலா இருளன் கண்டிபே தாளம்
சண்டமா முனியும் தக்கராக் கதரும்
மண்டை வலியோடு வாதமும் குன்மமும்
சூலைகா மாலை சோக்கலும் சயமும்
மூல ரோகங்கள் முடக்குள் வலிப்பு
திட்டு முறைகள் தெய்வ சாபம்
குட்டம் சோம்பல் கொடிய வாந்தியும்
கட்டிலாக் கண்ணோய் கண்ணேறு முதலா
வெட்டுக் காயம் வெவ்விடம் அனைத்தும்
உன்னுடைய நாமம் ஓதியே நீறிடக்
கன்னலோன் றதனில் களைந்திடக் கருணை
செய்வதுன் கடனே செந்தில் நாயகனே
தெய்வ நாயகனே தீரனே சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

## ஐந்தாவது கவசம் - திருத்தணிகை

கணபதி துணைவா கங்காதரன் புதல்வா
குணவதி உமையாள் குமரா குருபரா
வள்ளி தெய்வானை மருவிய நாயகா
துள்ளி மயிலேறும் சுப்பிர மணியா
அழகொளிப் பிரபை அருள்வடி வேலா
பழநி நகரில் பதியநு கூலா
திருவா வினன்குடி சிறக்கும் முருகா
அருள்சேர் சிவகிரி ஆறு முகா
சண்முக நதியும் சராபன்றி மலையும்
பண்முக நிறைந்த பழநிக்கு இறைவா
ஆறாது நூற்று அட்டமங் களமும்
வீரவை யாபுரி விளங்கும் தயாபரா
ஈராறு பழநி எங்கும் தழைக்கப்
பாராறு சண்முகம் பகரும் முதல்வா
ஆறு சிரமும் ஆறு முகமும்
ஆறிரு புயமும் ஆறிரு காதும்
வடிவம் சிறந்த மகரகுண் டலமும்
தடித்த பிரபைபோல் சார்ந்த சிந்தூரமும்
திருவெண் ணீறணி திருநுதல் அழகும்
கருணை பொழியும் கண்ணான்கு மூன்றும்
குனித்த புருவமும் கூரிய மூக்கும்
கனித்த மதுரித்த கனிவாய் இதழும்
வெண்ணிலாப்பிரபைபோல் விளங்கிய நகையும்
எண்ணிலா அழகாய் இலங்குபல் வரிசையும்
காரிகை உமையாள் களித்தே இனிதெனச்
சீர்தரும் வள்ளி தெய்வநா யகியாள்
பார்த்தழ கென்னப் பரிந்த கபோலமும்
வார்த்த கனகம்போல் வடிவேல் ஒளியும்
முறுக்குமேல் மீசையும் மூர்க்கம் சிறக்க
மறுக்கம் சூரர்மேல் வாதுகள் ஆட
ஈசுவரன் பார்வதி எடுத்து முத்தாடி

ஈசுவரன் வடிவை மிகக்கண் டனுதினம்
கையால் எடுத்துக்கனமார்(பு) அணைத்தே
ஐயா! குமரா! அப்பனே! என்று
மார்பினும் தோளினும் மடியினும் வைத்துக்
காத்தி கேயாஎனக் கருணையால் கொஞ்சி
முன்னே கொட்டி முருகா! வருகவென்(று)
அந்நேரம் வட்டமிட்ட டாடி விளையாடித்
தேவியும் சிவனும் திருக்கண் களிகூரக்
கூவிய மயிலேறும் குருபரா வருக
தாவிய தகரேனும் சண்முகா வருக
ஏவிய வேலேந்தும் இறைவா வருக
கூவிய சேவற் கொடியாய் வருக
பாவலர்க் கருள்சிவ பாலனே வருக
அன்பர்க் கருள்புரி ஆறுமுகா வருக
பொன்போல் சரவணைப் புண்ணியா வருக
அழகிற் சிவனொளி அய்யனே வருக
களபம் அணியுமென் கந்தனே வருக
மருமலர்க் கடம்பணி மார்பா வருக
மருவுவோர் மலரணி மணியே வருக
திரிபுர பவனெனும் தேவே வருக
பரிபுர பவனெனும் பவனே வருக
சிவகிரி வாழ்தெய்வ சிகாமணி வருக
காலில் தண்டை கலீர் கலீரென
சேலிற் சதங்கை சிலம்பு கலீரென
இடும்பனை மிதித்ததோர் இலக்கிய பாதமும்
அடும்பல வினிகளை அகற்றிய பாதமும்
சிவகிரி மீதினில் திருநிறை கொலுவும்
நவகிரி அரைமேல் இரத்தினப் பிரபையும்
தங்கரை ஞாணும் சாதிரை மாமணி
பொங்குமாந் தளிர்சேர் பொற்பீதாம் பரமும்
சந்திர காந்தச் சரிகைத் தொங்கலும்
மந்திர வாழும்வங்கிச் சரிகையும்
அருணோ தயம்போல் அவிர்வன் கச்சையும்

ஒருகோடி சூரியன் உதித்த பிரபைபோல்
கருணையால் அன்பரைக் காத்திடும் அழகும்
இருகோடி சந்திரன் எழிலொட்டி யாணமும்
ஆயிரம் பணாமுடி அணியுமா பரணமும்
வாயில்கள் மோழியாய் வழங்கியசொல்லும்
நாபிக் கமலம் நவரோம பந்தியும்
மார்பில் சவ்வாது வாடை குபீரென
புழுகு பரிமளம் பொருந்திய புயமும்
ஒழுகிய சந்தனம் உயர்கத் தூரியும்
வலம்புரிச் சங்கொலி மணியணி மிடறும்
நலம்சேர் உருத்திர அக்க மாலையும்
மாணிக்கம் முத்து மரகதம் நீலம்
ஆணிவை டூரியம் அணிவைரம் பச்சை
பவளகோ மேதகம் பதித்தவச் ராங்கியும்
நவமணிப் பிரபைபோல் நாற்கோடி சூரியன்
அருணோ தயமெனச் சிவந்த மேனியும்
கருணை பொழியும் கடாட்சவீட் சணமும்
கவசம் தரித்தருள் காரண வடிவும்
நவவீரர் தம்முடன் நற்காட்சி யான
ஒருவகை வேலாயுதம் ஒருவகை சூலாயுதம்
ஒருவகை நிறைசங்கு ஒருவகை சகராயுதம்
ஒருவகை நிறைவில்லு ஒருவகை நிறையம்பு
ஒருவகை மந்திரவாள் ஒருவகை மாமழு
ஒருவகை மேற்குடை ஒருவகை தண்டாயுதம்
ஒருவகை சந்திராயுதம் ஒருவகை வல்லாயுதம்
அங்கையில் பிடித்த ஆயதம் அளவிலாப்
பங்கயக் கமலப் பன்னிரு தோளும்
முருக்கம் சிறக்கும் மருகா சரவணை
இருக்கும் குருபரா ஏழை பங்காளா
வானவர் முனிவர் மகிழ்ந்து கொண்டாடத்
தானவர் அடியவர் சகலரும் பணியப்
பத்திர காளி பரிவது செய்யப்
சக்திகள் எல்லாம் தாண்டவமாட

அஷ்ட பயிரவர் ஆனந்தமாட
துஷ்ட மிகுஞ்சூழிகள் சூழ்திசை காக்க
சத்த ரிஷிகள் சாந்தக மென்னச்
சித்தர்கள் நின்று சிவசிவா என்னத்
தும்புரு நாரதர் சூரிய சந்திரா
கும்பமா முனியும் குளிர்தா ரகையும்
அயன்மால் உருத்திரன் அஷ்ட கணங்கள்
நயமுடன் நின்று நாவால் துதிக்க
அஷ்ட லட்சுமி அம்பிகை பார்வதி
கட்டழகன் என்று கண்டுனை வாழ்த்த
இடும்பா யுதன்நின் இணையடி பணிய
ஆடம் தேவகன்னி ஆலத்தி எடுக்க
தேவ கணங்கள் செயசெய என்ன
ஏவற் கணங்கள் இந்திரர் போற்ற
கந்தருவர் பாடிக் கவரிகள் வீசிக்
சார்ந்தனம் என்ன சார்வரும் அனேக
பூதம் அடிபணிந் தேத்த வேதாளம்
பாதத்தில் வீழ்ந்து பணிந்துகொண் டாட
அரகர என்றடியர் ஆலவட்டம் பிடிக்க
குருபரன் என்றன்பர் கொண்டாடி நிற்க
குடையும் சேவலின் கொடியும் சூழ
இடை விடாமல்உன் ஏவலர் போற்றச்
சிவனடி யார்கள் திருப்பாத மேந்த
நவமெனும் நால்வரை ஏற்ற சரமண்டலம்
உருத்திர வீணை நாதசுர மேளம்
தித்திமி என்று தேவர்கள் ஆடச்
சங்கீத மேளம் தாளத் துலங்க
மங்கள மாக வைபவம் இலங்க
தேவ முசரடிக்கத் தினமேள வாத்தியம்
சேவல் கொடியுஞ் சிறப்புடன் இலங்க
நந்திகே சுவரன் மீது ஏறிய நயமும்
வந்தனஞ் செய்ய வானவர் முனிவர்
எங்கள் பார்வதியும் ஈசனும் முன்வர

ஐங்கரன் முன்வர ஆறுமா முகவன்
வீர மயிலேறி வெற்றிவேல் எடுத்துச்
சூரன்மேல் ஏவத் துடித்தவன் மடியச்
சிங்கமுகா சூரன் சிரமது உருளத்
துங்கக் கயமுகன் சூரனும் மாள
அடலற்ற குலத்தை அறுத்துச் சயித்து
விடவே லாயுதம் வீசிக் கொக்கரித்துத்
தம்ப மெனும்சயத் தம்பம் நாட்டி
அன்பர்கள் தம்மை அனுதினங் காத்துத்
திருப்பரங் குன்றஞ் சீர்ப்பதி செந்தூர்
திருவாவி னன்குடி திருவே ரகமும்
துய்ய பழநி சுப்பிர மணியன்
மெய்யாய் விளங்கும் விராலி மலைமுதல்
அண்ணா மலையும் அருள்மேவுங் கயிலை
கண்ணிய மாவூற்று கழுகுமா மலையும்
முன்னிமை யோர்கள் முனிவர் மனத்திலும்
நன்னய மாய்ப்பணி நண்பர் கனதிலும்
கதிர்காமம் செங்கோடு கதிர்வேங் கடமும்
பதினா லுலகத்திலும் பக்தர் மனதிலும்
எங்குந் தானவ னாயிருந்(து) அடியர்தம்
பங்கி லிருந்து பாங்குடன் வாழ்க
கேட்ட வரமும் கிருபைப் படியே
தேட்ட முடன் அருள் சிவகிரி முருகா
நாட்டு சிவயோகம் நாடிய பொருளும்
தாட்டிக மாய்எனக்கு) அருள் சண்முகனே
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.


# ஆறாவது கவசம் - பழமுதிர்ச்சோலை

சங்கரன் மகனே சரவண பவனே
ஐங்கரன் துணைவனே அமரர்தம் கோனே
செங்கண்மால் மருகனே தெய்வானை கேள்வனே
பங்கயம் போன்ற பன்னிரு கண்ணனே
பழநிமா மலையுறும் பன்னிரு கரத்தனே
அழகுவேல் ஏந்தும் ஐயனே சரணம்
சரவண பவனே சட்கோணத் துள்ளுறை
அரனருள் சுதனே அய்யனே சரணம்
சயிலொலி பவனே சடாட்சரத் தோனே
மயில்வா கனனே வள்ளலே சரணம்
திரிபுர பவனே தேவதேச னாபதி
குறமகள் மகிழும் குமரனே சரணம்
திகழொளி பவனே சேவற் கொடியாய்
நகமா யுதமுடை நாதனே சரணம்
பரிபுர பவனே பன்னிரு கையனே
தருணமிவ் வேளை தற்காத் தருளே
சவ்வும் ரவ்வுமாய் தானே யாகி
வவ்வும் ணவ்வுமாய் விளங்கிய குகனே
பவ்வும் உவ்வுமாய் பழமுதிர் சோலையில்
தவ்விய ஆடும் சரவண பவனே
குஞ்சரி வள்ளியைக் குலாவி மகிழ்வாய்
தஞ்சமென் றுன்னைச் சரணம் அடைந்தேன்
கொஞ்சிய உமையுடன் குழவியாய் சென்றங்(கு)
அஞ்சலி செய்தவள் அமுதம் உண்டு
கார்த்திகை மாதர் கனமார்(பு) அமுதமும்
பூர்த்தியாய் உண்ட புனிதனே குகனே
நவமைந்தர் சிவனால் நலமுடன் உதிக்கத்
தவமுடைய வீரவாகுவோ(டு) ஒன்பான்
தன்பிமா ராகத் தானையைக் கொண்ட

சப்பிர தாயா சண்முக வேலா
நவவீரர் தம்முடன் நவகோடி வீரரும்
கவனமாய் உருத்திரன் அளித்தே களித்துப்
பேதம் இல்லாமல் பிரமனைக் குருவாய்
ஓதிடச் செய்ய உடன் அவ்வேதனை
ஓமெனும் பிரணவத் துண்மைநீ கேட்கத்
தாமே யோசித்த சதுர்முகன் தன்னை
அமரர்கள் எல்லாம் அதிசயப்படவே
மமதையாய் அயனை வன்சிறை யிட்டாய்
விமலனும் கேட்டு வேகம தாக
உமையுடன் வந்தினி துவந்து புரிந்து
அயனைச் சிறைவிடென்(று) அன்பாய் உரைக்க
நயமுடன் விடுத்த ஞானபண் டிதனே
திருமால் அயன்சிவன் சேர்ந்து மூவரும்
கௌரி லட்சுமி கலை மகளுடனே
அறுவரோர் அம்சமாம் அரக்கரை வெல்ல
ஆறுமுகத்துடன் அவதரித் தோனே
சிங்கமுகா சூரன் சேர்ந்த கயமுகன்
பங்கமே செய்யும் பானு கோபனும்
சூரனோ டொத்த துட்டர்க ளோடு
கோரமே செய்யும் கொடியராக் கதரை
வேருடன் கெல்லி விண்ணவர் துன்பம்
ஆறிடச் செய்தவ வமர்கள் தமக்குச்
சேனா பதியாய்த் தெய்வீக பட்டமும்
தானாய்ப் பெற்ற தாட்டிகப் பெருமானே
திருப்பரங் குன்றம் செந்தூர் முதலாய்ச்
சிறப்புறு பழநி திருவே ரகமுதல்
எண்ணிலாம் தலங்களில் இருந்தாடும் குகனே
விண்ணவர் ஏத்தும்விநோத பாதனே
அன்பர்கள் துன்பம் அகற்றியாள் பவனே
தஞ்சமென்(று) ஓதினர் சமயம் அறிந்தங்(கு)

இன்பம் கொடுக்கும் ஏழைபங் காளா
கும்பமா முனிக்குக் குருதே சிகனே
தேன்பொழில் பழநித் தேவ குமாரா
கண்பார்த்(து) ஏனையாள் கார்த்திகேயாஎன்
கடநிஷ் டூரம் கவலைகள் மாற்றி
அஷ்ட லட்சுமிவாழ் அருளெனக்(கு) உதவி
இட்டமாய் என்முன் னிருந்து விளையாடத்
திட்டமாய் எனக்கருள் செய்வாய் குகனே
அருண கிரிதனக்(கு) அருளிய தமிழ்போல்
கருணையால் எனக்கு கடாட்சித் தருள்வாய்
தேவ ராயன் செப்பிய கவசம்
பூவலயத்தோர் புகழ்ந்து கொண்டாட
சஷ்டி கவசந் தான்செபிப்போரைச்
சிட்டராய்க் காத்தருள் சிவகிரி வேலா
வந்தென் நாவில் மகிழ்வுடன் இருந்து
சந்தத் தமிழ்திறம் தந்தருள் வோனே
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் தமிழ் தரும் அரனே
சரணம் சரணம் சங்கரன் சுதனே
சரணம் சரணம் சண்முகா சரணம்.

(கவசங்கள் முற்றிற்று)



# முருக நாமாவளி

வேல் முருகா மால்மருகா வா வா சண்முகா
கால் பிடித்தேன் காத்தருள வா வா சண்முகா

நால் வேதப் பொருளான நாதா சண்முகா
நல்லதெல்லாம் உன்பால் கொண்டாய் நாதா சண்முகா
செல்வமாகச்சிவை அணைக்கும் சேயேசண்முகா
செங்கதிர் வேல் தாங்கி என் தேவா சண்முகா

(வேல்)

நாறு மாலைணியமார்பா நாயகா சண்முகா
நாதவிந்து கலாதீத நாயகா சண்முகா
ஏறுமயில் வாகனனே ஏந்தலே சண்முகா
நீறணிந்தார் வினைபோக்கும் நீதனே சண்முகா

(வேல்)

வீடும் நாடும் நின்திருநாள் வேண்டினேன் சண்முகா
வீரன் சூரன் உடல் கிழித்த வேலனே சண்முகா
ஓடும் மனம் உன்னைநாட ஆடிவா சண்முகா
ஒருவனே என் வினையழித்த உத்தமா சண்முகா

(வேல்)

எல்லையில்லா ஆனந்தனே ஏகாந்தா சண்முகா
எங்கும் நிறைந்த அன்புருவே ஏமுருகா சண்முகா
தில்லையில் ஆடும் தேவி பாலகா சண்முகா
திருட்டுத்தனமாய்க் குறக்கொடியை கொண்டவா சண்முகா

(வேல்)

தொல்லையெலாம் கடந்த பதம் தந்திடாய் சண்முகா
தோத்தரித்தோம் எங்கள் முன்னே வந்திடாய் சண்முகா
கல்லையொத்த மனமுருகக் கருணை செய் சண்முகா
கல்லெனச்சிலம் பொலிக்க ஓடிவா சண்முகா

(வேல்)

★ ★ ★

| | | | |
|---|---|---|---|
| அன்பருக்கு அன்பனே நீ | வா | வா | முருகா |
| ஆறுபடை வீடுடையாய் | வா | வா | முருகா |
| இன்பமய சோதியே நீ | வா | வா | முருகா |
| ஈசனுமை பாலகனே | வா | வா | முருகா |
| உலக நாதன் மருமகனே நீ | வா | வா | முருகா |
| ஊமைக் கருள் புரிந்தவனே | வா | வா | முருகா |
| எட்டுக்குடி வேலவா நீ | வா | வா | முருகா |
| ஏறுமயில் ஏறியே நீ | வா | வா | முருகா |
| ஐங்கரனுக் கிளையவனே | வா | வா | முருகா |
| ஆறுமுக வேலவனே | வா | வா | முருகா |
| ஒய்யாரி வள்ளி லோலா | வா | வா | முருகா |
| ஓங்காரத் தத்துவமே | வா | வா | முருகா |
| ஔவைக் குபதேசித்தவா | வா | வா | முருகா |
| அகில லோக நாயகனே | வா | வா | முருகா |
| ஓடிவா நீ ஓடிவா நீ | வா | வா | முருகா |
| ஆடிவா நீ ஆடிவா நீ | வா | வா | முருகா |

★ ★ ★

| | | |
|---|---|---|
| குமரமலை வீற்றிருக்கும் | எங்கள் | குலதெய்வம் தேவ |
| குஞ்சரியை மணம்புரிந்த | எங்கள் | குலதெய்வம் |
| சரவணையில் வந்துதித்த | எங்கள் | குலதெய்வம் சிவ |
| சண்முகமாய் வந்துதித்த | எங்கள் | குலதெய்வம் |
| பழனிமலை வீற்றிருக்கும் | எங்கள் | குலதெய்வம் சிவ |
| பக்தர்களைக் காத்தருளும் | எங்கள் | குலதெய்வம் |
| பண்டாரம் போலிருக்கும் | எங்கள் | குலதெய்வம் தேவ |
| பச்சை மயிலேறி வரும் | எங்கள் | குலதெய்வம் |
| ஆண்டி வேடம் பூண்டிருக்கும் | எங்கள் | குலதெய்வம் அவர் |
| அண்டி னோரை ஆதரிக்கும் | எங்கள் | குலதெய்வம் |
| வேலாயுதம் தரித்த | எங்கள் | குலதெய்வம் வடி |
| வேல்முருக நாமம்படைத்த | எங்கள் | குலதெய்வம் |

தெண்டாயுதம் தரித்த எங்கள் குலதெய்வம் பால
தெண்டபாணி பேருடைய எங்கள் குலதெய்வம்
வீபூதி தரித்திருக்கும் எங்கள் குலதெய்வம் அவர்
வீரமயிலேறி வரும் எங்கள் குலதெய்வம்
ஆறுமுகமான பொருள் எங்கள் குலதெய்வம் அவர்
ஆறுபடை வீடுடைய எங்கள் குலதெய்வம்
சிவனாருக் குபதேசித்த எங்கள் குலதெய்வம் சிவ
சுப்ரமண்ய பேருடைய எங்கள் குலதெய்வம்
(எங்கள் குலதெய்வம்)

★ ★ ★

கார்த்திகேயா கலியுக வரதா கந்தா முருகா
கதிர்வடி வேலா (கார்த்தி)

தோத்திரஞ் செய்துணை துதித் தோம் காவாய்
தூய்மையும் அன்பும் துலங்கிடச் செய்வாய் (கார்த்தி)

சாத்திரக் கோத்திரச் சண்டையைத் தீர்ப்பாய்
சன்மார்க்க மொன்றே சகமிசைக் காப்பாய் (கார்த்தி)

பாரில் உனையே பணிந்திட வைப்பாய்
பக்தர்கள் கூட்டம் பரவிடப் பணிப்பாய் (கார்த்தி)

சீருடன் ஆத்ம சித்தியும் தருவாய்
பேரும் புகழும் பிணியது காப்பாய் (கார்த்தி)

ஆர்வக் கனலை அடியார்க் கீவாய்
அவனியில் அமைதி ஆண்டிட அருள்வாய் (கார்த்தி)

கார் மழை போல்நின் கருணையைப் பொழிவாய்
காங்கேயா ஷண்முகா கதிர்காமத் தேவே! (கார்த்தி)

★ ★ ★

# திருப்புகழ்

அகரமு மாகி யதிபனு மாகி
யதிகமு மாகி அகமாகி
அயனெனவாகி அரியென வாகி
அரனென வாகி அவர் மேலாய்
இகரமு மாகி யெவைகளு மாகி
யினிமையு மாகி வருவோனே
இருநில மீதி லெளியனும் வாழ
எனதுமு னோடி வரவேணும்
மகபதி யாகி மருவும்வ லாரி
மகிழ்களி கூரும் வடிவோனே
வனமுறை வேட னருளிய பூஜை
மகிழ்கதிர் காம முடையோனே
செககண சேகு தகுதிமி தோதி
திமியென ஆடு மயிலோனே
திருமலி வான பழமுதிர் சோலை
மலை மிசை மேவு பெருமாளே.

மகபதி யாகி மருவும்வ லாரி
மகிழ்களி கூரும் வடிவோனே
வனமுறை வேட னருளிய பூஜை
மகிழ்கதிர் காம முடையோனே
செககண சேகு தகுதிமி தோதி
திமியென ஆடு மயிலோனே
திருமலி வான பழமுதிர் சோலை
மலைமிசை மேவு பெருமாளே.

சரணகம லாலயத்தை அரைநிமிஷ நேரமட்டில்
தவமுறை தியானம்வைக்க அறியாத
சடகசட மூட்டி பலவினையி லேசனித்த
தமியன்மிடி யால்மயக்க முறுவேனோ
கருணைபுரி யாதிருப்ப தெனகுறையி வேளைசெப்பு
கயிடைலமலை நாதர்பெற்ற குமரோனே
கடகபுய மீதிரத்ந மணியணிபொன் மாலைசெச்சை
கமழுமண மார்கடப்ப மணிவோனே
தருணமிதை யாமிகுந்த கனமதுறு நீள்சவுக்ய
சகலசெல்வ யோகமிக்க பெருவாழ்வு
தகைமைசிவ ஞானமுத்தி பரகதியு நீகொடுத்து
தவிபுரிய வேணுநெய்த்த வடிவேலா
அருணதள பாதபத்ம மதுநிதமு மேதுதிக்க
அரியதமிழ் தானளித்த மயில்வீரா
அதிசயம நேகமுற்ற பழநிமலை மீதுதித்த
அழக திரு வேரகத்தின் முருகோனே.

அதல சேட னாராட அகில மேரு மீதாட
அபின காளி தானாட அவளோடன்
றதிர வீசி வாதாடும் விடையி லேறு வாராடே
அருகு பூத வேதாள மவையாட
மதுர வாணி தானாட மலரில் வேத னாராட
மருவு வானு ளோராட மதியாட
வனச மாமி யாராட நெடிய மாமனாராட
மயிலு மாடி நீயாடி வவேணும்
கதைவி டாத தோள்வீம னெதிர்கொள் வாளி யால் நீடு
கருத லார்கள் மாசேனை பொடியாகக்
கதறு காலி போய் மீள விஜய னேறு தேர் மீது
கனக வேத கோடுதி அலைமோதும்

கைத்தல நிறைகனி யப்பமொ டவல் பொரி
கப்பியகரிமுக னடிபேணிக்
கற்றிடுமடியவர் புத்தியி லுறைபவ
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடு மரன்மகன்
மற்பொருதிரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர் கொடு பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படுகிரிதனில்
முற்பட எழுதிய முதல் வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவனுறைரதம்
அச்சது பொடி செய்த அதிதீரா
அத்துயரதுகொடு சுப்ரமணிபடும்
அப்புனமதனிடை யிபமாகி
அக்குற மகளுடனச் சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

நாத விந்துக லாதீ நமோநம
வேத மந்த்ரசொ ரூபா நமோநம
ஞான பண்டித ஸாமீ நமோநம வெகுகோடி
நாம சம்புகு மாரா நமோநம
போக அந்தரி பாலா நமோநம
நாக பந்தம யூரா நமோநம பரசூரர்
சேத தண்டவி நோதா நமோநம
கீத கிண்கிணி பாதா நமோநம
தீர சம்ப்பரம வீரா நமோநம கிரிராஜ
தீப மங்கள ஜோதீ நமோநம
தூய அம்பல லீலா நமோநம
வேத குஞ்சரி பாகாநமோநம அருள்தாராய்

ஈதலும்பல கோலால பூஜையும்

ஓத லுங்குண ஆசார நீதியும்

ஈர முங்குரு சீர்பாத சேவையும் மறவாத

ஏழ்த லம்புகழ் காவேரி யால்விளை

சோழ மண்டல மீதே மனோகர

ராஜ கெம்பிர நாடாளு நாயக வயலூரா

திருமக ளுலாவு மிருபுய முராரி

திருமருக நாமப் பெருமாள்காண்

ஜெயகதலமும் வானு மிகுதிபெறு பாடல்

தெரிதரு குமாரப் பெருமாள் காண்

மருவுமடி யார்கள் மனதில்விளை யாடு

மரகதம யூரப் பெருமாள் காண்

மணிதரளம் வீசி யணியருவி சூழ

மருவுகதிர் காமப் பெருமாள் காண்

அருவரைகள் நீறு படஅசுரர் மாள

அமர் பொருத வீரப் பெருமாள் காண்

அரவுபிறை வாரி விரவுசடை வேணி

அமலர் குரு நாதப் பெருமாள் காண்

இருவினையிலாத தருவினைவிடாத

இமையவர்கு லேசப் பெருமாள் காண்

இலகுசிலை வேடர் கொடியினதி பார

இருதனவி நோதப் பெருமாளே.

எதிரி லாத பத்தி தனைமேவி

இனிய தாள்நி னைப்பை யிருபோதும்

இதய வாரி திக்கு ளுறவாகி

எனது ளேசி றக்க அருள்வாயே

கதிர காம வெற்பி லுறைவோனே

கனக மேரு வொத்த புயவீரா

மதுர வாணி யுற்ற கழலோனே

வழுதி கூனி மிர்த்த பெருமாளே.

சரத்தே யுதித்தா யுரத்தே குதித்தே
சமர்த்தா யெதிர்த்ததே வருசூரைச்
சரிப்போன மட்டே விடுத்தா யடுத்தாய்
தகர்த்தா யுடற்றா னிருகூறாச்;
சிரத்தே டுரத்தோ டறுத்தே குவித்தாய்
செகுத்தாய் பலத்தார் விருதாகச்
சிறைச்சேவல் பெற்றாய் வலக்கார முற்றாய்
திருத்தா மரைத்தா ளருள்வாயே
புரத்தார் வரத்தார் சரச்சே கரத்தார்
பொரத்தா னெதிர்த்தே வருபோது
பொறுத்தார் பரித்தார் சிரித்தா ரெரித்தார்
பொரித்தார் நுகற்பார் வையிலேபின்
கரித்தோ லுரித்தார் விரித்தார் தரித்தார்
கருத்தார் மருத்தூர் மதனாரைக்
கரிக்கோல மிட்டார் கணுக்கான முத்தே
கதிர்காம முற்றார் முருகோனே.

ஏழுகடல் மணலை அளவிடி னதிக
மெனதிடர் பிறவி அவதாரம்
இனியுன தபய மெனதுயி ருடலு
மினியுடல் விடுக முடியாது
கழுகொடு நரியு மெரிபுவி மறலி
கமலனு மிகவு மயர்வானார்
கடனுன தபய மடிமையு னடிமை
கடுகியு னடிகள் தருவாயே
விழுதிக முழகி மரகத வடிவி
விமலிமு னருளு முருகோனே
விரிதல மெரிய குலகிரி நெரிய
விசைபெறு மயிலில் வருவோனே

விசைபெறு மயிலில் வருவோனே
ஏழுகடல் குமற அவுணர்க ளுயிரை
யிரைகொளும் அயிலை யுடையோனே
இமையவர் முனிவர் பரவிய புலியு
ரினில்நட மருவு பெருமாளே.

உம்பர் தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவு தருவாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே.

ஆறிரு தடந்தோள் வாழ்க
ஆறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க
குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க
யானைதன் னணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க
வாழ்கசீர் அடியார் எல்லாம்



# விஷ்ணு துதி

மணிவயல் சூழ் அயோத்தி இனில்
தசரதன் தன் மகவாக மகத்திற்றோன்றி
யணிகெளும் சீதையை மணந்து
கரநாதி நிசாசரர்கள் அறக்கடிந்து
திணிபுய இராவணன் முதலோர் தமச்செகுத்துத்
தேவர்பயம் தீத்தழித்து பணியணைமேல்
கண்வளரும் பரந்தாமன் அடித்துணை என்பற்றதாமே.

வெள்ளியங் கிரியை மீதே
வேரோடும் எடுத்த வீரக்
கன்னவன் புயனாலைந்தும் கனகமா மௌலிபத்தும்
துண்ணியம் புவிமேல் வீழ
ஒருகணை தொடுத்துவிட்ட வன்னலம் புயமே
அண்ணல்
மலரடி வணக்கம் செய்வாம்.

வானவர் துயரைப் போக்க
வண்மைசேர் அயோத்தி வந்த
போனமாம் வஸ்துவாய்
அனாவுல களந்த மாயன்
தானவர் தமையொழித்து தகைபெரும் பதவியீந்து
மானிலத்தோர்களேத்த வைகுந்தம் ஏகினானே.

சுரர் முதலோர் ஏற்றெடுக்க கற்றூணில்
நரசிம்ம சொரூபமாகி
இரணியன் வல்லுயிர் குடித்து
ஹரி நமோ நமோ வென்று உள்ளிரங்கி நிற்கும்

ஒரு மதலை பிரகலாதனனை அழித்து
உலகமுய்ய திருவரவில்
அறிதுயில் கொண்ட மாந்தோன்
என் சிந்தையினில் தெளியும் தேவதேவே.

ஆரணனை யாரணத்துட் பொருளையண்ட
    மளந்தானை யளக்கரிய வாடலானைக்
காரணனைக் கரணங்கள் கடந்தோன் றன்னைக்
    கண்மணியைக் கண்மணிக்குள் வொளியாய் நின்ற
பூரணனை பூரணப்பொற் கலசக் கொங்கை
    பூமாது நாயகனைப் பொருவிற் செங்கை
வாரணனை வாரணமுன் வந்து தோன்று
    மாதவனைக் காதலுடன் வணங்கி வாழ்வோம்.



# சக்தி துதி
# அபிராமி அந்தாதி

## காப்பு

தார்அமர் கொன்றையும் சண்பக
மாலையும் சாத்தும்தில்லை
ஊரர்தம் பாகத்து உமைமைந்தனேஸ
உலகுஏழும் பெற்ற
சீர்அபிராமி அந்தாதி எப்போதும்
என் சிந்தையுள்ளே
கார்அமர் மேனிக் கணபதியேஸ
நிற்கக் கட்டுரையே.

## நூல்

உதிக்கின்ற செங்கதிர், உச்சித்
திலகம், உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம்
போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக்
குங்குமத் தோயம்என்ன
விதிக்கின்ற மேனி அபிராமி
என்தன் விழுத்துணையே. 1

துணையும், தொழுந்தெய்வமும், பெற்ற
தாயும், சுருதிகளின்
பணையும், கொழுந்தும், பதிகொண்ட
வேரும், பனிமலர்ப்பூங்
கணையும், கருப்புச்சிலையும்,
மென்பாசாங்குசமும், கையில்
அணையும் திரிபுர சுந்தரி
ஆவது அறிந்தனமே. 2

அறிந்தேன் எவரும் அறியா
மறையை, அறிந்துகொண்டு
செறிந்தேன், உனது திருவடிக்கே:
திருவே! வெருவிப்
பிறிந்தேன், நின்அன்பர் பெருமை
எண்ணாத கரும நெஞ்சால்
மறிந்தே விழும் நரகுக்குஉற
வாய மனிதரையேஸ 3

மனிதரும், தேவரும், மாயா
முனிவரும் வந்துசென்னி
குனிதரும் சேவடிக் கோமளமேஸ
கொன்றை வார்சடைமேல்
பனிதரும் திங்களும், பாம்பும்,
பகீரதியும் படைத்த
புனிதரும் நீயும்என் புந்தி
எந்நாளும் பொருந்துகவே. 4

பொருந்திய முப்புரை, செப்புரை
செய்யும் புணர்முலையால்
வருந்திய வஞ்சி மருங்குல்
மனோன்மணி! வார்சடையோன்
அருந்திய நஞ்சு அமுதாக்கிய
அம்பிகை! அம்புயம்மேல்
திருந்திய சுந்தரி, அந்தரி
பாதம்என் சென்னியதே! 5

சென்னியது உன்பொற் திருவடித்
தாமரை; சிந்தையுள்ளே
மன்னியது உன்திரு மந்திரம்;
சிந்துர வண்ணப்பெண்ணேஸ
முன்னிய நின் அடியாருடன்
கூடி முறைமுறையே
பன்னியது, என்றும் உந்தன்
பரமஆகம பத்ததியேஸ 6

ததியுறு மத்தில் சுழலும்என்
ஆவி, தளர்விலதோர்
கதியுறு வண்ணம் கருதுகண்
டாய்! கமலாலயனும்,
மதியுறு வேணி மகிழ்நனும்
மாலும், வணங்கிஎன்றும்
துதியுறு சேவடியாய்ஸ சிந்துர
ஆனன சுந்தரியேஸ 7

சுந்தரி எந்தை துணைவி, என்
பாசத் தொடரையெல்லாம்
வந்தரி, சிந்துர வண்ணத்தினாள்,
மகிடன் தலைமேல்
அந்தரி, நீலி, அழியாத
கன்னிகை, ஆரணத்தோன்
கந்தரி கைத்தலத்தாள் மலர்த்
தாள்என் கருத்தனவே. 8

கருத்தன எந்தைதன், கண்ணன,
வண்ணக் கனகவெற்பில்
பெருத்தன, பால்அழும் பிள்ளைக்கு
நல்கின, பேர்அருள்கூர்
திருத்தன பாரமும்; ஆரமும்,
செங்கைச் சிலையும், அம்பும்
முருத்துஅன மூரலும், நீயும்அம்மேஸ
வந்துஎன் முன்நிற்கவே. 9

நின்றும் இருந்தும் கிடந்தும்
நடந்தும் நினைப்பதுஉன்னை;
என்றும் வணங்குவது உன்மலர்த்
தாள்; எழு தாமறையின்
ஒன்றும் அரும்பொருளேஸ அருளேஸ
உமையே! இமயத்து
அன்றும் பிறந்தவளேஸ அழியா
முத்தி ஆனந்தமேஸ 10

ஆனந்தமாய், என் அறிவாய்,
நிறைந்த அமுதமுமாய்,
வான் அந்தமான வடிவுடையாள்,
மறை நான்கினுக்கும்
தான்அந்த மான சரணார
விந்தத் தவளநிறக்
கானம்தம் ஆடரங்காம் எம்பிரான்
முடிக் கண்ணியதே. 11

கண்ணியது உன்புகழ்; கற்பதுஉன்
நாமம்; கசிந்துபத்தி
பண்ணியது உன்இரு பாதாம்
புயத்தில்; பகல்இரவா
நண்ணியது உன்னை நயந்தோர்
அவையத்து; நான் முன்செய்த
புண்ணியம் ஏது? என் அம்மேஸபுவி
ஏழையும் பூத்தவளேஸ 12

பூத்தவளே புவனம் பதி
னான்கையும், பூத்தவண்ணம்
காத்தவளே! பின் கரந்தவளேஸ
கறைக் கண்டனுக்கு
மூத்தவளே! என்றும் மூவா
முகுந்தற்கு இளையவளேஸ
மாத்தவளே! உன்னை அன்றி,
மற்றுஓர்தெய்வம் வந்திப்பதே? 13

வந்திப்பவர் உன்னை, வானவர்
தானவர் ஆனவர்கள்;
சிந்திப்பவர், நல் திசைமுகர்
நாரணர்; சிந்தையுள்ளே
பந்திப்பவர், அழியாப் பரமானந்தர்;
பாரில் உன்னைச்
சந்திப்ப வர்க்(கு) எளிதாம்
எம்பிராட்டிஸ நின் தண்ணளியே. 14

தண்ணளிக்கு என்று முன்னேபல
கோடி தவங்கள் செய்வார்,
மண் அளிக்கும் செல்வமோ பெறு
வார்? மதி வானவர்தம்
விண் அளிக்கும் செல்வமும், அழியா
முத்தி வீடும்அன்றோ?
பண் அளிக்கும் சொற் பரிமள
யாமளைப் பைங்கிளியேஸ 15

கிளியே! கிளைஞர் மனத்தே கிடந்து
கிளர்ந்து ஒளிரும்
ஒளியே! ஒளிரும் ஒளிக்குஇடமேஸ
எண்ணில் ஒன்றும் இல்லா
வெளியே! வெளிமுதற் பூதங்களாகி
விரிந்த அம்மேஸ
அளியேன் அறிவு அளவிற்குஅள
வானது அதிசயமேஸ 16

அதிசய மான வடிவுடை
யாள்! அரவிந்தமெல்லாம்
துதிசயஆனன சுந்தர வல்லிஸ
துணை இரதி
பதிசய மானது அபசய
மாகமுன் பார்த்தவர்தம்
மதிசய மாக அன்றோ, வாம
பாகத்தை வவ்வியதே? 17

வவ்விய பாகத்து இறைவரும்
நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும், உங்கள் திருமணக்
கோலமும், சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்துஎன்னை ஆண்ட
பொற்பாதமும் ஆகிவந்து,
வெவ்விய காலன்என் மேல்வரும்
போது, வெளிநிற்கவேஸ 18

வெளிநின்ற நின் திருமேனியைப்
பார்த்து, என் விழியும்நெஞ்சும்
களிநின்ற வெள்ளம் கரைகண்டது
இல்லை; கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானம் திகழ்கின்றது
என்ன திருவுளமோஸ
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும்
மேவி உறைபவளேஸ 19

உறைகின்ற நின்திருக் கோயில், நின்
கேள்வர் ஒருபக்கமோ?
அறைகின்ற நான்மறையின் அடியோ?
முடியோ? அமுதம்
நிறைகின்ற வெண்திங்களோ?
கஞ்சமோ? என்தன் நெஞ்சகமோ?
மறைகின்ற வாரிதி யோ? பூர
ணாசல மங்கலையேஸ 20

மங்கலை, செங்கல சம்முலை
யாள், மலையாள், வருணச்
சங்குஅலை செங்கைச் சகல
கலாமயில், தாவுகங்கை
பொங்கு அலை தங்கும் புரிசடையோன்
புடையாள், உடையாள்
பிங்கலை, நீலி, செய்யாள், வெளியாள்
பசும்பெண் கொடியே. 21

கொடியே இளவஞ்சிக் கொம்பே
எனக்குவம்பே பழுத்த
படியே! மறையின் பரிமளமேஸ
பனிமால் இமயப்
பிடியே! பிரமன் முதலாய
தேவரைப் பெற்றஅம்மேஸ
அடியேன் இறந்து இங்கு இனிப்பிறவாமல்
வந்து ஆண்டு கொள்ளேஸ 22

கொள்ளேன் மனத்தில்நின் கோலம்அல்
லாது, அன்பர் கூட்டம்
தன்னை விள்ளேன்; பரசமயம்
விரும்பேன்; வியன்மூவுலக்கு
உள்ளே அனைத்தினுக்கும் புறம்பேஸ
உள்ளத்தே விளைந்த
கள்ளே களிக்கும் களியே
அளியஎன் கண்மணியேஸ 23

மணியே! மணியின் ஒளியேஸ
ஒளிரும் மணிபுனைந்த
அணியே! அணியும் அணிக்கு அழகேஸ
அணு காதவர்க்குப்
பிணியே! பிணிக்கு மருந்தேஸ
அமரர் பெருவிருந்தேஸ
பணியேன் ஒருவரை, நின்பத்ம
பாதம் பணிந்தபின்னேஸ 24

பின்னே திரிந்துஉன் அடியாரைப்
பேணிப் பிறப்புஅறுக்க
முன்னே தவங்கள் முயன்றுகொண்டேன்;
முதல் மூவருக்கும்
அன்னே! உலகுக்கு அபிராமி
என்னும் அருமருந்தேஸ
என்னே? இனிஉன்னை யான்மற
வாமல்நின்று ஏத்துவனேஸ 25

ஏத்தும் அடியவர் ஈரேழு
உலகினையும் படைத்தும்
காத்தும் அழித்தும் திரிபவராம்;
கமழ் பூங்கடம்பு
சாத்தும் குழல்அணங் கேஸ மணம்
நாறும்நின் தாள்இணைக்(கு)என்
நாத்தங்கு புன்மொழி ஏறிய
வாறு நகையுடைத்தேஸ 26

உடைத்தனை வஞ்சப் பிறவியை;
உள்ளம் உருகும்அன்பு
படைத்தனை; பத்ம பதயுகம்
சூடும் பணிஎனக்கே
அடைத்தனை; நெஞ்சத்து அழுக்கை
எல்லாம்நின் அருட்புனலால்
துடைத்தனை; சுந்தரிஸ நின்அருள்
ஏதென்று சொல்லுவதேஸ 27

சொல்லும் பொருளும் என, நட
மாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியேஸ
நின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும்அவர்க்கே
அழியா அரசும்
செல்லும் தவநெறியும் சிவ
லோகமும் சித்திக்குமே. 28

சித்தியும், சித்தி தரும்தெய்வம்
ஆகித் திகழும்பரா
சத்தியும், சத்தி தழைக்கும்
சிவமும், தவம்முயல்வார்
முத்தியும், முத்திக்கு வித்தும்,
வித்தாகி முளைத்தெழுந்த
புத்தியும், புத்தியின் உள்ளே
புரக்கும் புரத்தைஅன்றே. 29

அன்றே தடுத்துஎன்னை ஆண்டுகொண்
டாய்; கொண்ட(து) அல்லஎன்கை
நன்றே? உனக்கினி நான்என்
செயினும், நடுக்கடலுள்
சென்றே விழினும், கரையேற்றுகை
நின் திருவுளமே
ஒன்றே! பலஉருவேஸ அருவேஸ
என் உமையவளேஸ 30

உமையும் உமையொரு பாகரும்
ஏக உருவில்வந்துஇங்கு,
எமையும் தமக்குஅன்பு செய்யவைத்
தார்;இனி எண்ணுதற்குச்
சமையங்களும் இல்லை; ஈன்றுஎடுப்
பாள்ஒரு தாயும்இல்லை;
அமையும், அமையுறு தோளியர்
மேல்வைத்த ஆசையுமேஸ 31

ஆசைக் கடலில் அகப்பட்(டு),
அருள்அற்ற அந்தகன்கைப்
பாசத்தில் அல்லற்படஇருந்தேனை, நின்
பாதம் என்னும்
வாசக் கமலம் தலைமேல்
வலியவைத்(து) ஆண்டுகொண்ட
நேசத்தை என்சொல்லுவேன்ஸ ஈசர்
பாகத்து நேரிழையேஸ 32

இழைக்கும் வினைவழியே அடும்
காலன் எனைநடுங்க
அழைக்கும் பொழுதுவந்து, 'அஞ்சல்'
என்பாய்;அத்தர் சித்தம்எல்லாம்
குழைக்கும் களபக் குவிமுலை
யாமளைக் கோமளமே!
உழைக்கும்பொழுது, உன்னையே 'அன்னையே'
என்பன், ஓடிவந்தே. 33

வந்தே சரணம் புகும்
அடியார்க்கு, வானுலகம்
தந்தே, பரிவொடு தான்போய்
இருக்கும் சதுர்முகமும்,
பைந்தேன் அலங்கற் பருமணி
ஆகமும், பாகமும், பொற்
செந்தேன் மலரும், அலர்கதிர்
ஞாயிறும், திங்களுமே. 34

திங்கட் பகவின் மணம்நாறும்
சீறடி சென்னிவைக்க,
எங்கட் கொருதவம் எய்தியவா?
எண்இறந்த விண்ணோர்
தங்கட்கும் இந்தத் தவம்எய்துமோ?
தரங்கக் கடலுள்
வெங்கட் பணிஅணை மேல்துயில்
கூறும் விழுப்பொருளேஸ 35

பொருளே! பொருள்முடிக்கும் போகமேஸ
அரும் போகம்செய்யும்
மருளே! மருளில் வரும்தெருளேஸ
என் மனத்துவஞ்சத்(து(
இருள்ஏதும் இன்றி ஒளிவெளி
ஆகியிருக்கும் உன்றன்
அருள் ஏ(து) அறிகின்லேன்,
அம்புயஆதனத்து அம்பிகையேஸ 36

கைக்கே அணிவது கன்னலும்
பூவும்; கமலம்அன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்து
மாலை; விடஅரவின்
பைக்கே அணிவது பன்மணிக்
கோவையும் பட்டும்; எட்டுத்
திக்கே அணியும் திருவுடை
யான்இடம் சேர்பவளேஸ 37

பவளக் கொடியில் பழுத்தசெவ்
வாயும், பனிமுறுவல்
தவளத் திருநகை யும்துணையா,
எங்கள் சங்கரனைத்
துவளப் பொருது, துடிஇடை
சாய்க்கும் துணைமுலையாள்
அவளைப் பணிமின் கண்டீர்
அமராவதி ஆளுகைக்கே. 38

ஆளுகைக்(கு) உன்தன் அடித்
தாமரைகள்உண்டு; அந்தகன்பால்
மீளுகைக்(கு) உன்தன் விழியின்
கடைஉண்டு; மேல்இவற்றின்
மூளுகைக்(கு) என்குறை நின்குறையே
அன்று; முப்புரங்கள்
மாளுகைக்(கு) அம்பு தொடுத்தவில்லான்
பங்கில் வாள்நுதலே. 39

வாணுதல் கண்ணியை, விண்ணவர்
யாவரும் வந்துஇறைஞ்சிப்
பேணுதற்கு எண்ணிய எம்பெரு
மாட்டியைப் பேதைநெஞ்சில்
காணுதற்கு அண்ணியள் அல்லாத
கன்னியை, காணும்அன்பு
பூணுதற்(கு) எண்ணிய எண்ணம்அன்றோ,
முன்செய் புண்ணியமே. 40

புண்ணியம் செய்தனமே மனமே!
புதுப் பூங்குவளைக்
கண்ணியும், செய்ய கணவரும்
கூடி, நம் காரணத்தால்
நண்ணி இங்கேவந்து, தம்அடி
யார்கள் நடுஇருக்கப்
பண்ணி, நம் சென்னியின்மேல்
பத்மபாதம் பதித்திடவே. 41

இடங்கொண்டு விம்மி, இணைகொண்டு
இறுகி இளகி,முத்து
வடங்கொண்ட கொங்கை மலைகொண்டு
இறைவர் வலியநெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலங்கொண்ட
நாயகி, நல்அரவின்
படங்கொண்ட அல்குல் பனிமொழி,
வேதப் பரிபுரையே. 42

பரிபுரச் சீறடிப் பாசாங்குசை,
பஞ்சபாணி, இன்சொல்
திரிபுர சுந்தரி, சிந்துர
மேனியள், தீமைநெஞ்சில்
புரிபுர வஞ்சரை அஞ்சக்
குனிபொருப் புச்சிலைக்கை,
எரிபுரை மேனி இறைவர்செம்
பாகத்து இருந்தவளேஸ 43

தவளே இவள் எங்கள்
சங்கரனார் மனைமங்கலமாம்;
அவளே அவர்தமக்(கு) அன்னையும்
ஆயினள்; ஆகையினால்,
இவளே கடவுளர் யாவர்க்கும்
மேலை இறைவியுமாம்;
துவளேன், இனிஒரு தெய்வம்உண்
டாகமெய்த் தொண்டு செய்தே. 44

தொண்டு செய்யாது, நின்பாதம்
தொழாது, துணிந்(து)இச்சையே
பண்டு செய்தார் உளரோஇலரோ?
அப்பரி(சு) அடியேன்
கண்டு செய்தால், அது கைதவமோ
அன்றிச் செய்தவமோ?
மிண்டு செய்தாலும் பொறுக்கைநன்றே.
பின் வெறுக்கைஅன்றே. 45

வெறுக்கும் தகைமைகள் செய்யினும்,
தம்அடியாரை மிக்கோர்
பொறுக்கும் தகைமை புதிய(து)அன்றே;
புதுநஞ்சை உண்டு
கறுக்கும் திருமிடற்றான் இடப்பாகம்
கலந்த பொன்னே!
மறுக்கும் தகைமைகள் செய்யினும்
யான்உன்னை வாழ்த்துவனே. 46

வாழும் படிஒன்று கண்டுகொண்டேன்:
மனத்தே ஒருவர்
வீழும் படிஅன்று; விள்ளும்படி
அன்று; வேலைநிலம்
ஏழும், பருவரை எட்டும்
எட்டாமல், இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே
கிடந்து சுடர்கின்றதே. 47

சுடரும் கலைமதி துன்றும்
சடைமுடிக் குன்றில் ஒன்றிப்
படரும் பரிமளப் பச்சைக்
கொடியைப் பதித்துநெஞ்சில்,
இடரும் தவிர்த்(து), இமைப் போ(து)இருப்பார்
பின்னும் எய்துவரோ
குடரும் கொழுவும் குருதியும்
தோயும் குரம்பையிலே? 48

குரம்பை அடுத்துக் குடிபுக்க
ஆவி, வெங் கூற்றுக்(கு)இட்ட
வரம்பை அடுத்து மறுகும்அப்போது,
வளைக்கை அமைத்து
அரம்பை யடுத்த அரிவையர்
சூழவந்(து), 'அஞ்சல்' என்பாய்,
நரம்பை அடுத்த இசைவடி
வாய்நின்ற நாயகியேஸ 49

நாயகி, நான்முகி, நாராயணி,
கை நளினபஞ்ச
சாயகி, சாம்பவி, சங்கரி,
சாமளை, சாதிநச்சு
வாயகி மாலினி, வாராகி,
சூலினி, மாதங்கிஎன்று
ஆயகியாதி உடையாள் சரணம்
அரண் நமக்கே. 50

அரணம் பொருள்என்(று) அருள்
ஒன்(று)இலாத அசுரர்தங்கள்
முரண் அன்(று) அழியமுனிந்த
பெம்மானும் முகுந்தனுமே,
'சரணம் சரணம்' எனநின்ற
நாயகிதன் அடியார்,
மரணம் பிறவி இரண்டும்எய்தார்,
இந்த வையகத்தே. 51

வையம், துரகம், மதகரி,
மாமகுடம், சிவிகை,
பெய்யும் கனகம், பெருவிலை
ஆரம், பிறைமுடித்த
ஐயன் திருமனை யாள்அடித்
தாமரைக்கு அன்புமுன்பு
செய்யும் தவமுடை யார்க்(கு)
உளவாகிய சின்னங்களே. 52

சின்னஞ் சிறிய மருங்கினில்
சாத்திய செய்யபட்டும்,
பென்னம் பெரிய முலையும்,
முத்தாரமும், பிச்சிமொய்த்த
கன்னங் கரிய குழலும், கண்
மூன்றும் கருத்தில்வைத்துத்
தன்னந் தனிஇருப் பார்க்(கு)இது
போலும் தவம்இல்லையே. 53

இல்லாமை சொல்லி, ஒருவர்தம்
பால்சென்று, இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவிரேல்,
நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம்பால்
ஒரு காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை
பாதங்கள் சேர்மின்களே. 54

மின் ஆயிரம் ஒரு மெய்வடி
வாகி விளங்குகின்ற
அன்னாள், அகமகிழ் ஆனந்த
வல்லி, அருமறைக்கு
முன்னாய், நடுஎங்குமாய், முடிவாய
முதல்வி தன்னை
உன்னாது ஒழியினும் உன்னினும்,
வேண்டுவது ஒன்றில்லையே. 55

ஒன்றாய் அரும்பிப் பலவாய்
விரிந்(து), இவ்வுல(கு)எங்குமாய்
நின்றாள், அனைத்தையும் நீங்கிநிற்பாள்
என்தன் நெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்றவா!
இப்பொருள் அறிவார்
அன்(று) ஆலிலையில் துயின்ற
பெம்மானும் என்ஐயனுமே. 56

ஐயன் அளந்தபடி இருநாழி
கொண்(டு), அண்டமெல்லாம்
உய்ய அறம்செயும் உன்னையும்
போற்றி, ஒருவர்தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலையும்
கொண்டு சென்றுபொய்யும்
மெய்யும் இயம்பவைத்தாய்: இதுவோ
உன்தன் மெய்யருளே? 57

அருணாம் புயத்தும், என் சித்தாம்
புயத்தும், அமர்ந்திருக்கும்
தருணாம் புயமுலைத் தையல்
நல்லாள், தகை சேர்நயனக்
கருணாம் புயமும், வதனாம்
புயமும், கராம்புயமும்,
சரணாம் புயமும் அல்லால்
கண்டிலேன், ஒரு தஞ்சமுமே. 58

தஞ்சம் பிறி(து)இல்லை ஈதுஅல்ல(து)
என்று, உன் தவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக்கின்றிலேன்;
ஒற்றை நீள் சிலையும்
அஞ்(சு)அம்பும் இக்(கு)அலராகி நின்றாய்ஸ
அறியார் எனினும்,
பஞ்(சு)அஞ்சும் மெல்லடியார் அடியார்
பெற்ற பாலரையே. 59

பாலினும் சொல்இனி யாய்!பனி
மாமலர்ப் பாதம்வைக்க,
மாலினும், தேவர்வணங்க நின்றோன்
கொன்றை வார்சடையின்
மேலினும், கீழ்நின்று வேதங்கள்
பாடும்மெய்ப் பீடம்ஒரு
நாலினும், சாலநன்றோ அடியேன்
முடை நாய்த்தலையே? 60

நாயே னையும் இங்(கு)ஒரு
பொருளாக நயந்துவந்து,
நீயே நினைவின்றி ஆண்டுகொண்
டாய், நின்னை உள்ளவண்ணம்
பேயேன் அறியும் அறிவுதந்தாய்;
என்ன பேறுபெற்றேன்ஸ
தாயே, மலைமகளே, செங்கண்
மால்திருத் தங்கைச்சியேஸ 61

தங்கச் சிலைகொண்டு, தானவர்
முப்புரம் சாய்த்து, மத
வெங்கண் கரிஉரி போர்த்த
செஞ்சேவகன் மெய்அடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட
நாயகி, கோகநகச்
செங்கைக் கரும்பும், மலரும்எப்
போதும் என்சிந்தையதே. 62

தேறும் படிசில ஏதுவும்
காட்டி, முன் செல்கதிக்குக்
கூறும் பொருள், குன்றில் கொட்டும்
தறி, குறிக்கும் சமயம்
ஆறும் தலைவி இவளாய்
இருப்பது அறிந்திருந்தும்,
வேறும் சமயம்உண்(டு) என்று
கொண்டாடிய வீணருக்கே. 63

வீணே பலிகவர் தெய்வங்கள்
பால்சென்று, மிக்கஅன்பு
பூணேன்; உனக்(கு)அன்பு பூண்டு
கொண்டேன்; நின்புகழ்ச்சியன்றிப்
பேணேன், ஒருபொழுதும்; திரு
மேனிப்ரகாசம் அன்றிக்
காணேன் இருநில மும், திசை
நான்கும், ககனமுமே. 64

ககனமும் வானும் புவனமும்
காண, விற் காமன்அங்கம்
தகனம்முன் செய்த தவப்பெரு
மாற்குத் தடக்கையும்செம்
முகனும் முந்நான்கு இருமூன்றுஎனத்
தோன்றிய மூதறிவின்
மகனும் உண்டாயதன்றோ?வல்லி
நீசெய்த வல்லபமே. 65

வல்லபம் ஒன்றறியேன்; சிறியேன்
நின் மலரடிச்செம்
பல்லவம் அல்லது பற்றுஒன்று
இலேன்; பசும் பொன்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப்பாய்,
வினையேன் தொடுத்த
சொல்அவ மாயினும், நின்திரு
நாமங்கள் தோத்திரமே. 66

தோத்திரம் செய்து தொழுதுமின்
போலும்நின் தோற்றம் ஒரு
மாத்திரைப் போதும் மனத்தில்
வையாதவர் வண்மை, குலம்,
கோத்திரம், கல்வி, குணம்குன்றி,
நாளும் குடில்கள்தொறும்
பாத்திரம் கொண்டு பலிக்குஉழலா
நிற்பர் பாரெங்குமே. 67

பாரும், புனலும், கனலும், வெங்
காலும், படர்விசும்பும்;
ஊரும் முருகு சுவைஒளி
ஊறுஒலி ஒன்றுபடச்
சேரும் தலைவி, சிவகாம
சுந்தரி சீறடிக்கே
சாரும் தவம் உடையார்
படையாத தனம்இல்லையே. 68

தனம்தரும்; கல்வி தரும்;ஒரு
நாளும் தளர்வுஅறியா
மனம்தரும்; தெய்வ வடிவும்
தரும்; நெஞ்சில் வஞ்சம்இல்லா
இனம்தரும்; நல்லன எல்லாம்
தரும்அன்பர் என்பவர்க்கே,
கனம்தரும் பூங்குழலாள்
அபிராமி கடைக்கண்களே. 69

கண்களிக் கும்படி கண்டுகொண்
டேன், கடம் பாடவியில்:
பண்களிக்கும் குரல் வீணையும்,
கையும், பயோதரமும்,
மண்களிக்கும் பச்சை வண்ணமும்
ஆகி, மதங்கர்குலப்
பெண்களில் தோன்றிய எம்பெரு
மாட்டிதன் பேரழகே. 70

அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத
வல்லி, அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத்
தாள், பனி மாமதியின்
குழவித் திருமுடிக் கோமள
யாமளைக் கொம்பிருக்க,
இழவுற்று நின்றநெஞ்சேஸ இரங்கேல்ஸ
உனக்கு என்குறையே? 71

என்குறை தீரநின்று ஏத்துகின்
றேன்;இனி யான்பிறக்கின்,
நின்குறையே அன்றி யார்குறை
காண்?இரு நீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற
நேரிடை மெல்லியலாய்!
தன்குறை தீர, எம் கோன்சடை
மேல்வைத்த தாமரையே. 72

தாமம் கடம்பு; படைபஞ்ச
பாணம்; தனுக்கரும்பு;
யாமம் வயிரவர் ஏத்தும்
பொழுது;எமக்கென்று வைத்த
சேமம் திருவடி; செங்கைகள்
நான்கு, ஒளி செம்மை; அம்மை
நாமம் திரிபுரை; ஒன்றோ(டு)
இரண்டு நயனங்களே. 73

நயனங்கள் மூன்றுடை நாதனும்,
வேதமும், நாரணனும்,
அயனும் பரவும் அபிராம
வல்லி அடிஇணையைப்
பயன்என்று கொண்டவர், பாவையர்
ஆடவும் பாடவும், பொன்
சயனம் பொருந்து தமனியக்
காவினில் தங்குவரே. 74

தங்குவர் கற்பகத் தாருவின்
நீழலில்; தாயர்இன்றி
மங்குவர், மண்ணில் வழுவாப்
பிறவியை; மால்வரையும்,
பொங்குவர் ஆழியும் ஈரேழ்
புவனமும் பூத்தஉந்திக்
கொங்குஇவர் பூங்குழலாள்திரு
மேனி குறித்தவரே. 75

குறித்தேன் மனத்தில், நின்கோலம்
எல்லாம்;நின் குறிப்பறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற
நேர்வழி; வண்டுகிண்டி
வெறித்தேன் அவிழ்கொன்றை வேணிப்
பிரான்ஒரு கூற்றைமெய்யில்
பறித்தே குடிபுகுதும் பஞ்ச
பாண பயிரவியேஸ 76

பயிரவிஸ பஞ்சமிஸ பாசாங்
குசைஸ பஞ்ச பாணிஸ வஞ்சர்
உயிரவி உண்ணும் உயர்சண்டிஸ
காளிஸ ஒளிரும்கலா
வயிரவிஸ மண்டலிஸ மாலினிஸ
சூலிஸ வராகிஎன்றே
செயிர்அவி நான்மறை சேர்திரு
நாமங்கள் செப்புவரே. 77

செப்பும் கனக கலசமும்
போலும் திருமுலைமேல்
அப்பும் களப அபிராம
வல்லி அணிதரளக்
கொப்பும், வயிரக் குழையும்,
விழியின் கொழும்கடையும்,
துப்பும் நிலவும் எழுதிவைத்தேன்
என் துணைவிழிக்கே. 78

விழிக்கே அருளுண்(டு) அபிராம
வல்லிக்கு; வேதம்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்(டு)
எமக்கு;அவ் வழிகிடக்கப்,
பழிக்கே சுழன்று, வெம்பாவங்களே,
செய்து, பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர்தம்
மோடு என்ன கூட்(டு)இனியே? 79

கூட்டியவா என்னைத் தன்அடி
யாரில், கொடியவினை
ஓட்டியவா, என்கண் ஓடியவா,
தன்னை உள்ளவண்ணம்
காட்டியவா, கண்ட கண்ணும்
மனமும் களிக்கின்றவா,
ஆட்டியவா நடம் ஆடகத்
தாமரை ஆரணங்கே. 80

அணங்கேஸ அணங்குகள் நின்பரி
வாரங்கள் ஆகையினால்
வணங்கேன் ஒருவரை; வாழ்த்துகிலேன்
நெஞ்சில்; வஞ்சகரோடு
இணங்கேன்; எனதுஉன(து) என்று
இருப்பார்சிலர் யாவரொடும்
பிணங்கேன்; அறிவொன்றி லேன்; என்
கண்நீவைத்த பேரளியேஸ 81

அளி ஆர் கமலத்தில் ஆரணங்கே!
அகிலாண்டமும் நின்
ஒளியாக நின்ற ஒளிர்திரு
மேனியை உள்ளுந்தொறும்
களியாகி, அந்தக் கரணங்கள்
விம்மிக் கரைபுரண்டு
வெளியாய் விடின், எங்ஙனே மறப்பேன்
நின் விரகினையே? 82

விரவும் புதுமலர் இட்டு, நின்
பாத விரைக்கமலம்
இரவும் பகலும் இறைஞ்சவல்லார்,
இமையோர் எவரும்
பரவும் பதமும், அயிரா
வதமும், பகீரதியும்
உரவும் குலிசமும், கற்பகக்
காவும் உடையவரே. 83

உடையாளை, ஒல்குசெம் பட்(டு)
உடையாளை, ஒளிர்மதிச்செஞ்
சடையாளை, வஞ்சகர் நெஞ்சடையாளை,
தயங்கும் நுண்ணூல்
இடையாளை, எங்கள் பெம்மான்
இடையாளை, இங்கென்னைஇனிப்
படையாளை, உங்களையும் படையா
வண்ணம் பார்த்திருமே. 84

பார்க்கும் திசைதொறும் பாசாங்
குசமும், பனிச்சிறைவண்(டு)
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும்,
கரும்பும்,என் அல்லல்எல்லாம்
தீர்க்கும் திரிபுரையாள் திரு
மேனியும், சிற்றிடையும்,
வார்க்குங்கும் முலையும், முலைமேல்
முத்து மாலையுமே. 85

மால்அயன் தேட மறைதேட,
வானவர்தேட நின்ற
காலையும் சூடகக் கையையும்
கொண்டு, கதித்தகப்பு
வேலை வெங்காலன் என்மேல்
விடும்போது, வெளிநில்கண்டாய்ஸ
பாலையும் தேனையும் பாகையும்
போலும் பனிமொழியேஸ 86

மொழிக்கும் நினைவுக்கும் எட்டாத
நின்திருமூர்த்தி, எந்தன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்ற
தால்;விழியால் மதனை
அழிக்கும் தலைவர் அழியா
விரதத்தை, அண்டமெல்லாம்
பழிக்கும் படி,ஒரு பாகம்
கொண்(டு)ஆளும் பராபரையேஸ 87

பரம்என்(று) உனை அடைந்தேன்
தமியேனும், உன்பத்தருக்குள்
தரம்அன்(று) இவன்என்று தள்ளத்
தகாது; தரியலர்தம்
புரம்அன்(று) எரியப் பொருப்புவில்
வாங்கிய, போதில்அயன்
சிரம்ஒன்று செற்ற கையான்இடப்
பாகம் சிறந்தவளேஸ 88

சிறக்கும் கமலத் திருவேஸ நின்
சேவடி சென்னிவைக்கத்
துறக்கம் தரும்நின் துணைவரும்
நீயும், துரியமற்ற
உறக்கம் தரவந்து, உடம்போ(டு)
உயிர்உறவு அற்(று)அறிவு
மறக்கும் பொழு(து), என் முன்னே
வரல்வேண்டும் வருந்தியுமே. 89

வருந்தா வகை என் மனத்
தாமரையினில் வந்துபுகுந்து
இருந்தாள், பழைய இருப்பிடமாக;
இனி எனக்குப்
பொருந்தாத ஒருபொருள் இல்லை;
விண்மேவும் புலவருக்கு
விருந்தாக, வேலை மருந்தானதை
நல்கும் மெல்லியலேஸ 90

மெல்லிய நுண்இடை, மின்அனை
யாளை, விரிசடையோன்
புல்லிய மென்முலை பொன்அனை
யாளைப் புகழ்ந்து, மறை
சொல்லிய வண்ணம் தொழும்அடி
யாரைத்தொழும் அவர்க்கு
பல்லியம் ஆர்த்துஎழ, வெண்பகடு
ஊரும் பதம் தருமே. 91

பதத்தே உருகி, நின்பாதத்திலே
மனம்பற்றி, உன்றன்
இதத்தே ஒழுக, அடிமை கொண்
டாய்;இனியான் ஒருவர்
மதத்தே மதிமயங் கேன்;அவர்
போனவழியும் செல்லேன்ஸ
முதல்தேவர் மூவரும் யாவரும்
போற்றும் முகிழ்நகையேஸ 92

நகையே இஃதுஇந்த ஞாலம்எல்
லாம்பெற்ற நாயகிக்கு
முகையே, முகிழ்முலை மானே
முதுகண்; முடிவில்அந்த
வகையே பிறவியும் வம்பே;
மலைமகள் என்பதுநாம்;
மிகையே, இவள்தன் தகைமையை
நாடி விரும்புவதே 93

விரும்பித் தொழும் அடியார்விழி
நீர்மல்கி, மெய்புளகம்
அரும்பித், ததும்பிய ஆனந்த
மாகி, அறிவிழந்து,
சுரும்பிற் களித்து, மொழிதடு
மாறி, முன் சொன்னஎல்லாம்
தரும் பித்தர் ஆவரென்றால்,
அபிராமி சமயம்நன்றேஸ 94

நன்றே வருகினும், தீதே
விளைகினும், நான்அறிவ(து)
ஒன்றேயும் இல்லை; உனக்கே
பரம்; எனக்(கு) உள்ளஎல்லாம்
அன்றே உனதென்(று) அளித்து
விட்டேன்; அழியாதகுணக்
குன்றே! அருட்கடலேஸ இம
வான்பெற்ற கோமளமேஸ 95

கோமள வல்லியை, அல்லியந்
தாமரைக் கோயில்வைகும்
யாமள வல்லியை, ஏதம்
இலாளை, எழுதரிய
சாமள மேனிச் சகலகலா
மயில் தன்னைத்தம்மால்
ஆமளவும் தொழு வார், எழு
பாருக்கும் ஆதிபரே. 96

ஆதித்தன் அம்புலி, அங்கி,
குபேரன், அமரர்தங்கோன்,
போதில் பிரமன், புராரி,
முராரி, பொதியமுனி,
காதிப் பொருபடைக் கந்தன்,
கணபதி, காமன்முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர்
போற்றுவர் தையலையே. 97

தைவந்து நின் அடித்தாமரை
சூடிய சங்கரற்குக்,
கைவந்த தீயும் தலைவந்த
ஆறும் கரந்ததுஎங்கே?
மெய்வந்த நெஞ்சின் அல்லால்,
ஒருகாலும் விரகர்தங்கள்
பொய்வந்த நெஞ்சில் புகல்அறியா
மடப் பூங்குயிலேஸ 98

குயிலாய் இருக்கும் கடம்பா
டவியிடை; கோலவியன்
மயிலாய் இருக்கும் இமயாசலத்
திடை; வந்(து)உதித்த
வெயிலாய் இருக்கும் விசும்பில்;
கமலத்தின்மீது அன்னமாம்
கயிலாய ருக்(கு) அன்றுஇமவான்
அளித்த கனங்குழையே. 99

குழையைத் தழுவிய கொன்றையந்
தார்கமழ் கொங்கைவல்லி,
கழையைப் பொருத திருநெடுந்
தோளும், கருப்புவில்லும்,
விழையப் பொருதிறல் வேரிஅம்
பாணமும், வெண்ணகையும்,
உழையைப் பொருகண்ணும், நெஞ்சில்
எப்போதும் உதிக்கின்றவேஸ 100

## நூற்பயன்

ஆத்தாளை, எங்கள் அபிராம
வல்லியை, அண்டமெல்லாம்
பூத்தாளை, மாதுளம் பூநிறத்
தாளை, புவி அடங்கக்
காத்தாளை, ஐங்கணை பாசாங்
குசமும் கரும்பும்அங்கை
சேர்த்தாளை, முக்கண்ணியைத்
தொழுவார்க்கு ஒருதீங்கில்லையே.

*முற்றிற்று.*

# கௌரி காப்பு

முன்னின்று செய்யுன் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மோடு பொருட்குற்றம் சோர்வுதரும்
எக்குற்றமும் வாராமற்கா.

காப்பெடுக்க வந்தேனே கௌரிம்மன் தாயிரே
காத்தென்னை தோற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெலாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
உண்ணும் உணவாக உயிரினும் உயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும்கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்கு தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளி தாயே
கொடியமகி ஷாசுரனைக் கூறுபோட்டவளே
அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நிகைத்தல்லே சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தை கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்

காப்பை புனைத்துவிடு காலபயம் ஒட்டிவிடு
நூலைப் புனைந்து விடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையை தந்து விடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளும்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பை அருளும்மம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நற்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கு அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்கு பெருங்காப்பை அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தூயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே!
ஏட்டுடைத் தேவியரே எல்லாம்மிகு வல்லமையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால் பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியரே காசினிக்கும் வித்தகளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடும் ஏந்துபுகழ் தேவியளே
காப்பெனக்கு போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்து வரும்

தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்

நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாங்கள் கேட்பதெல்லாம் நலமுடனே இணைந்துவரும்

நந்தனைச் சார்ந்தவனே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா

காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றும் இருந்தறியேன்

நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டு போற்றி வணங்கிடுவேன்

காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகிறேன்

காப்பெனக்கு கையிலுண்டு கடமைகளை செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்.

# சக்தி கவசம்

அங்கையற் கரகந்தாங்கும பிரமாணி யருளினோடுந்
எங்கமென் சென்னிகாக்க வயிணவி துகளிலாகம்
துங்கனுங் காக்கசெய்ய வேந்தெழி லுருத்திராணி
தங்குமெண் டிசையுமன்பு தழைத்திட வினிதுகாக்க

கொன்னுனைச் சூலிசென்னி மயிரினைக் குறித்துக் காக்க
மன்னுவெண் பிறைதாழ்சென்னி வயங்கொளி நெற்றி காக்க
பன்மயிர்ப் பருவநாளும் பரிவொடு முமையாள் காக்க
என்னையாண் முக்கணீசன் இறைவிகண் ணிணைகள் காக்க

வயமிகு மிமயவல்லி மூக்கினை மகிழ்ந்து காக்க
செயையொடு நன்னாக்காக்க விசயைமங் கலைமற்றொவ்வாக்
கண்கவர் நாடிகாக்க காத்தியா யனியெஞ்ஞான்றும்
முண்டக மலரிற்றூய முகத்தினைச் சிறந்து காக்க

சண்டி மென் கபோலங் காக்க தவளநாண் மலரின்வைகும்
ஒண்டொடி நன்னாக் காக்க விசயை மங்கலைமற்றொவ்வாக்
கண்கவர் நாடி காக்க காத்தியாயனி யெஞ்ஞான்றும்
முண்டக மலரிற்றூய முகத்தினைச் சிறந்து காக்க

காள முண்டிருண்டநீல கண்டிமென் கழுத்துக்காக்க
கோளில் பூதாரசத்தி சுவற்புறங் காக்ககூர்மி
நீளொளிச் சந்திகாக்க வயித்திரி நெறியினோடுந்
தோளினை காக்கபத்மை துணைமலரங்கை காக்க

கமலைகை விரல்கள் காக்க விரசைகை யுகிர்கள் காக்க
திமிரமுன் டொளிரும் வெய்யோன் மண்டலத் துறையும் சென்னி
எமதிரு வாகுமூலங் காக்கவா னவர்களேத்த
அமிர்தவ கரிநாணாளு மகன்மணி மார்பங் காக்க

தரித்திரி யிதயங் காக்க தயித்தியர்ச் செருப்போன் மிக்க
கருத்தொடு முலைகள் காக்க சகத்தினி லிறைமை பூண்டோன்
திருத்தகு வயிறு காக்க திகழ்தபோ கதிதன் னுள்ளத்
தருத்தியி னுந்திகாக்க அசைவளர் முதுகு காக்க

கருதரு விகடை காக்க கடிதடம் பாமை வாய்ந்த
குருமணிச் சகனங் காக்க குகாரணி குய்யங் காக்க
அருடர வரும பாய கந்தினி யபானங் காக்க
தெருளுடை விபுலை யென்றுஞ் சிறப்புடைக் குறங்கு காக்க

லளிதைமென் முழந்தாள் காக்க வியற்சபைகணைக் கால் காக்க
களிதரு கோரை வாய்ந்த பரட்டினைக் காக்கமிக்க
அளிகொள் பாதலத்திற் செல்வோள் அணிகெழு புறந்தாள் காக்க
ஒளிநகம் விரல்கள் சந்திரி யுக்கிரி யுவந்து காக்க

தலத்துறை மடந்தை யுள்ளங் காலிணை காக்க தண்ணென்
மலர்திரு மனையைக் காக்க வயங்குகேத்திரதை யோங்கி
உலப்பில்கேத் திரங்கள் காக்க பரியகரை யொழிவ றாது
நலத்தகு மக்க டம்மை நல்குறக் காக்க வன்றே

உயர்சனா தனியெஞ் ஞான்று மொழிவறு மாயுள் காக்க
மயர்வறு கீர்த்தி யாவு மாதேவி காக்க மிக்க
செயிரறு தருமம் யாவுந் தனுத்திரி சிறந்து காக்க
இயல்புடைக் குலத்தை வாய்ந்த குலதேவி யினிதுகாக்க

சற்கதி பிரதை நல்லோர் இயைபினைத் தயாவிற் காக்க
விற்கொடும் போரினீரில் வெளியினில் வனத்திற் சூதில்
இற்புற மதனிலோங்கு சர்வாணி காக்க வென்னாப்
பொற்றரு மலர்க டுவிப் புங்கவ ரேத்தி னாலே.



# சிவ துதி

## முதலாம் திருமுறை

*திருச்சிற்றம்பலம்*

தலம் : திருப்பிரமபுரம்
பண் : நட்டபாடை
பாடியவர் : திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடி
காடுடையசுட லைப்பொடி பூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

தலம் : திருப்பிரமபுரம்
பண் : நட்டபாடை
பாடியவர் : திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

அருநெறியமறை வல்லமுனியகன் பொய்கையலர்மேய
பெருநெறியபிர மாபுரமேவிய பெம்மானிவன்றன்னை
ஒருநெறியமனம் வைத்துணர்ஞானசம் பந்தன்னுரைசெய்த
திருநெறியதமிழ் வல்லவர்தொல்வினை தீர்தலெளிதாமே.

தலம் : திருப்புள்ளமங்கை திருஆலத்துறை
பண் : நட்டபாடை
பாடியவர் : திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

மன்னானவன் னுலகிற்கொரு மழையானவன் பிழையில்
பொன்னானவன் முதலானவன் பொழில்சூழ்புள மங்கை
என்னானவ னிசையானவ னிளஞாயிறின் சோதி
அன்னானவ னுறையும்மிட மாலந்துறை யதுவே.

தலம் : திருமருகலும் திருச்செங்காட்டங்குடியும்
பண் : நட்டபாடை
பாடியவர் : திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

அங்கமும் வேதமும் ஓதுநாவர் அந்தணர்
நாளு மடிபரவ
மங்குல் மதிதவழ் மாடவீதி மருகல்
நிலாவிய மைந்தசொல்லாய்
செங்கய லார்புனற் செல்வமல்கு சீர்கொள்செங்
காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தியாடுங் கணபதி
யீச்சரங் காமுறவே.

தலம் : திருவலிவலம் - திருவிராகம்
பண் : வியாழக்குறிஞ்சி
பாடியவர் : திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

தலம் : திருத்தருமபுரம்
பண் : யாழ்முரி
பாடியவர் : திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

மாதர்ம டப்பிடியும் மட அன்னமு மன்னதோர்
நடை யுடைம் மலை மகள் துணையென மகிழ்வர்
பூதஇ னப்படைநின் றிசை பாடவு மாடுவர்
அவர் படர் சடைந் நெடு முடியதொர் புனலர்
வேதமொ டேழிசைபா டுவ ராழ்கடல் வெண்டிரை
யிரைந் நுரை கரை பொரு துவிம்மிநின் றயலே
தாதவிழ் புன்னைதயங் கும லர்ச்சிறை வண்டறை
யெழில் பொழில் குயில் பயில் தருமபு ரம்பதியே.

தலம் : திருவண்ணாமலை

பண் : நட்டபாடை

பாடியவர் : திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

உண்ணாமுலை யுமையாளொடு முடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ண மறுமே.

தலம் : கோயில்

பண் : குறிஞ்சி

பாடியவர் : திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்றா வெண்டிங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே.

தலம் : திருவையாறு

பண் : மேகராகக்குறிஞ்சி

பாடியவர் : திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவழிந்திட் டைம்மேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென்று
அருள் செய்வா னமருங்கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென்றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி
முகில்பார்க்குந் திருவையாறே.

தலம் : திருப்புகலூர்

பண் : நட்டபாடை

பாடியவர் : திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

பண்ணிலாவும்மறை பாடலினானிறை சேரும்வளையங்கைப்
பெண்ணிலாவவுடை யான்பெரியார்கழ லென்றுந்தொழு தேத்த
உண்ணிலாவியவர் சிந்தையுள்நீங்கா வொருவன்னிடமென்பர்
மண்ணிலாவும்மடி யார்குடிமைத்தொழில் மல்கும்புகலூரே.

தலம் : திருவலிதாயம்
பண் : நட்டபாடை
பாடியவர் : திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

ஐயனொய்யன்னணி யன்பிணியில்லவ ரென்றுந்தொழுதேத்தச்
செய்யன்வெய்யபடை யேந்தித்தவல்லான்திரு மாதோடுறைகோயில்
வையம்வந்துபணி யப்பிணிதீர்த்துயர் கின்றவலிதாயம்
உய்யும்வண்ணந்நினை மின்னினைந்தால்வினை தீருந்நலமாமே.

தலம் : திருப்புகலியும் திருவீழிமிழலையும்
பண் : நட்டபாடை
பாடியவர் : திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

இலங்கையர் வேந்தெழில் வாய்த்ததிண்டோள் இற்றல
றவ்விர லொற்றியைந்து
புலங்களைக் கட்டவர் போற்ற அந்தண் புகலி
நிலாவிய புண்ணியனே
இலங்கெரி யேந்திநின் றெல்லியாடும் எம்மிறை
யேயிது என்கொல்சொல்லாய்
விலங்கலொண் மாளிகை சூழ்மிழலை விண்ணிழி
கோயில் விரும்பியதே.

# இரண்டாம் திருமுறை

*திருச்சிற்றம்பலம்*

தலம் : திருஆலவாய் - திருநீற்றுப் பதிகம்
பண் : காந்தாரம்
பாடியவர் : திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆல வாயான் திருநீறே.

தலம் : பொது (கோளறு திருப்பதிகம்)
பண் : பியந்தைக்காந்தாரம்
பாடியவர் : திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

தலம் : திருக்கேதீச்சரம்
பண் : நட்டராகம்
பாடியவர் : திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

பண்டு நால்வருக் கறமுரைத் தருளிப்பல் லுலகினி லுயிர்வாழ்க்கை
கண்ட நாதனார் கடலிடங் கைதொழக் காதலித் துறைகோயில்
வண்டு பண்செயு மாமலர்ப் பொழில்மஞ்ஞை நடமிடு மாதோட்டம்
தொண்டர் நாள்தொறுந் துதிசெய அருள்செய்கே தீச்சர மதுதானே.

தலம் : திருவலஞ்சுழி
பண் : நட்டராகம்
பாடியவர் : திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே யிருங்கடல் வையத்து
முன்ன நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி யாதரித் தேத்தியும் பாடியும் வழிபடு மதனாலே.

தலம் : திருக்கேதீச்சரம்
பண் : நட்டராகம்
பாடியவர் : திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

விருது குன்றமா மேருவில் நாணர வாஅன லெரியம்பாப்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின் றுறைபதி யெந்நாளும்
கருது கின்றவூர் கனைகடற் கடிகமழ் பொழிலணி மாதோட்டம்
கருத நின்றகே தீச்சரங் கைதொழக் கடுவினை யடையாவே.

தலம் : திருக்கேதீச்சரம்
பண் : நட்டராகம்
பாடியவர் : திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

பாடல் வீணையர் பலபல சரிதைய ரெருதுகைத் தருநட்டம்
ஆடல் பேணுவ ரமரர்கள் வேண்டநஞ் சுண்டிருள் கண்டத்தர்
ஈட மாவது இருங்கடற் கரையினி லெழில்திகழ் மாதோட்டம்
கேடி லாதகே தீச்சரந் தொழுதெழக் கெடுமிடர் வினைதானே.

தலம் : திருக்கேதாரம்
பண் : செவ்வழி
பாடியவர் : திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

தொண்டரஞ்சு களிறும் மடக்கிச்சுரும்பார்மலர்
இண்டைகட்டி வழிபாடு செய்யு மிடமென்பரால்
வண்டுபாட மயிலால மான்கன்று துள்ளவரிக்
கெண்டைபாயச் சுனைநீல மொட்டலருங் கேதாரமே.

தலம் : பொது (கோளறு திருப்பதிகம்)
பண் : பியந்தைக்காந்தாரம்
பாடியவர் : திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

வேள்பட விழிசெய்தன்று விடைமே லிருந்து
மடவாள்த னோடு முடனாய்
வாண்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தெ
னுளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரையன்ற னோடு
மிடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

தலம் : சீகாழி
பண் : இந்தளம்
பாடியவர் : திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

நல்லானை நான்மறை யோடிய லாறங்கம்
வல்லானை வல்லவர் பால்மலிந் தோங்கிய
சொல்லானைத் தொன்மதிற் காழியே கோயிலாம்
இல்லானை யேத்தநின் றார்க்குள தின்பமே.

தலம் : திருமருகல் (விடந்தீர்ந்த பதிகம்)
பண் : இந்தளம்
பாடியவர் : திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

சடையா யெனுமால் சரண்நீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவளுண் மெலிவே.

தலம் : திருச்சாய்க்காடு
பண் : சீகாமரம்
பாடியவர் : திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

நீ நாளும் நன்னெஞ்சே நினைகண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ்நாளுஞ் சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளுந் தலைசுமப்பப் புகழ்நாமஞ் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே.

தலம் : திருவெண்ணியூர்
பண் : இந்தளம்
பாடியவர் : திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

சடையானைச் சந்திர னோடுசெங் கண்ணரா
உடையானை யுடைதலை யிற்பலி கொண்டுரும்
விடையானை விண்ணவர் தாந்தொழும் வெண்ணியை
உடையானை யல்லதுள் காதென துள்ளமே.

# மூன்றாம் திருமுறை

*திருச்சிற்றம்பலம்*

தலம் : திருவாவடுதுறை
பண் : காந்தாரபஞ்சமம்
பாடியவர் : திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

இடரினுந் தளரினு மெனதுறுநோய்
தொடரினு முனகழல் தொழுதெழுவேன்
கடல்தனி லமுதொடு கலந்த நஞ்சை
மிடறினி லடக்கிய வேதியனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னரு ளாவடுதுறை யரனே.

தலம் : திருக்கழுக்கமலம்
பண் : கொல்லி
பாடியவர் : திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

மண்ணினல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணினல் லகதிக்கி யாதுமோர் குறைவிலைக்
கண்ணினல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

தலம் : திருஆலவாய்
பண் : கொல்லி
பாடியவர் : திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

மானினேர்விழி மாதராய்வழு திக்குமாபெருந் தேவிகேள்
பானல்வாயொரு பாலனீங்கிவ னென்றுநீபரி வெய்திடேல்
ஆனைமாமலை யாதியாய இடங்களிற்பல அல்லல்சேர்
ஈனர்கட்கெளி யேனலேன்திரு ஆலவாயரன் நிற்கவே.

தலம் : திருநல்லூர்ப் பெருமணம்
பண் : அந்தாளிகுறிஞ்சி
பாடியவர் : திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

கல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டுமெய் யாய்த்தில
சொல்லூர்ப் பெருமணஞ் சூடல ரேதொண்டர்
நல்லூர்ப் பெருமண மேயநம் பானே.

தலம் : திருப்புகலி - நாலடிமேல்வைப்பு
பண் : காந்தாரபஞ்சமம்
பாடியவர் : திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

இயலிசை யெனும்பொரு ளின்திறமாம்
புயலன மிடறுடைப் புண்ணியனே
கயலன அரிநெடுங் கண்ணியொடும்
அயலுல கடிதொழ அமர்ந்தவனே
கலனாவது வெண்டலை கடிபொழிற் புகலிதன்னுள்
நிலனாள்தொறு மின்புறு நிறைமதி யாருளினனே.

தலம் : பொது - நமசிவாயத்திருப்பதிகம்
பண் : கௌசிகம்
பாடியவர் : திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்பொரு ளாவது
நாதன் நாம நமச்சி வாயவே.

தலம் : திருக்கோணமலை
பண் : புறநீர்மை
பாடியவர் : திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

தாயினு நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினு மனத்து மருவிநின் றகலா
மாணபினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பால்
நீக்கி நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே.

தலம் : திருஆலவாய்
பண் : புறநீர்மை
பாடியவர் : திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாள்தொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகனால்
வேதமும் பொருள்களு மருளி
அங்கயற் கண்ணி தன்னொடு மமர்ந்த
ஆலவா யாவது மிதுவே.

தலம் : திருக்கயிலாயம் - திருவிராகம்
பண் : சாதாரி
பாடியவர் : திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

ஏதமில பூதமொடு கோதைதுணை யாதிமுதல் வேதவிகிர்தன்
கீதமொடு நீதிபல வோதிமற வாதுபயில் நாதன்நகர்தான்
தாதுபொதி போதுவிட வூதுசிறை மீதுதுளி கூதனலியக்
காதல்மிகு சோதிகிளர் மாதுமயில் கோதுகயி லாயமலையே.

தலம் : பொது - திருப்பாசுரம்
பண் : கௌசிகம்
பாடியவர் : திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

தலம் : பொது
பண் : கௌசிகம்
பாடியவர் : திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

இலங்கை மன்ன னெடுத்த அடுக்கல்மேல்
தலங்கொள் கால்விரல் சங்கர னூன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவ னுய்வகை
நலங்கொள் நாம நமச்சி வாயவே.

தலம் : திருமழபாடி
பண் : கௌசிகம்
பாடியவர் : திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

விதியு மாம்வினை வாமொளி யார்ந்ததோர்
கதியு மாங்கசி வாம்வசி யாற்றமா
மதியு மாம்வலி யாமழ பாடியுள்
நதியந் தோய்சடை நாதன்நற் பாதமே.

# நான்காம் திருமுறை

*திருச்சிற்றம்பலம்*

தலம் : திருஅதிகை வீரட்டானம்
பண் : கொல்லி
பாடியவர் : திருநாவுக்கரசு நாயனார்

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேயிர வும்பகலும்
பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தேற்றாதென் வயிற்றி னகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேனதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே.

தலம் : திருஅதிகை வீரட்டானம்
பண் : கொல்லி
பாடியவர் : திருநாவுக்கரசு நாயனார்

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலு முன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்னாவில் மறந்தறியேன்
உலந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தேனடி யேனதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே.

தலம் : திருவையாறு
பண் : காந்தாரம்
பாடியவர் : திருநாவுக்கரசு நாயனார்

மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவா ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல் ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்.

தலம் : பொது (திருவிருத்தம்)
பண் : எந்த ராகத்திலும் பாடலாம்
பாடியவர் : திருநாவுக்கரசு நாயனார்

மேலு மறிந்திலன் நான்முகன் மேற்சென்று கீழிடந்து
மாலு மறிந்திலன் மாலுற்ற தேவழி பாடுசெய்யும்
பாலன் மிசைச்சென்று பாசம் விசிறி மறிந்தசிந்தைக்
கால னறிந்தா னறிதற் கரியான் கழலடியே.

தலம் : பொது(திருவிருத்தம்)
பண் : எந்த ராகத்திலும் பாடலாம்
பாடியவர் : திருநாவுக்கரசு நாயனார்

உடலைத் துறந்துல கேழுங்
கடந்துல வாததுன்பக்
கடலைக் கடந்துய்யப் போயிட
லாகுங் கனகவண்ணப்
படலைச் சடைப்பர வைத்திரைக்
கங்கைப் பனிப்பிறைவெண்
சுடலைப் பொடிக்கட வுட்கடி
மைக்கண் துணிநெஞ்சமே.

தலம் : பொது (நமச்சிவாய திருப்பதிகம்)
பண் : காந்தாரபஞ்சமம்
பாடியவர் : திருநாவுக்கரசு நாயனார்

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரன்அஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலங் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே.

தலம் : பொது (நமச்சிவாய திருப்பதிகம்)
பண் : காந்தாரபஞ்சமம்
பாடியவர் : திருநாவுக்கரசு நாயனார்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சி வாயவே.

தலம் : திருஅதிகை வீரட்டானம்
பண் : காந்தாரம்
பாடியவர் : திருநாவுக்கரசு நாயனார்

சுண்ணவெண் சந்தனச் சாந்துஞ் சுடர்த்திங்கட் சூளா மணியும்
வண்ண உரிவை யுடையும் வளரும் பவள நிறமும்
அண்ண லரண்முர ணேறும் அகலம் வளாய அரவும்
திண்ணன் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை.

தலம் : பொது ( மறுமற்றத் திருத்தாண்டகம்)
பண் : அரிகாம்போதி
பாடியவர் : திருநாவுக்கரசு நாயனார்

நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே யெந்நாளுந் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே.

தலம் : திருத்தூங்கானைமாடம் ( திருவிருத்தம் )
பண் : திருவிருத்தப் பண்
பாடியவர் : திருநாவுக்கரசு நாயனார்

பொன்னார் திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம் போற்றிசெய்யும்
என்னாவி காப்பதற் கிச்சையுண் டேலிருங் கூற்றகல
மின்னாரு மூவிலைச் சூலமென் மேற்பொறி மேவு கொண்டல்
துன்னார் கடந்தையுள் தூங்கானை மாடச் சுடர்க்கொழுந்தே.

தலம் : திருமறைக்காடு - (திருக்குறுந்தொகை)
பண் : திருக்குறுந்தொகை பண்
பாடியவர் : திருநாவுக்கரசு நாயனார்

பண்ணின் நேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னார்வலஞ் செய்ம்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே.

தலம் : திருப்புகலூர் (திருத்தாண்டகம்)
பண் : திருத்தாண்டகப் பண்
பாடியவர் : திருநாவுக்கரசு நாயனார்

எண்ணுகேன் என்சொல்லி எண்ணு கேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணி னல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போ துணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே.

# ஐந்தாம் திருமுறை

*திருச்சிற்றம்பலம்*

தலம் : தில்லை
பண் : எந்த இராகத்திலும் பாடலாம்
பாடியவர் : திருநாவுக்கரசு நாயனார்

அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோவிப் பிறவியே.

தலம் : தில்லை
பண் : எந்த இராகத்திலும் பாடலாம்
பாடியவர் : திருநாவுக்கரசு நாயனார்

அல்ல லென்செயும் அருவினை யென்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தா னென்செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனார்க்
கெல்லை யில்லதோ ரடிமைபூண் டேனுக்கே.

தலம் : மதுரை
பண் : எந்த இராகத்திலும் பாடலாம்
பாடியவர் : திருநாவுக்கரசு நாயனார்

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே.

தலம் : தில்லை
பண் : எந்த இராகத்திலும் பாடலாம்
பாடியவர் : திருநாவுக்கரசு நாயனார்

என்னை யேது மறிந்தில னெம்பிரான்
தன்னை நானுமுன் ஏது மறிந்திலேன்
என்னைத் தன்னடி யானென் றறிதலும்
தன்னை நானும் பிரானென் றறிந்தெனே.

தலம் : திருவேட்களம் ( திருக்குறுந்தொகை)
பண் : எந்த இராகத்திலும் பாடலாம்
பாடியவர் : திருநாவுக்கரசு நாயனார்

துன்ப மில்லைத் துயரில்லை யாமினி
நம்ப னாகிய நன்மணி கண்டனார்
என்பொ னாருறை வேட்கள நன்னகர்
இன்பன் சேவடி யேத்தி யிருப்பதே.

தலம் : திருமருகல் - திருக்குறுந்தொகை
பண் : எந்த இராகத்திலும் பாடலாம்
பாடியவர் : திருநாவுக்கரசு நாயனார்

பெருக லாந்தவம் பேதைமை தீரலாம்
திருக லாகிய சிந்தை திருத்தலாம்
பருக லாம்பர மாயதோ ரானந்தம்
மருக லானடி வாழ்த்தி வணங்கவே.

தலம் : பொது
பண் : எந்த இராகத்திலும் பாடலாம்.
பாடியவர் : திருநாவுக்கரசு நாயனார்

தெள்ளத் தேறித் தெளிந்துதித் திப்பதோர்
உள்ளத் தேற லமுத வொளிவெளி
கள்ளத் தேன்னடி யேன்கவ லைக்கடல்
வெள்ளத் தேனுக்கெவ் வாறு விளைந்ததே.

தலம் : திருவான்மியூர்
பண் : எந்த இராகத்திலும் பாடலாம்
பாடியவர் : திருநாவுக்கரசு நாயனார்

விண்ட மாமலர் கொண்டு விரைந்துநீர்
அண்ட நாயகன் தன்னடி சூழ்மின்கள்
பண்டு நிர்செய்த பாவம் பறைந்திடும்
வண்டு சேர்பொழில் வான்மியூ ரீசனே.

தலம் : திருப்பாண்டிக் கொடுமுடி
பண் : எந்த இராகத்திலும் பாடலாம்
பாடியவர் : திருநாவுக்கரசு நாயனார்

பிரமன் மாலறி யாத பெருமையன்
தரும மாகிய தத்துவ னெம்பிரான்
பரம னாருறை பாண்டிக் கொடுமுடி
கரும மாகத் தொழுமட நெஞ்சமே.

தலம் : திருஅன்பிலாந்துறை
பண் : எந்த இராகத்திலும் பாடலாம்
பாடியவர் : திருநாவுக்கரசு நாயனார்

அன்பின் ஆனஞ்ச மைந்துட னாடிய
என்பின் ஆனை யுரித்துக் களைந்தவன்
அன்பி லானையம் மானையள் ளூறிய
அன்பி னால்நினைந் தாரறிந் தார்களே.

தலம் : திருஅன்பிலாந்துறை
பண் : எந்த இராகத்திலும் பாடலாம்
பாடியவர் : திருநாவுக்கரசு நாயனார்

இலங்கை வேந்த னிருபது தோளிற்று
மலங்க மாமலை மேல்விரல் வைத்தவன்
அலங்க லெம்பிரா னன்பிலா லந்துறை
வலங்கொள் வாரைவா னோர்வலங் கொள்வரே.

தலம் : திருஎறும்பியூர்
பண் : எந்த இராகத்திலும் பாடலாம்
பாடியவர் : திருநாவுக்கரசு நாயனார்

இன்ப மும்பிறப் பும்மிறப் பின்னோடு
துன்ப மும்முட னேவைத்த சோதியான்
அன்ப னேயர னேயென் றரற்றுவார்க்
கின்ப னாகு மெறும்பியூ ரீசனே.

# ஆறாந் திருமுறை

*திருச்சிற்றம்பலம்*

தலம் : கோயில்
பண் : அரிகாம்போதி ( குறிஞ்சிப் பண்)
பாடியவர் : திருநாவுக்கரசு நாயனார்

அரியானை அந்தணர்தம் சிந்தை யானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கள்தங் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

தலம் : திருக்காளத்தி - திருத்தாண்டகம்
பண் : அரிகாம்போதி
பாடியவர் : திருநாவுக்கரசு நாயனார்

மனத்தகத்தான் தலைமேலான் வாக்கி னுள்ளான்
வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தஞ் சிரத்தின் மேலான்
ஏழண்டத் தப்பாலான் இப்பாற் செம்பொன்
புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதி னுள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றி னுள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத் துச்சி யுள்ளான்
காளத்தி யானவனென் கண்ணு ளானே.

தலம் : திருவாலவாய் - திருத்தாண்டகம்
பண் : அரிகாம்போதி
பாடியவர் : திருநாவுக்கரசு நாயனார்

வாயானை மனத்தானை மனத்துள் நின்ற
கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் தன்னைத்
தூயானைத் தூவெள்ளை யேற்றான் தன்னைச்
சுடர்த்திங்கட் சடையானைத் தொடர்ந்து நின்றென்

தாயானைத் தவமாய தன்மை யானைத்
தலையாய தேவாதி தேவர்க் கென்றும்
சேயானைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே.

தலம் : திருவையாறு - திருத்தாண்டகம்
பண் : அரிகாம்போதி
பாடியவர் : திருநாவுக்கரசு நாயனார்

ஓசை யொலியெலா மானாய் நீயே
உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலா மானாய் நீயே
மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிதும் இனியாய் நீயே
பிரானாய் அடியென்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலா மானாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ.

தலம் : திருவையாறு - திருத்தாண்டகம்
பண் : அரிகாம்போதி
பாடியவர் : திருநாவுக்கரசு நாயனார்

எல்லா வுலகமு மானாய் நீயே
யேகம்பம் மேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை யறிவாய் நீயே
ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைக ளறுப்பாய் நீயே
புகழ்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வந் தருவாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ.

தலம் : திருப்புள்ளிருக்குவேளூர்- திருத்தாண்டகம்
பண் : அரிகாம்போதி
பாடியவர் : திருநாவுக்கரசு நாயனார்

பத்திமையாற் பணிந்தடியேன் தன்னைப் பன்னாள்
பாமாலை பாடப் பயில்வித் தானை

எத்தேவும் ஏத்தும் இறைவன் தன்னை
எம்மானை என்னுள்ளத் துள்ளே யூறும்
அத்தேனை அமுதத்தை ஆவின் பாலை
அண்ணிக்குந் தீங்கரும்பை அரனை ஆதிப்
புத்தேளைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றாநள் போக்கி னேனே.

தலம் : திருஆவடுதுறை - திருத்தாண்டகம்
பண் : அரிகாம்போதி
பாடியவர் : திருநாவுக்கரசு நாயனார்

திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதி மிக்க
உருவேஎன் உறவேஎன் ஊனே ஊனின்
உள்ளமே உள்ளத்தி னுள்ளே நின்ற
கருவேயென் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினைநோய் அடையா வண்ணம்
ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே.

தலம் : திருவாரூர்- திருத்தாண்டகம்
பண் : அரிகாம்போதி
பாடியவர் : திருநாவுக்கரசு நாயனார்

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதியென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே.

தலம் : பலவகைத் - திருத்தாண்டகம்
பண் : அரிகாம்போதி
பாடியவர் : திருநாவுக்கரசு நாயனார்

தந்தையார் தாயா ருடன் பிறந்தார்
தாரமார் புத்திரரார் தாந்தா மாரே
வந்தவா றெங்ஙனே போமா றேதோ
மாயமா மிதற்கேதும் மகிழ வேண்டா
சிந்தையீ ருமக்கொன்று சொல்லக் கேண்மின் திகழ்மதியும்
வாளரவுந் திளைக்குஞ் சென்னி
எந்தையார் திருநாமம் நமச்சி வாய
என்றெழுவார்க் கிருவிசும்பி லிருக்க லாமே.

தலம் : திருக்கழிப்பாலை
பண் : அரிகாம்போதி
பாடியவர் : திருநாவுக்கரசு நாயனார்

விண்ணானாய் விண்ணவர்கள் விரும்பி வந்து
வேதத்தாய் கீதத்தாய் விரவி யெங்கும்
எண்ணானாய் எழுத்தானாய் கடலேழானாய்
இறையானா யெம்மிறையே யென்று நிற்கும்
கண்ணானாய் காரானாய் பாரு மானாய்
கழிப்பாலை யுள்ளுறையுங் கபாலப்பனார்
மண்ணாய மாயக் குரம்பை நீங்க
வழிவைத்தார்க் கவ்வழியே போதும் நாமே.

தலம் : பொது
பண் : அரிகாம்போதி
பாடியவர் : திருநாவுக்கரசு நாயனார்

அப்பன்நீ அம்மைநீ ஐய னும்நீ
அன்புடைய மாமனும் மாமி யும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொரு ளும்நீ
ஒருகுலமுஞ் சுற்றமம் ஒரு ரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவுந் தோற்று வாய்நீ
துணையாயென் நெஞ்சந் துறப்பிப் பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத் தும்நீ
யிறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே.

தலம் : திருஆரூர்
பண் : திருக்கழிப்பாலை
பாடியவர் : திருநாவுக்கரசு நாயனார்

பற்றிநின்ற பாவங்கள் பாற்ற வேண்டில்
பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டில்
சுற்றிநின்ற சூழ்வினைகள் வீழ்க்க வேண்டில்
சொல்லுகேன் கேள்நெஞ்சே துஞ்சா வண்ணம்
உற்றவரும் உறுதுணையும் நியே யென்றும்
உன்னையல்லால் ஒருதெய்வம் உள்கே னென்றும்
புற்றரவக் கச்சார்த்த புனிதா வென்றும்
பொழிலாரூ ராவென்றே போற்றா நில்லே.

# ஏழாந் திருமுறை

*திருச்சிற்றம்பலம்*

தலம் : திருவெண்ணெய் நல்லூர்
பண் : இந்தளம்
பாடியவர் : சுந்தரர்

பித்தாபிறை சூடிபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
அத்தாவுனக் காளாய் இனி அல்லேனென லாமே.

தலம் : திருமழபாடி
பண் : நட்டராகம்
பாடியவர் : சுந்தரர்

பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே யுன்னையல்லா லினியாரை நினைக்கேனே.

தலம் : திருத்தொண்டத்தொகை
பண் : கொல்லிக் கௌவாணம்
பாடியவர் : சுந்தரர்

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

தலம் : திருப்பாண்டிக்கொடுமுடி
பண் : பழம்பஞ்சுரம்
பாடியவர் : சுந்தரர்

மற்றுப்பற்றெனக் கின்றிநின்திருப் பாதமேமனம் பாவித்தேன்
பெற்றலும்பிறந் தேன்இனிப்பிற வாததன்மைவந் தெய்தினேன்
கற்றவர்தொழு தேத்துஞ்சீர்க்கறை யூரிற்பாண்டிக் கொடுமுடி
நற்றவாவுனை நான்மறக்கினுஞ் சொல்லும்நா நமச்சிவாயவே.

தலம் : திருக்கேதீச்சரம்
பண் : நட்டபாடை
பாடியவர் : சுந்தரர்

மூவரென இருவரென முக்கண்ணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும்பொழில் மாதோட்டநன் னகரில்
பாவம்வினை யறுப்பார்பயில் பாலாவியின் கரைமேல்
தேவன்னெனை யாள்வான்திருக் கேதீச்சரத் தானே.

தலம் : திருநொடித்தான் மலை
பண் : பஞ்சமம்
பாடியவர் : சுந்தரர்

மந்திர மொன்றறியேன் மனைவாழ்க்கை மகிழ்ந்தடியேன்
சுந்தர வேடங்களால் துரிசேசெயுந் தொண்டனெனை
அந்தர மால்விசும்பில் அழகானை யருள்புரிந்த
துந்தர மோநெஞ்சமே நொடித்தான்மலை யுத்தமனே.

தலம் : திருகோளிலி
பண் : நட்டராகம்
பாடியவர் : சுந்தரர்

நீள நினைந்தடியேன் உமைநித்தலுங் கைதொழுவேன்
வாளன கண்மடவாள் அவள்வாடி வருந்தாமே
கோளிலி யெம்பெருமான் குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
ஆளிலை யெம்பெருமா னவையட்டித் தரப்பணியே.

தலம் : திருத்துறையூர்
பண் : தக்கராகம்
பாடியவர் : சுந்தரர்

மலையார் அருவித் திரள்மா மணியுந்திக்
குலையாரக் கொணர்ந்தெற்றி யோர் பெண்ணை வடபால்
கலையா ரல்குற் கன்னியராடுந் துறையூர்த்
தலைவா உனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே.

தலம் : திருவேகம்பம்
பண் : தக்கேசி
பாடியவர் : சுந்தரர்

ஆலந் தான்உகந் தமுதுசெய் தானை
ஆதி யைஅம ரர்தொழு தேத்துஞ்
சீலந் தான்பெரி தும்முடை யானைச்
சிந்திப் பாரவர் சிந்தையு ளானை
ஏல வார்குழ லாளுமை நங்கை
யென்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பனெம் மானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே.

தலம் : திருநொடித்தான்மலை
பண் : பஞ்சமம்
பாடியவர் : சுந்தரர்

மண்ணுல கிற்பிறந்து நும்மைவாழ்த்தும் வழியடியார்
பொன்னுல கம்பெறுதல் தொண்டனேன்இன்று கண்டொழிந்தேன்
விண்ணுல கத்தவர்கள் விரும்பவெள்ளை யானையின்மேல்
என்னுடல் காட்டுவித்தான் நொடித்தான்மலை யுத்தமனே.

தலம் : திருநொடித்தான்மலை
பண் : பஞ்சமம்
பாடியவர் : சுந்தரர்

நிலைகெட விண் அதிர நிலமெங்கும் அதிர்ந்தசைய
மலையிடை யானையேறி வழியேவரு வேனெதிரே
அலைகட லாலரையன் அலர்கொண்டுமுன் வந்திறைஞ்ச
உலையணை யாதவண்ணம் நொடித்தான்மலை யுத்தமனே.

# எட்டாம் திருமுறை

*திருச்சிற்றம்பலம்*

*மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய*

# சிவபுராணம்

*திருவாசகச் சிறப்பு*

*தொல்லை யிரும்பிறவிச் சூழும் தளைநீக்கி*
*அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே –எல்லை*
*மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்*
*திருவா சகம் என்னுந் தேன்.*

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள் மகிழும் கோன் கழல்கள் வெல்க
சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசன்அடி போற்றி எந்தை அடிபோற்றி
தேசன்அடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன்அடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன்அடி போற்றி
ஆராத இன்பம் அருளும்மலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அரு ளாலே அவன்தாள் வணங்கிச்

சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓயஉரைப் பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார்கழல் இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழும் ஆறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறத்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானன் ஆம் விமலா
பொய்ஆயின எல்லாம் போய்அகல வந்தருளி
மெஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்றமறை யோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தால் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த

மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்துஎங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பதுவாயிற் குடிலை
மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துஉள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசம்ஆம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதேஅளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்குஅரிய நோக்கே நுணுக்குஅரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றுஇன்ப வெள்ளமே அத்தா மிக்காய்நின்ற

. தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம் பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனேஒ என்றுஎன்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டுஇங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம்பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லல் பிறவி அறுப்பானே ஒவென்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ மாணிக்கவாசகர் அருளிச் செய்த

# திருவெம்பாவை

திருச்சிற்றம்பலம்

1 ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த் தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதா ரமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனு மாகாள் கிடந்தாளென் னேயென்னே
ஈதே எந்தோழி பரிசேலோ ரெம்பாவாய்.

2. பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ? விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய்.

3. முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தனா னந்தன் அமுதன்என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன்பழ வடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய்.

4. ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்
தெண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய்.

5. மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றோலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய்.

6. மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய்.

7. அன்னே இவையுஞ் சிலவோ பலவமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாவென் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்

என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய்

8. கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய்.

9. முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப்பழம் பொருளே
பின்னைப் புதுமைக்கும் போ்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய்.

10. பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்தன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவன்ஊர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய்.

11. மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய்.

12. ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடுந்
தீர்த்தனற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தனிவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய்.

13. பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

14. காதார் குழையாடப் பைப்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி

ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய்.

15. ஒரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

16. முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்.

17. செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

18. அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகித்
தண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

19. உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்.

20. போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்.

திருச்சிற்றம்பலம்

# திருப்பள்ளியெழுச்சி

திருச்சிற்றம்பலம்

1. போற்றியென் வாழ்முத லாகிய பொருளே!
புலர்ந்தது: பூங்கழற் கிணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே!
ஏற்றுயர் கொடியுடை யாய்எனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே!

2. அருணன்இந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம்நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ, நயனக்
கடிமலர் மலரமற் றண்ணலங் கண்ணாம்
திரள்நிரை அறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே!
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லே! பள்ளி எழுந்தரு ளாயே!

3. கூவின பூங்குயில்; கூவின கோழி
குருகுகள் இயம்பின; இயம்பின சங்கம்;
ஓவின தாரகை யொளிஒளி உதயத்து
ஒருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவ! நற் செறிகழல் தாளிணை காட்டாய்!
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே!
யாவரும் அறிவரி யாயெமக் கெளியாய்!
எம்பெரு மான்! பள்ளி எழுந்தரு ளாயே!

4. இன்னிசை வீணையர், யாழினர், ஒருபால்;
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்;
துன்னிய பிணைமலர்க் கையினர், ஒருபால்;
தொழுகையர், அழுகையர், துவள்கையர் ஒருபால்;
சென்னியில் அஞ்சலி கூப்பினர், ஒருபால்;
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே!
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்! பள்ளி எழுந்தரு ளாயே!

5. பூதங்கள் தோறும்நின் றாயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம் உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா!
சிந்தனைக் கும்அரி யாய்! எங்கள் முன்வந்து
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்! பள்ளி எழுந்தருளாயே!

6. பப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத் தார்அவர் பலரும்
மைமபுறு கண்ணியர்; மானுடத் தியல்பின்
வணங்குகின் றார்அணங் கின்மண வாளா!
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே!
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே!

7. அதுபழச் சுவையென அமுதென அறிதற்கு
அரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு; இவன்அவன்; எனவே
எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்சூழ் திரு உத்தர கோச
மங்கையுள் ளாய்! திருப் பெருந்துறை மன்னா
எதுஎமைப் பணிகொளும் ஆறது கேட்போம்;
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே!

8. முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்;
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்?
பந்தணை விரலியும் நீயும்நின் னடியார்
பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே!
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி,
அந்தண னாவதும் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தே! பள்ளி எழுந்தரு ளாயே!

9. விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளே! உன் தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே!
வண்திருப் பெருந்துறை யாய்! வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே!
கடலமு தே! கரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாய்! உல குக்குயி ரானாய்!
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே!

10. புவனியிற் போய்ப்பிற வாமையின் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மே இந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் னலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்!
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே!

திருச்சிற்றம்பலம்

# திருப்பொற்சுண்ணம்

முத்துநல் தாமம்பூ மாலை தூக்கி
முளைக்குடம் தூபம் நல் தீபம் வைம்மின்
சக்தியும் சோமியும் பார் மகளும்
நாமகளோடுபல் லாண்டி சைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப் பதியுங்
கங்கையும் வந்து கவரி கொண்மின்
அத்தனை யாளனம் மானைப் பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்து நாமே.

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்க வேண்டும்
மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடு மின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நி லாமே
குனிமின் தொழுமினெங் கோனெங் கூத்தன்
தேவியுந் தானும் வந்தெம்மை யானச்
செம் பொன்செய் சுண்ணம் இடித்து நாமே.

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூய பொன் சிந்தி நிதிப ரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி எங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன் அயன் றன்பொருமான்
அழியான் நாதன்நல் வேலன் தாதை
எந்தரம் ஆளுமை யான் கொழுநற்
கேய்ந்த பொற்சுண்ணம் இடித்து நாமே.

காசணி மின்கள் உலக்கை யெல்லாங்
காம்பணி மிண்கள் கறையுரலை
நேசமுடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல் லாம் புகழ்ந் தாடுங் கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடிப்
பாசவினையைப் பறித்து நின்று
பாடிப் பொற் சுண்ணம் இடித்து நாமே.

அறுகெடுப் பாரய னும்மரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்க ளெல்லாம்
நம்மிற்பின் பல்லதெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்த வில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்க ணப்பற்
காடப்பொற் சுண்ணம் இடித்து நாமே.

உலக்கை பலவோச்சு வார்பெரியர்
உலகமெ லாமுரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டு கொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத் தந்த
மலைக்கு மருகனைப் பாடிப் பாடி
மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்து நாமே.

சூடகந் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்ப
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப அர்ப்ப
நாமும் அவர் தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
பாடகம் மெல்லடி ஆர்க்கும் மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்
காடக மாமலை அன்ன கோவுக்
காடப் பொற் சுண்ணம் இடித்து நாமே.

வாட்டடங் கண்மட மங்கை நல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கை பொங்கத்
நோட்டிரு முண்டந் துதைந்தி லங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச் சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங் காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மை இம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப் பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே.

வையகம் எல்லாம் உரல தாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந் துறையான்
செய்ய திருவடி பாடிப் பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கை பற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே.

முத்தணி கொங்கைகள் ஆட ஆட
மொய்குழல் வண்டினம் ஆட ஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆட ஆடச்
செங்கயற் கண்பனி ஆட ஆடப்
பித்தெம் பிரானொடும் ஆட ஆடப்
பிறவி பிறரொடும் ஆட ஆட
அத்தன் கருணையொ டாட ஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே.

மாடு நகைவாள் நிலாவெ றிப்ப
வாய்திறந் தம்பவ ளந்து டிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்ட வாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப் பாடித்
தேடுமின் எம்பெரு மானைத் தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத் தாடி னானுக்
காடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே.

மையமர் கண்டனை வான நாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் றன்னை
ஐயனை ஐயர்பி ரானை நம்மை
அகப்படுத் தாட்கொண் டருமை காட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணினைப் பொற்றொ டித்தோட்
பையர வல்குல் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே.

மின்னிடைச் செந்துவர் வாய்க்க ருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை யாரமு தெங்க ளப்பன்
எம்பெரு மானிம வான்ம கட்டுத்
தன்னுடைக் கேள்வன் மகன்ற கப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண் முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே.

சங்கம் அரற்றச் சிலம்பொ லிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலை யாடச்
செங்கனி வாயித ழுந்து டிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம் பாடிக்
கங்கை இரைப்ப அராவி ரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்க ழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே

ஞானக் கரும்பின் தெளிவைப் பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயி னானைச்
சித்தம் புகுந்துதித் திக்க வல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும் பேற வாழ்த்திப்
பானற் றடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே.

ஆவகை நாமும்வந் தன்பர் தம்மோ
டாட்செயும் வண்ணங்கள் பாடி விண்மேல்
தேவர் கனாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவகம் ஏந்திய வெல் கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்ற கொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப் பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்தும் நாமே.

தேனக மாமலர்க் கொன்றை பாடிச்
சிவபுரம் பாடித் திருச்ச டைமேல்
வானக மாமதிப் பிள்ளை பாடி
மால்விடை பாடி வலக்கை யேந்தும்
ஊனக மாமழுக் சூலம் பாடி
உம்பரும் இம்பரும் உய்யவன்று
போனக மாகநஞ் சுண்டல் பாடி
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே.

அயன் தலை கொண்டு செண் டாடல் பாடி
அருக்கன் எயிறு பறித்தல் பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக்
காலனைக் காலால் உதைத்தல் பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டு கொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடி யாடி
நாதற்குச் சுண்ணம் இடித்தும் நாமே.

வட்ட மலர்க்கொன்றை மாலை பாடி
மத்தமும் பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் றில்லை பாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சை பாடிக்
கங்கணம் பாடிக் கவித்த கைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம் பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்தும் நாமே.

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியு மாயிருள் ஆயினார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயி னார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயிர்னார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயினாருக்
காதியும் அந்தமும் ஆயினாருக்
காடப் பொற் சுண்ணம் இடித்தும் நாமே.

தலம் : தில்லை
பண் : மோகனராகம்
பாடியவர் : மாணிக்கவாசகர்

முக்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பக்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணஞ்
சித்தமலம் அறிவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தன் எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

தலம் : தில்லை
பண் : மோகனராகம்
பாடியவர் : மாணிக்கவாசகர்

ஏழுடை யான் பொழில் எட்டுடையான் புயம் என்னை முன்னாள்
ஊழுடை யான்புலி யூரன்ன பொன்னிவ் வுயர் பொழில்வாய்ச்
சூழுடை யாயத்தை நீக்கும் விதிதுணை யாமனனே
யாழுடை யார்மணங் காணணங் காய்வந் தகப்பட்டதே.

தலம் : திருப்பெருந்துறை
பண் : (திருச்சதகம்) மோகனராகம்
பாடியவர் : மாணிக்கவாசகர்

ஆடுகின்றிலை கூத்துடையான் கழற்கு அன்பிலை என்புருகிப்
பாடுகின்றிலை பதைப்பதும் செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடுகின்றிலை சூட்டுகின்றது மிலை துணியிலி பிணநெஞ்சே
தேடுகின்றிலை தெருவுதோ றலறிலை செய்வதொன்றறியேனே.

தலம் : திருவண்ணாமலை
பண் : மோகனராகம்
பாடியவர் : மாணிக்கவாசகர்

விண்ணாளுந் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ணாளும் மன்னவர்க்கு மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையிற்
கண்ணார் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணா மலையானைப் பாடுதுங்காண் அம்மானாய்

தலம் : கோயில்
பண் : மோகனராகம்
பாடியவர் : மாணிக்கவாசகர்

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலுங் காணேடி
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ

தலம் : திருத்தோணிபுரம்
பண் : மோகனராகம்
பாடியவர் : மாணிக்கவாசகர்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

தலம் : திருத்தோணிபுரம்
பண் : மோகனராகம்
பாடியவர் : மாணிக்கவாசகர்

பால் நினைந்து ஊட்டும் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம் புறந்திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே.

தலம் : திருவண்ணாமலை
பண் : மோகனராகம்
பாடியவர் : மாணிக்கவாசகர்

சோதியாய்த் தோன்று முருவமே யருவா
மொருவனே சொல்லுதற் கரிய
வாதியே நடுவே யந்தமே பந்த
மறுக்குமா னந்தமா கடலே
தீதிலா நன்மைத் திருவருட் குன்றே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாதுநீ போவதோர் வகையெனக் கருளாய்
வந்துநின் இணையடி தந்தே.

தலம் : திருப்பெருந்துறை
பண் : மோகனராகம்
பாடியவர் : மாணிக்கவாசகர்

பாரொடு விண்ணாய்ப் பரந்தஎம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ யருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே

தலம் : திருப்பெருந்துறை
பண் : மோகனராகம்
பாடியவர் : மாணிக்கவாசகர்

சிரிப்பார் களிப்பார் தேனிப்பார் திரண்டு திரண்டுன் திருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார் வெவ்வே றிருந்துன் திருநாமம்
தரிப்பார் பொன்னம் பலத்தாடும் தலைவா என்பார் அவர் முன்னே
நரிப்பாய் நாயேன் இருப்பேனோ நம்பி இனித்தான் நல்காயே.

தலம் : திருப்பெருந்துறை
பண் : மோகனராகம்
பாடியவர் : மாணிக்கவாசகர்

ஏர்தரும் எழுலகேத்த எவ்வுருவுந் தன்னுருவாய்
ஆர்கலிசூழ் தென்னிலங்கை அழகமர் வண்டோதரிக்குப்
பேரருளின்பம் அளித்த பெருந்துறை மேய பிரானைச்
சீரயவா யாற்குயிலே தென்பாண்டி நாடனைக் கூவாய்.

தலம் : திருப்பெருந்துறை
பண் : மோகனராகம்
பாடியவர் : மாணிக்கவாசகர்

வேண்டத்தக்கது அறிவோய் நீ
வேண்டமுழுதும் தருவாய் நீ
வேண்டும் அயன்மாற்கு அரியோய் நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயாது அருள்செய்தாய் யானும்
அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசொன்று உண்டென்னில்
அதுவும் உன்தன் விருப்பன்றோ.

# ஒன்பதாம் திருமுறை

*திருச்சிற்றம்பலம்*

தலம் : **கோயில்**
பண் : **பஞ்சமம்**
பாடியவர் : **சேந்தனார்**

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாளுமை கோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறி தந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

தலம் : **கோயில்**
பண் : **பஞ்சமம்**
பாடியவர் : **சேந்தனார்**

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடி யீசற்காட்
செய்மின் குழாம்புகுந்
தண்டங் கடந்தபொருள் அளவில்லதோர்
ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள்என்றே
பல்லாண்டு கூறுதுமே.

தலம் : **கோயில்**
பண் : **பஞ்சமம்**
பாடியவர் : **சேந்தனார்**

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற் றேன்பெற்ற
தார்பெறு வார் உலகில்
ஊரும் உலகும் கழற உளறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

தலம் : தில்லை
பண் : **பஞ்சமம்**
பாடியவர் : **சேந்தனார்**

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

தலம் : தில்லை
பண் : **பஞ்சமம்**
பாடியவர் : **சேந்தனார்**

சொல்லாண்ட சுருதிப்பொருள்
சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண் டிற்சிதையுஞ்சில
தேவர் சிறுநெறி சேராமே
வில்லாண் டகன கத்திரன்
மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

தலம் : திருவாரூர்
பண் : பஞ்சமம்
பாடியவர் : சேந்தனார்

குழலொழி யாழொலி கூத்தொலி
ஏத்தொலி எங்குங் குழாம் பெருகி
விழவொலி விண்ணளவும் சென்று
விம்மி மிகு திரு வாரூரின்
மழவிடை யாற்கு வழி வழி
யாளாய் மணஞ் செய் குடி பிறந்த
பழ அடியாரொடுங் கூடி
எம்மானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

தலம் : கோயில்
பண் : பஞ்சமம்
பாடியவர் : சேந்தனார்

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

தலம் : கோயில்
பண் : பஞ்சமம்
பாடியவர் : சேந்தனார்

இடர் கெடுத்தென்னை ஆண்டு கொண்டென்னுள்
இருட் பிழம்பற வெறிந் தெழுந்த
சுடர் மணிவிளக்கின் உள்ளொளி விளங்கும்
தூய நற்சோதி யுட் சோதி
அடல் விடைப் பாகா அம்பலக் கூத்தா

அயனொடு மாலறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்து நின்றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.

தலம் : கோயில்
பண் : பஞ்சமம்
பாடியவர்: சேந்தனார்

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக் கண்ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் மற்புதக் கூத்தா
அம்பொன் செய் அம்பலத்தரசே
ஏறணி கொடியெம் ஈசனே யுன்னைத்
தொண்டனே னிசையுமா றிசையே.

தலம் : திருவீழிமிழலை
பண் : பஞ்சமம்
பாடியவர்: சேந்தனார்

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.

தலம் : திருவீழிமிழலை
பண் : பஞ்சமம்
பாடியவர்: சேந்தனார்

எண்ணினல்கோடி சேவடி முடிக
ளெண்ணில்பல் கோடிதிண் டோள்கள்
எண்ணில்பல் கோடி திருவுரு நாம
மேர்கொள்முன் கண்முக மியல்பும்
எண்ணில்பல் கோடி யெல்லைக்கப் பாலாய்
நின்றைஞ்நூற் றந்தண ரேத்தும்
எண்ணில்பல் கோடி குணத்தோர் வீழி
யிவர்நம்மை யாளுடை யாரே.

தலம் : கோயில்
பண் : பஞ்சமம்
பாடியவர்: கருவூர்த்தேவர்

தாயினே ரிரங்குந் தலைவரே என்றும்
தமியனேன் துணைவனே என்றும்
நாயினே னிருந்து புலம்பினா லிரங்கி
நலம்புரி பரமர்தங் கோயில்
வாயினே ரரும்பு மணிமுருக் கலர
வளரிளஞ் சோலைமாந் தளிர்செந்
தீயினே ரரும்பு பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே.
தீயினே ரரும்பு பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே.

# பத்தாம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

தலம் : பூமி - பிரபஞ்சம் - கடவுள்
பண் : சாமவேதம்
பாடியவர் : திருமூலர்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

தலம் : பூமி - பிரபஞ்சம் - கடவுள்
பண் : சாமவேதம்
பாடியவர் : திருமூலர்

மூலனுரை செய்த மூவாயிரந்தமிழ்
மூலனுரை செய்த முந்நூறு மந்திரம்
மூலனுரை செய்த முப்பதுபதேசம்
மூலனுரை செய்த மூன்றும் ஒன்றாமே.

தலம் : பூமி - பிரபஞ்சம் - கடவுள்
பண் : சாமவேதம்
பாடியவர் : திருமூலர்

இணங்கவேண்டா இனியுல கோருடன்
நுணங்கு கல்வியும் நூல்களும் என்செயும்
வணங்க வேண்டா வடிவை யறிந்தபின்
பிணங்க வேண்டா பிதற்றை யொழியுமே.

தலம் : பூமி - பிரபஞ்சம் - கடவுள்
பண் : சாமவேதம்
பாடியவர் : திருமூலர்

மேரு நடுநாடி மிக்கிடை பிங்கலை
கூருமில் வானின் இலங்கைக் குறியுறுஞ்
சாருந் திலைவனத் தண்மா மலயத்தூ
டேறுஞ் சுழுமுனை இனவசிவ பூமியே.

தலம் : பூமி - பிரபஞ்சம் - கடவுள்
பண் : சாமவேதம்
பாடியவர் : திருமூலர்

சிவசிவ என்கிலர் தீவினையாளர்
சிவசிவ என்றிடத் தீவினைமாளுஞ்
சிவசிவ என்றிடத் தேவருமாவர்
சிவசிவ என்னச் சிவகதிதானே.

தலம் : பூமி - பிரபஞ்சம் - கடவுள்
பண் : சாமவேதம்
பாடியவர் : திருமூலர்

தேனுக்குள் இன்பஞ் சிவப்போ கறுப்போ
வானுக்குள் ஈசனைத் தேடு மதியிலீர்
தேனுக்குள் இன்பஞ் செறிந்தாற்போல்
ஊனுக்குள் ஈசன் ஒளிந்திருந்தானே.

தலம் : பூமி - பிரபஞ்சம் - கடவுள்
பண் : சாமவேதம்
பாடியவர் : திருமூலர்

யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரை தானே.

தலம் : பூமி - பிரபஞ்சம் - கடவுள்
பண் : சாமவேதம்
பாடியவர் : திருமூலர்

இடைபிங் கலையிம வானோ டிலங்கை
நடுநின்ற மேரு நடுவாஞ் சுழுனை
கடவுந் திலைவனங் கைகண்ட மூலம்
படர்வொன்றி யென்னும் பரமாம் பரமே.

தலம் : பூமி - பிரபஞ்சம் - கடவுள்
பண் : சாமவேதம்
பாடியவர் : திருமூலர்

அவனை ஒழிய அமரரும் இல்லை
அவனன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவனன்றி மூவரால் ஆவதொன் றில்லை
அவனன்றி ஊர்புகு மாறறி யேனே.

தலம் : பூமி - பிரபஞ்சம் - கடவுள்
பண் : சாமவேதம்
பாடியவர் : திருமூலர்

அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே.

தலம் : பூமி - பிரபஞ்சம் - கடவுள்
பண் : சாமவேதம்
பாடியவர் : திருமூலர்

பாரில்லை நீரில்லை பங்கயம் ஒன்றுண்டு
தாரில்லை வேரில்லை தாமரை பூத்தது
ஊரில்லைக் காணும் ஒளியது ஒன்றுண்டு
கீழில்லை மேலில்லைக் கேள்வியிற் பூவே.

தலம் : பூமி - பிரபஞ்சம் - கடவுள்
பண் : சாமவேதம்
பாடியவர் : திருமூலர்

அரகர என்ன அரியதொன்றில்லை
அரகர என்ன அறிகிலர் மாந்தர்
அரகர என்ன அமரரும் ஆவர்
அரகர என்ன அறும் பிறப்பன்றே.

# பதினோராம் திருமுறை

*திருச்சிற்றம்பலம்*

தலம் : கோயில்
பண் : பழம் பஞ்சுரம்
பாடியவர் : காரைக்காலம்மையார்

ஈசன் அவன் அல்லா தில்லை என நினைந்து
கூசி மனத்தகத்துக் கொண்டிருந்து – பேசி
மறவாது வாழ்வோரை மண்ணுலகத் தென்றும்
பிறவாமைக் காக்கும் பிரான்

தலம் : கோயில்
பண் : பழம் பஞ்சுரம்
பாடியவர் : காரைக்காலம்மையார்

சங்கரனைத் தாழ்ந்த சடையானை அச்சடைமேற்
பொங்கரவம் வைத்துகந்த புண்ணியனை– அங்கொருநாள்
ஆவாவென் றழாமைக் காப்பானை எப்பொழுதும்
ஓவாது நெஞ்சே உரை.

தலம் : கோயில்
பண் : பழம் பஞ்சுரம்
பாடியவர் : காரைக்காலம்மையார்

ஒன்றே நினைத்திருந்தேன் ஒன்றே துணிந்தொழிந்தேன்
ஒன்றையென் உள்ளத்தின் உள்ளடைத்தேன் – ஒன்றேகாண்
கங்கையான் திங்கட் கதிர்முடியான் பொங்கொளிசேர்
அங்கையாற் காளாம் அது.

தலம் : கோயில்
பண் : பழம் பஞ்சுரம்
பாடியவர் : சேரமான் பெருமாள் நாயனார்

பொன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
மேனிபொலிந்திலங்கும்
மின்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
வீழ்சடை வெள்ளிக்குன்றம்
தன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
மால்விடை தன்னைக்கண்ட
என்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
ஆகிய ஈசனுக்கே

தலம் : கோயில்
பண் : பழம் பஞ்சுரம்
பாடியவர் : ஔவையார்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான் – விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

தலம் : கோயில்
பண் : பழம் பஞ்சுரம்
பாடியவர் : சேரமான் பெருமான் நாயனார்

மனமாய நோய்செய்தான் வண்கொன்றைத் தாரான்
மனமாய உள்ளார வாரான் – மனமாயப்
பொன்மாலை சேரப் புனைந்தான் புனைதருப்பை
பொன்மாலை சேர்சடையான் போந்து.

தலம் : கோயில்
பண் : பழம் பஞ்சுரம்
பாடியவர் : சேரமான் பெருமான் நாயனார்

அந்தி மதிமுகிழான் அந்தியஞ் செந்நிறத்தான்
அந்தியே போலும் அவில்சடையான் – அந்தியில்
தூங்கிருள்சேர் மாமமே போலும் சுருநீருற்றான்
வீங்கிருள் சேர் நீல மிடாது.

தலம் : கோயில்
பண் : பழம் பஞ்சுரம்
பாடியவர் : பரண தேவர்

தீயான மேனியனே செம்பளக் குன்றமே
தீயான சேராமற் செய்வானே – தீயான
செம்பொற் புரிசைத் திருவரூ ராய் என்னைச்
செம்பொற் சிவலோகஞ் சேர்.

தலம் : கோயில்
பண் : பழம் பஞ்சுரம்
பாடியவர் : காரைக்காலம்மையார்

தொல்லை வினைவந்து சூழாமுன் தாழாமே
ஒல்லை வணங்கி உமையென்னும் – மெல்லியதோர்
கூற்றானைக் கூற்றுருவங் காய்ந்தானை வாய்ந்திலங்கு
நீற்றானை நெஞ்சே நினை.

தலம் : கோயில்
பண் : பழம் பஞ்சுரம்
பாடியவர் : நக்கீர தேவ நாயனார்

உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின்செல்லேன் – பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்திவாழ் வே.

தலம் : கோயில்
பண் : பழம் பஞ்சுரம்
பாடியவர் : கபில தேவ நாயனார்

திருவாக்கும் செய்கருமம் கை கூட்டும் செஞ் சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை

தலம் : கோயில்

பண் : பழம் பஞ்சுரம்

பாடியவர் : .கபில தேவ நாயனார்

புண்ணியர்கள் செய்தனவும் பொய்நெறிகட் சாராமே
எண்ணியோ ரைந்தும் இசைந்தனவால் – திண்ணிய
கைம்மாலின் ஈருரிவை மூவுருவும் போர்த்து கந்த
அம்மானுக் காட்பட்ட அன்பு.

# பன்னிரண்டாம் திருமுறை

*திருச்சிற்றம்பலம்*

தலம் : பொது
பண் : செந்துருத்தி
பாடியவர் : சேக்கிழார்

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

தலம் : பொது
பண் : செந்துருத்தி
பாடியவர் : சேக்கிழார்

ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள
வளப்பருங் கரணங்க ணான்குஞ்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந்
திருந்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையா னாடுமா னந்த
வெல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துட் டிளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

தலம் : பொது
பண் : செந்துருத்தி
பாடியவர் : சேக்கிழார்

ஆதியாய் நடுவுமாகி அளவிலா அளவுமாகிச்
சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியாவே ஏகமாகிப் பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியாய் நிற்கும் தில்லைப் பொது நடம் போற்றி போற்றி.

தலம் : பொது
பண் : செந்துருத்தி
பாடியவர் : சேக்கிழார்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டுநான் மகிழ்ந்தபாடி
அறவா நீ ஆடும் போதுன் அடியின்கீழ் இருக்கஎன்றார்.

தலம் : பொது
பண் : செந்துருத்தி
பாடியவர் : சேக்கிழார்

கற்பனை கடந்த சோதி கருணையே உருவாமாகி
அற்புதக் கோலம் நீடி அருமறை சிரத்தின் மேலாம்
சிற்பர வியோமமாகும் திருச் சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

தலம் : பொது
பண் : செந்துருத்தி
பாடியவர் : சேக்கிழார்

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்க
பூதபரம்பரை பொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவளவயற்பு கலித்திரு ஞானசம்பந்தர்
பாதமலர்தலைக் கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

தலம் : பொது
பண் : செந்துருத்தி
பாடியவர் : சேக்கிழார்

"தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன்
திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலிதாம் இன்பம் ஆம்" என்று
கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரியக்
கைம்மலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்.

தலம் • : பொது
பண் : செந்துருத்தி
பாடியவர் : சேக்கிழார்

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்றுளார் அடியார் அவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்.

தலம் : பொது
பண் : செந்துருத்தி
பாடியவர் : சேக்கிழார்

வைய நீடுக மாமழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தான்தழைத் தோங்குக
தெய்வவேண்டிரு நீறு சிறக்கவே.

தலம் : பொது
பண் : செந்துருத்தி
பாடியவர் : சேக்கிழார்

நன்மை பேரருள் நெறியே
வந்தணைந்து நல்லூரில்
மன்னுதிருத் தொண்டனார் வணங்கி
மகிழ்ந்து எழும் பொழுதில்
உன்னுடைய நினைப்பதனை
முடிக்கின்றோம் என்றவர் தஞ்
சென்னிமிசைப் பாதமலர்
சூட்டினான் சிவபெருமான்.

தலம் : பொது
பண் : செந்துருத்தி
பாடியவர் : சேக்கிழார்

சோதிமுத்தின் சிவிகை சூழ்வந்துபார்
மீதுதாழ்ந்து வெண்ணீற்றொளி போற்றிநின்
றாதியாரருளாதலில் அஞ்செழுத்
தோதி ஏறினார் உய்ய உலகெலாம்.

# ஸ்ரீ ஆஞ்சநேயர் போற்றி



| | | |
|---|---|---|
| ஓம் | அசனை மைந்தா | போற்றி |
| ஓம் | அஞ்சனை வென்றாய் | போற்றி |
| ஓம் | சொல்லின் செல்வா | போற்றி |
| ஓம் | வில்லின் கணையே | போற்றி |
| ஓம் | தோத்திரப் பிரியா | போற்றி |
| ஓம் | சாத்திரத் தலைவா | போற்றி |
| ஓம் | சத்திய விரதா | போற்றி |
| ஓம் | வித்தகு வீரா | போற்றி |
| ஓம் | ஏழிசை நிதியே | போற்றி |
| ஓம் | ஆழியைக் கடந்தாய் | போற்றி |
| ஓம் | தன்பலம் அறியாய் | போற்றி |
| ஓம் | என்னகம் நிறைவாய் | போற்றி |
| ஓம் | பிரமச் சரியா | போற்றி |
| ஓம் | பரமன் சொரூபா | போற்றி |
| ஓம் | பேரறி வாளா | போற்றி |
| ஓம் | சீருப காரா | போற்றி |
| ஓம் | அச்சுதன் துணைவா | போற்றி |
| ஓம் | வச்சிர வடிவா | போற்றி |
| ஓம் | பிங்கள வர்ணா | போற்றி |
| ஓம் | மங்கள ரூபா | போற்றி |

ஓம் புஜபல தீரா . போற்றி
ஓம் விஜயன் துணைவா போற்றி
ஓம் சிரஞ்சீ வியனே போற்றி
ஓம் பரஞ்சுட ரொளியே போற்றி
ஓம் அருணனை வென்றாய் போற்றி
ஓம் தருண மழையே போற்றி
ஓம் வானரச் செல்வா போற்றி
ஓம் தீனரட் சகனே போற்றி
ஓம் வாயுபுத் திரனே போற்றி
ஓம் தூயரத் தினமே போற்றி
ஓம் இலக்குவன் உயிரே போற்றி
ஓம் கலக்கமும் தீர்ப்பாய் போற்றி
ஓம் ஐம்புலன் வென்றாய் போற்றி
ஓம் எம்குல தேவா போற்றி
ஓம் இராம தூதா போற்றி
ஓம் நாமப் பிரியா போற்றி
ஓம் மந்தமா ருதமே போற்றி
ஓம் சிந்தனைச் செல்வா போற்றி
ஓம் சஞ்சீவி ராயா போற்றி
ஓம் பஞ்ச முகனே போற்றி
ஓம் விசுவ ரூபா போற்றி
ஓம் விசுவேஸ் வரனே போற்றி
ஓம் ஆஞ்ச நேயா போற்றி
ஓம் வாஞ்சை யானாய் போற்றி
ஓம் சுக்ரீவ சகனே போற்றி
ஓம் துக்கம் களைவாய் போற்றி
ஓம் யோகனு மானே போற்றி
ஓம் ஆகமும் அறிந்தாய் போற்றி
ஓம் லங்கநா சனனே போற்றி

ஓம் தங்கமே னியனே போற்றி
ஓம் புதிரானவனே போற்றி
ஓம் கதியானவனே போற்றி
ஓம் ஆற்றல் வடிவா போற்றி
ஓம் போற்றல் உடையா போற்றி
ஓம் அறிவாலயனே போற்றி
ஓம் நெறிகற்றவனே போற்றி
ஓம் ஈரநெஞ்சுடையாய் போற்றி
ஓம் நாரணன் துணையே போற்றி
ஓம் கவிக்குலத் திலகா போற்றி
ஓம் பவித்திர மானாய் போற்றி
ஓம் பிங்காட் சுகனே போற்றி
ஓம் சங்கடம் தீர்ப்பாய் போற்றி
ஓம் விண்ணில் பறந்தாய் போற்றி
ஓம் கண்ணில் நிறைந்தாய் போற்றி
ஓம் கேஸரி மகனே போற்றி
ஓம் பாசம் உடையாய் போற்றி
ஓம் வீடணன் துணையே போற்றி
ஓம் நாடரும் நலனே போற்றி
ஓம் வாலுடை வரதா போற்றி
ஓம் சீலமும் உடையாய் போற்றி
ஓம் மாபெரும் தொண்டா போற்றி
ஓம் தாபம் தொலைப்பாய் போற்றி
ஓம் இராமேஷ் டகனே போற்றி
ஓம் க்ஷேம மளிப்பாய் போற்றி
ஓம் அமிதவிக் ரமனே போற்றி
ஓம் எமையணு கிடுவாய் போற்றி
ஓம் அனிலாத் மஜனே போற்றி
ஓம் நினைவில் உறைவாய் போற்றி

| | | |
|---|---|---|
| ஓம் | ருத்திரப்பிரியா | போற்றி |
| ஓம் | முத்திரைப் பொன்னே | போற்றி |
| ஓம் | பிலவகேஸ் வரனே | போற்றி |
| ஓம் | கலைகற் றவனே | போற்றி |
| ஓம் | அட்சயத் துவேசா | போற்றி |
| ஓம் | சட்டென வருவாய் | போற்றி |
| ஓம் | கனிகள் உண்பாய் | போற்றி |
| ஓம் | நனிசுகம் தருவாய் | போற்றி |
| ஓம் | மஹாப விஞ்டா | போற்றி |
| ஓம் | சகாய தேவா | போற்றி |
| ஓம் | அஹிமஹி மர்த்தனா | போற்றி |
| ஓம் | சசிவோத் தமனே | போற்றி |
| ஓம் | வராக முகனே | போற்றி |
| ஓம் | சரீர சுகனே | போற்றி |
| ஓம் | கருடமுகனே | போற்றி |
| ஓம் | கடி விஷம் தீர்ப்பாய் | போற்றி |
| ஓம் | ஹயக்கி ரீவா | போற்றி |
| ஓம் | மயக்கம் தீர்ப்பாய் | போற்றி |
| ஓம் | நரசிம் மமுகா | போற்றி |
| ஓம் | நடுநிலை யருள்வாய் | போற்றி |
| ஓம் | வீரனு மானே | போற்றி |
| ஓம் | தீரம அருள்வாய் | போற்றி |
| ஓம் | தவப்பிர காசா | போற்றி |
| ஓம் | சிவப்பிர காசா | போற்றி |
| ஓம் | உருவில் உயிரே | போற்றி |
| ஓம் | உயிரின் உணர்வே | போற்றி |
| ஓம் | செல்வம் தருவாய் | போற்றி |
| ஓம் | அல்லல் ஒழிப்பாய் | போற்றி |
| ஓம் | விரைவில் வருவாய் | போற்றி |
| ஓம் | நிறைவைத் தருவாய் | போற்றி |

# மங்களம்

ஓம் ஸர்வேஸாம் ஸ்வஸ்திர் பவது
ஸர்வேஷாம் சாந்திர் பவது
ஸர்வேஷாம் பூர்ணம் பவது
ஸர்வேஷாம் மங்களம் பவது
ஸர்வே பவந்து ஸுகினக:
ஸர்வே ஸந்து நிராமயா
ஸர்வே பத்ராணி பச்யந்து
மாகஸ்சித் துக்கபாத் பவேத்


ஓம் சாந்தி சாந்தி சாந்தி

ஓம் அஸதோமா ஸத்கமய
தமசோமா ஜோதிர் கமய
ம்ருத்யோமா அம்ருதம் கமய

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

ஓம் பூர்ணமத பூர்ணமிதம்
பூர்ணாத் பூர்ண முதச்யதே!
பூர்ணஸ்ய பூர்ணமாதாய
பூர்ணமேவாய சிஷ்யதே!!

ஓம் சாந்தி சாந்தி சாந்தி



# அன்பு வணக்கம்

அருட்பெருங்கருணை தனிப்பெரும் ஜோதியிற் கலந்த எம் அன்புச் செல்வம் பொறியியலாளர் தாமோதரம்பிள்ளை கிருபாகரன் அவர்களின் வழிகாட்டும், வழிபாட்டு மலர் மலர்கிறது.

இப்புனித தெய்வீக மலரில் அகிலமெங்கிருந்தும் அனைத்து வழிகளிலும் நிகழ்விலும், நினைவிலும் எம்மை அணைத்துநின்ற அத்தனை அன்பு நெஞ்சங்களையும் வணங்குகிறோம்.

அன்பே சிவமாக அதுவே நிறைவாக இனிதே பூஜிப்போம்.

அன்புடன்
வி. எஸ். தாமோதரம்பிள்ளை குடும்பத்தார்

"பழமுதிர்ச்சோலை"
கருணைவாய் மேற்கு, கரவெட்டி
22-01-2004



PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO 13. TEL: 2330195.